
# ஊதிய விளக்கு




லோகநாதன்

VPW

நேர்தியான வேலைக்கு
விவேகா அச்சகத்திற்கு
விஜயம் செய்யுங்கள்.

விவேகா அச்சகம்,
இல. 79, மொஸ்க் லேன்,
கொழும்பு-12.

"வீரகேசரி"
வாரப்பதிப்பு
ஆசிரியர்
லோகநாதன்
எழுதிய

# ஊதியவிளக்கு

✳ முதலிய கதைகள் ✳

நந்திவெளியீடு

109, 2/5, டாம் வீதி,
(Dam Street)
கொழும்பு.

முதற்
பதிப்பு,
நவம்பர்,
1954.

சகல உரிமைகளும்
ஆசிரியருக்கே.

## பொருள் அடக்கம்.

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | சப்பியமாங்கொட்டை ... ... | 1 |
| 2. | நழுவி விழுவானேன்? ... ... | 24 |
| 3. | ஊதிய விளக்கு ... ... ... | 45 |
| 4. | கலா-நிஷ்டை ... ... ... | 85 |
| 5. | மனோலீலை ... ... ... | 106 |
| 6. | காதல்-மலர் ... ... ... | 129 |

விலை
ரூ
1. 8. 0

# சப்பிய மாங்கொட்டை

நின்றதும் விளக்கின் திரி கக்கும் ஒரு வகையான சாம்பல் ரகமான புகையின் நிறத்தை ஞாபகமூட்டுவதுபோல அந்திப் பொழுது வந்துகொண்டிருக்கிறது.

அது, மறைந்துபோகும் மாலை நேரத்திற்கு விடை அளிக்கிறது; அதே சமயத்தில் தன்னைத் துரத்தவே இரவு வருகிறதென்பதைச் சிறிதும் உணராமல் இரவை வரவேற்கிறது. ஆம்! 'அற்ப சந்தோஷி' அந்திப்பொழுது!

'வெளிச்சத்திற்கும் இருட்டிற்கும் இடையே ஒரு மங்கல் உண்டு; ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் இடையே பழக்காத சிந்தனையால் உண்டாகும் ஒரு குழப்பமான—சித்த விகாரமான ஒரு நிலைமை ஏற்படுவதுண்டு' என்பதை இந்த அந்திவேளை ஞாபகப்படுத்துகிறதோ? இப்படி ஒரு தோற்றம்!

இவ்விதம் சித்தனைக்கு 'உணவு' கொடுத்துக்கொண்டே அந்தச் சந்தியைக்கடந்து தெற்கே திரும்பியவன் சட்டென்று வழக்கப்படி பாதசாரிக்களுக்குரிய பாதையின் மீது ஏறி நடக்கலானேன்.

அஸ்தமன சூரியனைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பமே கிடைக்காத முறையில் காலையிலிருந்து இருட்டும்வரையில் ஓயாமல் உழைத்து உடல் தேய்ந்த, இரத்தம் சுண்டிய உழைப்பின் 'அவதாரங்கள்'—உழைப்பாளிகள், முதலாளித்துவ முறைக்கு 'உயிர்ப்பசை'யை அளிக்கும் தினசரி கூலிவாங்கும் பாட்டாளிகள் ஆகிய பலர் தாங்கள் இருக்கும் இடம் நோக்கி போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்தோ! அவர்களின் நிழலாகத் தொடர்ந்து செல்லுகிறான் 'தரித்திரநாராயணன்'! நீ ஏன் அப்பா, இந்த 'வாயில்லாப் பூச்சி'களைக் கஷ்டப்படுத்துகிறாய்!' என்று கேட்டால் 'ஓ! நான் என்ன செய்வேன்? அது அவர்கள் விதி, என்று சட்டென்று பதில் கூறிவிடுகிறான்! ஆம். பொருத்தமான பதில்! தரித்திரத்தை தெய்வப் பீடத்திலேற்றி அதற்குப் பூசை செய்த பிறகு, அதனிடமிருந்து வேறுவிதமான பதிலை எதிர்பார்ப்பதற்கு இடமுண்டா?

அஸ்தமனத்தை அறியாத உழைப்பாளிகளின் வாழ்க்கையும் அஸ்தமிக்கவேண்டியதுதான்! அவர்களைப்பற்றி யார் கவனிக்கிறார்கள், இந்த உலகத்தில்? ஆனால், ஒன்று. இவ்விதம் அஸ்தமித்துப்போன வாழ்க்கைகளால்—அஸ்தமித்துக்கொண்டே வரும் வாழ்க்கைகளால் இந்த உலகத்தின் பழைய 'திருகாணி' தேய்ந்துக்கொண்டே வருகிறது!

ஏர் பிடிப்பது ஒரு கை: நூல் நூற்று நெய்வது ஒரு கை; இயந்திர சாலைகளில் இயந்திரத்தைப்போல ஓயாமல் வேலை செய்வது ஒரு கை! ஆனால், அந்தக் 'கைகள்' கொடுத்த பலன்களை அனுபவிக்கப் பிறந்தவை என்று சொல்லிக்கொண்டு சொந்தம் பாராட்டும் 'இரும்புக் கைகள்' நம்மைத் திணற அடித்துவிடுகின்றன! அந்தக் 'கைகளை'ப் பற்றிப் பேசக்கூடாது! அவர்கள் இந்த உலகத்தில் 'கொடுத்து வைத்தவர்கள்'!

துக்கமுத்திரைகளை அந்த ஏங்கிய கண்களாக மாற்றிக்கொண்டு செல்லும் அப்பரம ஏழைத்தொழிலாளிகளின் தோற்றமே இம்மாதிரியான சிந்தனைப் புயல்களைக் கிளப்பிவிட்டது என் உள்ளத்தில். 'காலம் வரும்' என்று பெருமூச்சுடன் மேலே நடந்தேன். கொஞ்ச தூரம் தான் போயிருப்பேன். சட்டென்று நான் திரும்பிப்பார்க்கும்படி நேரிட்டுவிட்டது.

முதலில் "மாத்யா" என்ற சப்தம். நான், யாரையோ யாரோ கூப்பிடுகிறார்கள் என்று நினைத்தேன்.

"துரை" என்ற உச்சரிப்பு.

அப்பொழுதும் நான் திரும்பவில்லை.

ரொம்ப சமீபமாக கிளம்பியது "ஐயா..." என்ற குரல். தரித்திரத்தில் அடிபட்ட குரல் என்பது அதன் சுருதியிலேயே தெரிந்துவிட்டது.

சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தேன்.

பரிதாபமான கோலம். கிழிந்த புடவை. கிழிந்து தொங்கும் ரவிக்கை. எண்ணெய் கண்டறியாத தலைமுடி சிக்குப்பிடித்து விளங்கியது.

சிவப்பான தேகம்; வறுமையின் காரணமாக போஷணையற்றதால் மங்கிப்போயிருந்தது. பால்யத்திலும், யௌவனத்திலும் அவள் நல்ல அழகியாக இருந்திருக்கவேண்டும். அவள் 'மோகினி'யாக இருந்த காலத்தில் எத்தனையோ பேர்கள் மயங்கியிருக்க வேண்டும்! வாழ்க்கையின் ஒரு பாதையில் அவள் ரொம்பவும் 'அடிபட்டவள்' என்று தோன்றியது. "நான் பார்க்காத இன்பமா? ஆனால் இன்று நான் அடையும் துன்பம் அந்தப் பகவானுக்குத்தான் தெரியும்" என்று சொல்லின அவளது கண்கள்! அப்பொழுது நடந்துகொண்டிருக்கும் அந்திப் பொழுதைப்போலவே அந்த நேத்திரங்கள்! ஆண் வர்க்கத்திடமே அவைகளுக்கு அனுதாபம் இருப்பதாகத் தெரியவில்லை; 'பிடிசாபம்' என்று சொல்லுவதுபோல் ஒரு காட்சி! அழகின் ஒளியை அனுபவித்து இப்பொழுது அவ்வொளி இழந்து தவிக்கும் அந்தக் கண்கள் துக்கமும்—துயரமும் தோய்ந்த ஒரு கதையை மறைத்துவைத்துக்கொண்டிருக்கின்றனவோ என்று எனக்குத் தோன்றியது. அதைக் கேட்டு அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஓர் அவா என் நெஞ்சில் உதித்து அவளிடம் அதிகமாக அனுதாபத்தைக் காட்டச்செய்தது.

அவளுக்கு வயது 30-க்கு மேல் 34-க்குள் இருக்கலாம் என்பது என் மதிப்பு. கவலை, கஷ்டம், தரித்திரமாகிய 'இரும்புக் கம்பி'களால் கிழிக்கப்பட்ட 'கோடுகள்' அவள் முகத்தில் ஒரு கொடுமையை உண்டாக்கியிருந்தன. நின்று போகிற விளக்கு 'அடித்து'க் கொள்ளுவது போல அவள் ஆத்மா தவிக்கிறதோ என்ற ஐயம்.

பற்களைக் காட்டிக்கொண்டே இரண்டு கைகளையும் முன்நீட்டினாள். வெற்றிலைப்பாக்கின் காவி அப்பற்களில் நிறையப் படிந்திருந்தது. "உல்லாச முத்தங்களை விற்றவர்கள்" என்று கூறின, அவளின் சோபை இழந்த உதடுகள்.

அவள் மறுபடியும் "ஐயா..." என்று பேசுவதற்கு முன்பு என் சட்டப்பையிலிருந்து 25 சத நாணயத்தை எடுத்து அவளிடம் கொடுத்தேன்.

இருபத்தைந்து சதம் கிடைக்குமென்று அவள் எதிர்பார்க்கவில்லை என்பதை அவள் தன் முகத்தில் படரவிட்ட ஆச்சரிய ரேகைகளின்

மூலம் காட்டினாள். கரங்களைக் குவித்து நமஸ்கரித்தாள். நிலைகுலைந்து விளங்கிய அந்த விழிகளில் நன்றி உணர்ச்சியின் பிரதிபலிப்பு.

அற்பருக்கு வந்த வாழ்வுபோல அந்திப்பொழுது போன இடம் தெரியவில்லை. திடீரென்று இருண்டுவிட்டது. வானம் கார்முகில் சட்டையைப் போட்டுக்கொண்டது. 'ஜிவ் ஜிவ்' என்று காதைப் பிய்த்துக் கொண்டு அடிக்க ஆரம்பித்தது காற்று. 'திடுதிப்' என்று ஆரம்பத்திலேயே அதிவேகமாக மழைபெய்யத் தொடங்கியது.

அவளும் நானும் அவசர அவசரமாக முன்னே ஓடி வந்தோம், ஓர் இடத்தில் ஒதுங்க.

'இதோ இங்கிட்டு ஒதுங்குங்க' என்றாள்.

வழியில் பக்கமாக உள்ள ஒரு வீடு அது. யாரும் குடியில்லாததால் அது பூட்டப்பட்டிருந்தது. அதன் முன்புறம் சார்போடு கூடிய ஒரு தாழ்வாரம். அத்தாழ்வாரத்தின் மேல் விதானத்தைத் தாங்கும் கம்பங்களை ஒட்டி கைப்பிடிச்சுவர்—அச்சுவர்க்கிடையேதான் பாதைக்குரிய படிக்கட்டுகள்.

அந்த வீட்டை ஒட்டி ஒரு மரம். அதன் அருகே முனிஸிபல் சபை மின்சார விளக்கின் ஸ்தம்பம். இவ்விரண்டே கதி என்று உட்கார்ந்திருந்தாள் ஒரு கிழவி. அவள் எதிரே சிறு கம்பிகளால் தடுக்கப்பட்ட மரச்சட்டம். அதன் இடைவெளிகளில் இரண்டாகப் பிளக்கப்பட்ட பச்சைப் பாக்கின் துண்டங்களையும் புகையிலையையும் அணைத்துக் கொண்டிருக்கும் அளவில் பெரிதான இலங்கை வெற்றிலை மடிப்புகள் செருகப்பட்டிருந்தன. அதன் பக்கத்தில் கடலையும், பட்டாணியும் நிறைந்த ஒரு சிறிய வட்டவடிவான மூங்கில் தட்டு. இவைகளை நம்பித்தான் அவள் ஜீவித்து வருகிறாள்.

மழை வந்ததும் அவள் பதறி எழுந்து முதலில் கடலை உள்ள தட்டைத் தூக்கிக்கொண்டு அந்த வீட்டுக்கு ஓடிவந்தாள். "பாட்டி, நீ இங்கிட்டு நில்லு. நானு எடுத்துட்டு வர்ரேன். மழையிலே நனையாதே" என்று சொல்லிக்கொண்டே என்னிடம் யாசகம் வாங்கிய ஸ்திரீ ஓடிப்போய் வெற்றிலைச் சுருள் இருந்த அந்தச் சட்டத்தைத் தூக்கிக்கொண்டுத் திரும்பினாள். 'நல்லவேளே. நீ மவராசியா இருக்

குணும்' என்று கிழவி அவளை ஆசிர்வதித்தாள். பேசிக்கொண்டதி லிருந்து அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்கள் என்றுஎனக்குப்பட்டது.

மழை இப்பொழுது முன்னைவிட பலமாகத் தூறகிறது. அதன் சாரல் நாங்கள் நிற்கும் பக்கம் அடித்தது.

மழை வந்ததும் ஒரு சாதகமாகவே எனக்குத் தோன்றியது. மெதுவாக அவளின் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று தீர்மானித்தேன்.

"பாட்டி, இவங்க ரொம்ப நல்லவங்க..." என்ருள்.

"மூஞ்சியே பாத்தா தெரிஞ்சு விடுதே. ஐயா, கடலே வேணுங் களா?" என்ருள் வியாபாரத்தில் கருத்துடன். "வெத்தலே போடுவீங் களா?' என்று உடனே கேட்டாள் மற்ற ஸ்திரீ.

கடலையையும், வெற்றிலைப் பாக்கையும் வாங்கினேன் கிழவிக் காக. அவைகளை அவர்களிடமும் கொடுத்து உபயோகித்துக்கொள்ள ளும்படி கூறினேன். என்னுடைய சர்வசாதாரணமான செய்கை அவர்களுக்கு மலைப்பை உண்டாக்கியது.

"இந்தப் பாட்டியை உனக்குத் தெரியுமா?" என்று மெதுவாகக் கேட்டேன்.

"இந்த மவராசி இல்லாட்டா நான் செத்த இடத்திலே புல்லு முளைச்சுப் போயிருக்கும். இவங்க வூட்டுலேதான் இப்போ இருக் கேன்" என்ருள் என்னிடம் யாசகம் வாங்கிய ஸ்திரீ.

"ஆமாங்க. இவ எவ்வளோ நல்லா இருந்தாங்க. எல்லாம் தலை விதியுங்க. தலே எழுத்தே மாத்த முடியுதுங்களா? இவ இருந்த இருப்பு என்ன? இப்போ பிச்சை எடுக்கணும்னு இருக்கே. பாவங்க, பாவம்" என்ருள் கிழவி.

"விதியாவது இழவாவதுங்க. இந்த ஆம்புள்ளைங்க இருக்காங் களே, நீங்க கோவிச்சிக்காதேங்க, கொஞ்சங்கூட இரக்கமே இல்லாத

வங்க. என்ன போங்க, அவங்களே பார்த்தாலே என் வயிறு 'கப கப' என்கிறதுங்க......" என்று பேச ஆரம்பித்தாள் அந்த மாது.

"ஓனக்கு புத்திகெட்டுப் போச்சுன்னு சொல்லு. அதே சொல்லாமே ஆம்புள்ளேங்களே திட்டுரேயே" என்றாள் கிழவி.

என் கட்சியை எடுத்துக்கொண்டு பேசுவதாக அவள் திருப்தி அடைந்தாள்.

"ஏது மழை நிற்காதுபோல் இருக்கே" என்றேன் நான்.

"ஆமாங்க, கொஞ்சம் தங்கிட்டு போங்க. மழையிலே நனைஞ்சா ஒடம்புக்கு ஆவாதுங்க" என்றாள் கிழவி. மற்ற ஸ்திரீயும் கிழவி சொல்லை ஆமோதித்தாள்.

இது நல்ல சந்தர்ப்பம் என்று எண்ணி பிச்சை வாங்கிய அந்த ஸ்திரீயை நோக்கி "உனக்கு இந்த ஊரா? தாயார் தகப்பனார் ஒருவருமில்லையா?" என்று கேள்விகளைப் போட்டேன்.

இந்தக் கேள்விகள் அவள் இருதயத்திலிருந்து பாரமிகுந்த பெருமூச்சுகளைப் பிடுங்கிக்கொண்டு வந்தன. இறந்த காலத்தில் அவள் நடித்த கோலாகல சம்பவங்கள், களியாட்டங்கள், இன்ப நிகழ்ச்சிகள் எல்லாம் அவள் முன்தோன்றாமல் தோன்றின போலும்!

அவள் மௌனமாக என்னையே நோக்கினாள். அவளுடைய நயனங்கள் துயரக் கதையைச் சொல்லத் தயாராகிவிட்டன என்று எனக்குத் தோன்றியது. எல்லோராலும் 'தூ' வென்று வெறுக்கப்பட்டு நடுத்தெருவில் ஒழுக்கமற்றவள் என்ற பெயருடன் திரியும் தன்னையும் ஒருவர் பொருட்படுத்தி ஊர், பெயர்களை எல்லாம் கேட்டுவிட்டாரே என்ற எண்ணம் அவளுக்குக் கொஞ்சம் திருப்தியைத் தந்துவிட்டது போலும்!

நான் அவள் கதையைக் கேட்க ரொம்ப ஆவலாக இருப்பதாகக் காட்டிக்கொண்டேன். என் முகக்குறியை அவள் அறிந்து கொண்டாளோ, என்னமோ? திடீரென்று சொன்னாள்: "அது ஒரு பெரிய கதைங்க. வயிற்றெரிச்சல் கதைங்க, அதே ஏன் கேக்குறிங்க?"

பதில் பேசாமல் அவளிடம் நான் அதிகமாக அனுதாபங் காட்டினேன். "வாழ்க்கை என்றால் கஷ்டம், துன்பம், சுகம் எல்லாம் கலந்ததுதான். இதோ பார், இதுபோல மின்னல், இடி, காற்று, மழை வாழ்க்கையிலும் அடிப்பதுண்டு. அது சகஜம்தான்" என்றெல்லாம் நான் அவளுக்குப் புரியும்படி தத்துவம் பேசினேன்.

அவள் அதிகமாகப் படித்தறியாதவள்தான். ஆனால், அனுபவக் கலாசாலையில் படித்துத் தேர்ந்தவள் என்பதை அவள் பேச்சிலிருந்தே கண்டுபிடித்து விடலாம்.

அவள் பேசின தமிழ்ப் பாஷை தமிழ்நாட்டு நடையில் இல்லை; யாழ்ப்பாணத் தமிழ் நடையிலுமில்லை. ஆனால், 'கரைச்சல்' முதலிய புதிய சொற்களைச் சிருஷ்டித்துள்ள கொழும்புத் தமிழ் சாயலுடன் தோட்டக்காட்டுக் கொச்சைத் தமிழின் நடையில் கல பேசினாள். சிற்சில தமிழ்ச் சொற்களை அவள் வெள்ளைக்காரன் பே வும் பிரயோகித்தாள்!

அப் பாஷையின் நடையை மாத்திரம் மாற்றி, அவள் கூறி படியே அவளுடைய கதையை எழுதியிருக்கிறேன்.

தத்துவ பூர்வமான ஒரு பெரிய பீடிகையைப் போட்டுக்கொண்டே அவள் தன் கதையை இவ்விதம் சொல்ல ஆரம்பித்தாள்.

* * *

"இந்தப் பெண்கள் எல்லாம் ரொம்பவும் கெட்டவர்கள். அவர்களை நம்பவே கூடாது. நம்பினால் தெருவில் தவிக்க வேண்டியதுதான். அவர்கள் நெஞ்சாழத்தைக் கண்டுபிடிக்கவே முடியாது. அவர்களுக்கு, வஞ்சகம் அதிகம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள் அல்லவா? இது சுத்த தப்பு என்பதுதான் என் அபிப்பிராயம். சும்மா சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள்; அனுபவித்தே சொல்லுகிறேன்.

உண்மையில் இந்த ஆண்களைத்தான் நம்பக்கூடாதென்று சொல்லலாம். அடேயப்பா! காரியமாகவேண்டுமானால் அவர்கள் காலைப் பிடிக்கவும் தயாராகிவிடுகிறார்கள்! காரியம் முடியவேண்டியதுதான்,

அப்புறம் 'அவர்கள் யாரோ, நாம் யாரோ' என்ற நிலைமைதான்! அதுவும் நல்ல அழகான பெண்களை ஏமாற்றுவதில் கைதேர்ந்த ஆண்கள் இருக்கிறார்கள்! ஆகா! அவர்கள் தங்கள் ஆசையைப் பூர்த்திசெய்து கொள்ள முதலில் பேசுவதைப் பார்க்கவேண்டுமே! எவ்வளவு அழகான பேச்சுக்கள், அன்பான வார்த்தைகள், உறுதிமொழிகள், சத்தியங்கள், அப்பப்பா! என்ன சொல்லுவேன்! அவைகளை எல்லாம் நினைத்தாலே என் வயிறு 'கபீர்' என்கிறது! என்னைக் கடைசிவரையில் வைத்துக் காப்பாற்றுவதாகக் கடவுள்மேல் ஆணையிட்டவர் பலர். கல்யாணம் செய்துகொள்வதாக வாக்குத்தத்தம்பண்ணிய புண்ணியவான்கள் எல்லாம் இப்பொழுது எங்கே?

"நான் ஏமாந்தேன். ஐயோ! நினைக்கவும் பயமாக இருக்கிறது! ...ர்க்கமென்று அன்று எண்ணிய வாழ்க்கை, உண்மையில் நரகம் ...பதை இன்றுதான் உணரமுடிந்தது! இன்று என்னமோ தரித்தி...தால் நரக வாழ்க்கையைத்தான் நடத்துகிறேன். ஆனால், இதில் ...ாற்றமில்லை, வேதனையில்லை. "ஏதோ கிடைத்தால் சாப்பிடுகி...றோம்; இல்லையேல் பட்டினி கிடந்து சாவோம்" என்ற திருப்தியாவது ஏற்படுகிறது!

"என் அனுபவத்தில் சந்தர்ப்பத்தாலும், அறியாத்தனத்தாலும், பருவ ரசனையின் முறுக்கினாலும் ஆடம்பரமாய், சுகமாய், யதேச்சையாய் வாழவேண்டுமென்ற உணர்ச்சியாலும் பல ஆண்களின் மத்தியில் 'அஞ்சல்' ஆனேன்! அவர்களில் பற்பல ரகங்கள். மிருக இனத்தைக்கூட நல்லவர்களாக்கும் 'பிரகிருதி' களையும் நான் சந்தித்திருக்கிறேன். என் அழகில் மயங்கிய பலரின் வாக்குறுதியில் நம்பிக்கை வைத்துப் பார்த்துவிட்டேன். எல்லாம் வீண் என்று பின்புதான் தெரிந்தது.

"சரீரத்தை வாடகைக்கு விடும் தொழிலின் வெறுப்பு பிற்காலத்தில்தான் ஏற்பட்டது. ஆரம்பகாலத்தில் ஆசையின் அலையோடு அலையாய் நானும் அடித்துக்கொண்டு போகப்பட்டேன். திடீரென்று ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. சிலர் என்னைக் கைவிட்டுப் போனபிறகு உண்டானது அது. நான் சந்தித்த ஆண்கள் எவரிடமாவது உண்மையிருக்கிறதா என்று பரீட்சைசெய்து பார்க்க ஆரம்பித்தேன். அந்த

உண்மையை நான் பார்க்கவில்லை. எல்லாம் சூன்யமான உள்ள மாகத் தோன்றியது! 'ஆசை அறுபதுநாள், மோகம் முப்பது நாள்' என்று சொல்லுவதுபோல் நாள் கணக்கில் வளர்ந்த, தேய்ந்த அன்பைத்தான் நான் பார்த்தேன். இம்மாதிரியான ஆண்களால் தெருவில் தவிக்கும் என்னைப்போன்ற ஸ்திரீகள் பலர் என்பதுமட்டும் ஞாபகமிருக்கட்டும்! அவர்களுக்கு ரோஷமிருந்தால் இப்படி பெண்களைத் தவிக்கவிடுவார்களா?'' என்று கூறி இடையே நிறுத்தி பெருமூச்சுவிட்டாள். மேலே நான் பேச ஆரம்பிப்பதற்குள் அவளே தன் கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

''என் வயிற்றெரிச்சல் கதை பெரிய கதை. சுருக்கமாகவே சொல்லிவிடுகிறேன்.

''என் உருவத்தைப் பார்த்தாலே என்னுடைய பூர்வீகத்தைப் பற்றிச் சந்தேகம் ஏற்பட்டுவிடலாம்! என்னுடைய அம்மா எனக்குக் கொடுத்த 'பாக்கியம்' அது.

''தோட்டக்காட்டில் (தேயிலைத் தோட்டத்தில்) வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு என் தாயாரும் என் பாட்டியும் இங்கு அழைத்துவரப்பட்டார்கள். என் தாய் அப்பொழுது பருவமடைந்தவள். புருஷனை இழந்து விதவையாக இருந்த சமயம் ரொம்பவும் தரித்திரத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள் இந்தியாவில் ஒரு கிராமத்தில். யாரோ ஒரு கங்காணி அங்கே போய் 'இலங்கைக்கு வந்து தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்தால் கோடீஸ்வரியாக மாறிவிடலாம்; நிறைய நகை 'நட்டு'களைச் செய்து போட்டுக்கொள்ளலாம்' என்றெல்லாம் ஆசைவார்த்தை காட்டினாராம். அவருடைய வலையில் வீழ்ந்து கடைசியில் அவர்கள் இலங்கையில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். கொஞ்ச காலந்தான். எஸ்டேட் வாழ்க்கையின் 'ஒழுங்கு முறை'களுக்கு மற்ற அழகான ஏழைத் தொழிலாளிப் பெண்கள் பலியானதுபோல நல்ல அழகும் பருவமும் அடைந்துள்ள என் தாயாரும் ஆளானாள். சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேனே! எஸ்டேட்டில் 'சுற்றுத் தெய்வங்கள்', 'மூலஸ்தான தெய்வங்கள்' எல்லாம் உண்டு. அவர்களின் 'அனுக்கிரக' மும்

ஆதரவும் இல்லாமல் அங்கு செய்த வேலைக்குரிய கூலிகூட சரியா கக் கிடைக்காது! நல்ல 'முகவெட்டு' உடைய பெண்தொழிலாளி களைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. 'சுற்றுத் தெய்வங்கள்' முத லில் 'ருஜி' பார்ப்பார்கள்; பின்பு 'மேல் தெய்வங்களு'க்குக் 'காணிக் கை'களாகவும் அனுப்பப்படுவார்கள்! என் தாயாரும் 'காணிக்கை' யானாள். ஒரு வெள்ளைக்கார துரையின் வேட்டைக்குக்கூட பலி யானாள். அதற்குப் பிறகுதான் நான் பிறந்தேன்.

"பிரசவத்திற்குப் பிறகு என் தாய் நோய்வாய்ப்பட்டாள்; முடி வில் இறந்தாள். என்னை வளர்க்கவேண்டிய பொறுப்பு என் பாட் டிக்கு ஏற்பட்டது. அவள் பட்ட கஷ்டம் பல. ஆறு, ஏழு மாதங் கள்கூட கழிந்திருக்காது. பெண் குழந்தையே இல்லாத ஒரு தலை மைக் கங்காணி என்னைத் (குழந்தையிலேயே) தூக்கிக் கொண்டு போய் வளர்க்க ஆரம்பித்தார். என் பாட்டிக்கு ஏதோ பணம் கொடுத்ததாகவும் கேள்வி.

"அந்தத் தலைமைக் கங்காணி ரொம்ப நல்லவர்; சிவ பக்தர்; வயதானவர்; பணக்காரர். நிறையத் தருமம் செய்தவர். அவர் என் னைத் தன் குழந்தையைப்போலவே வளர்த்துவந்தார். நான் அங்கு போவதற்கு முன்பு அவருடைய மனைவி இறந்துவிட்டாள். அவ ருக்கு ஒரே ஒரு மகன் மாத்திரம் இருந்தான். வீட்டில் அவ ருடைய சகோதரர் வைத்ததுதான் சட்டம். மூத்தவருக்குச் சொந்த மான 'காணி'களை எல்லாம் மேல்பார்த்து வந்தவர் அவர்தான். அவரைவிட மிகவும் வயதில் குறைந்தவள் அவருடைய மனைவி. இரண்டாந் தாரம். அவரோ கோர சொரூபம். அவளோ கொஞ்சம் அழகானவள். எல்லோரிடமும் அவர் அதிகாரம் செலுத்துவார். ஆனால், தன் மனைவியிடம் அது செல்லாது. அவளிடம் அவர் அடக் கம். குடும்பத்தின் நிர்வாகத்தைக் கவனிப்பவர்கள் எல்லாம் அவரும் அவர் மனைவியும்தான். ஆனால், என்னைத் தூக்கி வளர்த்தவள் அவ ருடைய முதல் மனைவி. அவள் திடீரென்று மலேரியாக் காய்ச்சலால் இறந்துவிட்டாள். அதன் பிறகுதான் அவர் இரண்டாந் தாரமாகக் கல்யாணம் செய்துகொண்டார். குடும்ப விவகாரங்களில், பெரியவரா கிய தலைமைக் கங்காணி தலையிடுவதே கிடையாது. அவர் தம்பி வைத் ததுதான் சட்டம்.

"நான் 'செல்ல'மாகவே அந்த வீட்டில் வளர்ந்துவந்தேன். மூத்தவரின் குமாரனும் நானும் சின்னக் குழந்தைப் பருவத்திலிருந்தே சிநேகிதமானோம். வயதுவந்தபிறகு அவன் கொழும்புக்குப் போய் படித்துவந்தான்.

"இதற்கிடையில் தலைமைக் கங்காணி இறந்தார். அவருடைய ஸ்தானத்தை அவர் சகோதரர் அடைந்தார். அவருடைய 'ராஜ்ய பாரம்' முன்னைவிட அதிகமாயிற்று. என் விஷயத்தில் அவர் முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளவேயில்லை. என்னை வீட்டு வேலைக்காரியைப்போல நடத்த ஆரம்பித்தார். இவ்விதம் என் பால்யப் பருவம் கடந்தது. கடைசியில் பக்குவ பருவத்தை அடைந்தேன். அழகின் ஆரம்ப தசையல்லவா? வெளியே தலைநீட்ட வேண்டியதுதான்! எல்லோரும் என்னையே பார்ப்பார்கள். அவ்வளவும் வஞ்சகக் கண்கள் என்று அப்பொழுது தெரிந்துவிடுகிறதா, என்ன?

"இன்னொரு விசேஷம். என்னை இதுவரையில் அலட்சியம்சேய்து வந்த அவர் திடீரென்று அன்பு செலுத்த ஆரம்பித்தார். என் விஷயத்தில் கவனமாகயிருந்தார். அவர் அவ்விதம் மாறியதின் உட்பொருளை அறிய முடியவில்லை. வித்தியாசமான வகையில் நான் சந்தேகிக்கவில்லை. காரணம், அவருக்கு வயது அதிகமாய்விட்டது; நரை கண்டுவிட்டது என்பதுதான்! என்னிடம் அவர் கொஞ்சம் கொஞ்சமாக அன்பு காட்டிவருவதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் நடந்துகொண்டார். ஏன்? அவர் மனைவிக்குத் தெரிந்தால் எல்லாம் குடிமுழுகிப் போய்விடுமல்லவா?

"இறந்துபோன தலைமைக் கங்காணியின் குமாரர் கலாசாலையில் படிப்பை முடித்துக்கொண்டு நாங்கள் இருந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். வெள்ளைக்காரத் துரைமாதிரி 'ஹாட், பூட், சூட்' சகிதமே என்று சொல்லவேண்டியதில்லை. தமிழ்ப்பேச வருவதில்லை. எல்லாம் இங்கிலீஷ் கலந்த பாஷைதான்!

"பால்யமுதல் நாங்கள் சிநேகிதர்கள் அல்லவா? எனக்கு என்னமோ அவரிடம் ஓர் அலாதியான பிரியமிருந்தது. அவர் நம்மோடு

பேசுவாரோ, மாட்டாரோ என்ற ஆவல். என் மனசு அடித்துக் கொண்டேயிருந்தது.

''சில நாட்கள் ஓடின. அப்புறம் நடந்த சம்பவத்தைச் சொல்லி விடுகிறேன். அன்று நல்ல நிலவு. மலைகளுக்கு இடையே நல்ல அழகான இடத்தில்தான் எங்கள் வீடு. அதைச் சுற்றியும், ஒரு பெரிய தோட்டம் உண்டு.

''இரவு சாப்பாடு ஆரம்பமாவதற்கு முன்பு என்று நினைக்கிறேன். அவர் காட்டிய ஜாடை உண்மையானால், கட்டாயம் இங்கு வருவார் என்று நான் நம்பினேன். என் நம்பிக்கை வீணாகவில்லை. இறந்து போன தலைமைக் கங்காணியின் குமாரராகிய அவர் அங்கு வந்துசேர்ந்தார். 'தங்கம், உன்னை அடையாளமே தெரியவில்லையே. எவ்வளவு மாற்றம்! உண்மையிலேயே நீ ரதிபோல் அல்லவோ இருக்கிறாய்' என்றெல்லாம் இங்கிலீஷ், தமிழ் இரண்டையும் கலந்து பேசினார். நானும் ஏதேதோ பேச முயற்சித்தேன். வெட்கமும் பயமும் என் உடம்பைக் குலுக்கின. வியர்வை தோன்றியது. நெஞ்சு அடைத்துக்கொண்டது. அதுவரையில் அம்மாதிரியான அனுபவத்தைப் பெற்று அறியாதவள் தானே! நான் அவரைக் காதலித்தேன். ஆனால், அவரைப்போல தைரியமாக நிற்கவோ பேசவோ முடியவில்லை! வார்த்தைகள் குழறின. 'அட, பைத்தியமே' என்று அவர் என் கன்னத்தையும் முதுகையும் தட்டிக்கொடுத்தார். அவரைப்போல என்னால் ஏன் தைரியமாக நெஞ்சுப் படபடப்பு இல்லாமல் நிற்க முடியவில்லை? இப்பொழுது தான் அதன் காரணம் தெரிகிறது. நான் அவரைக் காதலித்தேன்; ஆனால், நான் காதலித்த மாதிரி அவர் காதலிக்கவில்லை என்று.

''உனக்குக் காதல் செய்யத் தெரியவில்லையே'' என்று என்னைக் கேலிசெய்தார். வெட்கம் என்னை வாட்டியது. கொழும்பில் படிக்கும் போதே காதல்செய்யும் வித்தையையும் அவர் அறிந்துவிட்டார் என்பதை என்னால் அப்பொழுது எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? அவர் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளுவதாக சத்தியம் பண்ணினார். மன நிம்மதி அடைந்தேன். அவர் இஷ்டத்திற்கெல்லாம் நான் சுலபமாகக் கட்டுப்பட்டேன். சில நாட்களுக்குள் குடும்பத்தில் எங்களைப்பற்றி வதந்தி கிளம்பவும் ஆரம்பித்தது.

"புதிய தலைமைக் கங்காணியின் மனைவியும், என் காதலரும் மற்றோர் எஸ்டேட்டிற்கு ஏதோ ஒரு கல்யாண விசேஷத்தை விசாரிப்பதற்குச் சென்றுவிட்டார்கள். அந்த அரிய சந்தர்ப்பத்தை எப்படியும் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்று, வீட்டு எஜமானர் (தலைமைக் கங்காணி) நினைத்திருக்கவேண்டும். சில சமயங்களில் நானே அவருக்குச் சாப்பாடு போடுவது உண்டு. அன்று இரவு, சாப்பாட்டு அறைக்குப் போயிருந்தேன். அங்கு வந்த ஒரு வேலைக்காரன் என்னை எஜமானர் கூப்பிடுவதாகக் கூறினான். உடனே அவர் இருந்த உட்கூடத்திற்குப் போனேன்.

"அங்கேயிருந்த ஒரு மேஜைக்கு எதிரே அவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். மேஜையின்மீது மதுபான வகைகள் உள்ள போத்தல்கள், கண்ணாடி டம்ளர்கள் எல்லாம் இருந்தன. அவர் ஒரு கண்ணாடி டம்ளரிலிருந்த மதுவை சுவைத்துக்கொண்டிருக்கும்போது நான் போய்ச் சேர்ந்தேன். என்னைப் பார்த்ததும் புன்னகையுடன் அதைக் கீழே வைத்துவிட்டு 'தங்கம்' என்று இன்பமாகப் பேசினார். அவர் முகம் போன போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. அவருடைய பார்வையில் விஷமமும், விஷமும் கலந்திருப்பதாக எனக்குப் பட்டது. அவரை நேரே பார்க்கவும் மனம் துணியவில்லை. மரியாதையுடன் தலைகுனிந்து நின்றேன். 'தங்கம், என்ன வெட்கப்படுகிறாய்? நான் உனக்குத் தகப்பன்போல் அல்லவா? சும்மா வந்து இப்படி நாற்காலியில் உட்கார். மனசு என்னமோ கவலை அடைந்தது. வேறு யாரோடு பேசுவது என்று நினைத்துத்தான் உன்னை இங்கு வரச்சொன்னேன். பாரு, கவலை அதிகமாகப் போகும்போதுதான் நான் இதைக்கூட (மதுவைக் காட்டி) சாப்பிடுவது வழக்கம். அது உனக்குத் தெரிந்ததுதானே" என்றெல்லாம் மெதுவாகப் பேசினார்.

"நான் அங்கிருந்து நழுவவே விரும்பினேன். ஆனால், அதற்கு அவர் இடம் கொடுப்பார் என்று தோன்றவில்லை. என்ன செய்கிறதென்று தோன்றாமல் விழித்தேன். அவரைச் சந்தேகிக்கவும் முடியவில்லை; சந்தேகிக்காதிருக்கவும் முடியவில்லை. இவ்விதம் தவித்துக்கொண்டிருக்கும்போது அவர் திடீரென்று எழுந்து முன்பின் யோசியாமல் என்னைப் பிடித்து ஒரு நாற்காலியில் உட்காரவைத்துவிட்டார். அப்பொழுதுதான் தெரிந்தது, அவர் ஏற்கெனவே நிறையக் குடித்து

விட்டார் என்று. அவர் சரீரம் தள்ளாடியது. பயத்தால் என் ஆத்மா தடதடத்தது.

"பொம்மைமாதிரி நாற்காலியில் உட்கார்ந்தேன். என்னுல் பேச முடியவில்லை. 'எங்கே, இதில் கொஞ்சம் சாப்பிடு" என்று சொல்லிக் கொண்டே ஒரு 'கிளாஸ்' (கண்ணுடி) டம்ளரில் மதுவை ஊற்றினுர் அவர். 'ஐயோ! நான் மாட்டேன்' என்று அலறிக்கொண்டே சட்டென்று எழுந்தேன். 'பைத்தியமே! உன்னைக் குடிக்கும்படி சொல்லு வேனு? இதோ, இந்த 'பிஸ்கோத்தை' சாப்பிடும்படி அல்லவோ சொன்னேன்' என்று சாமர்த்தியமுடன் சொன்னுர். நான் 'பிஸ்கோத்து'களை மட்டும் எடுத்துச் சாப்பிட்டேன். பின்பு அவர் சரசமாகப் பேச ஆரம்பித்தார். என் சந்தேகம் நிஜமாகுமோ என்ற பயம்; எனக்குத் திடீரென்று ஒரு யோசனை உதயமாயிற்று. நானும் அவருடன் வேடிக்கையாகவே பேச ஆரம்பித்தேன். நானே மதுவைக் கண்ணுடி டம்ளரில் மேலும் மேலும் ஊற்றி அவருக்குக் கொடுத்தேன். அவருக்கு உச்சி குளிர்ந்துவிட்டதுபோலும்! தடை சொல்லாமல் குடித்துக்கொண்டேயிருந்தார் அப் பெருங்குடியர்.

"குடிமயக்கம் அதிகமாகவே பிரக்ஞையற்று கண் மூடினுர். 'அப்பாடா! பிழைத்தோம்' என்று பெருமூச்சுவிட்டேன். பிறகு வேலைக்காரனைக் கூப்பிட்டு அவரைக் கவனித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு என் அறைக்குப் போனேன்.

"மறுநாள், அவர் முதல்நாள் இரவு நடந்த சம்பவத்தைப்பற்றி ஞாபகப்படுத்தவேயில்லை. 'குடிகாரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு' என்று சொல்லுவது சரிதான் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். அன்று இரவு, முதல்நாள் ஏமாற்றம் அவரை வேறு தந்திர முறையை அனுஷ்டிக்கும்படி செய்துவிட்டதுபோலும்! இராத்திரி சாப்பாடு எல்லாம் முடிந்துவிட்டது. அவர் என்னை அன்புடன் அழைத்தார். நான் சென்றேன். 'இதோ, எனக்கு வந்த பால் அதிகமாக இருக்கிறது. இதில் நீ கொஞ்சம் சாப்பிடு' என்ருர். என்னுல் மறுக்கமுடியவில்லை. சந்தேகம் என் நரம்புகளில் ஒரு நடுக்கத்தை உண்டாக்கியது. அவர் வற்புறுத்தி ஒரு வெள்ளி டம்ளரில் உள்ள பாலை எனக்கு அளித்தார். மற்ெருரு டம்ளரில் உள்ள பாலை அவர் அருந்தினுர். நான் பேசா

மல் அதை வாங்கிக் குடித்துவிட்டேன். 'ஏன் இப்படி வெட்கமும் பயமும் கொள்ளுகிருய்? சும்மா உட்கார்' என்ருர். 'சரிதான். நேற்றைய நாடகம் மறுபடியுமா?'' என்று பயந்துகொண்டே நாற்காலியில் உட்கார்ந்தேன். அவர் பேசும்போது மதுவின் வாடை 'குப் குப்' என்று கிளம்பியது. நிதானமாகவே மதுபானம் செய்திருந்தார் என்று எனக்குத் தோன்றியது. 'என் அண்ணன் உன்னை ஒரு பெரிய சீமாட்டியின் மகளைப்போல வளர்த்தார். கடைசிக்காலத்தில்கூட உன்னைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பை என்னிடம் ஒப்புவித்து இறந்துவிட்டார். அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை நான் காப்பாற்றுவேன் என்பதைப்பற்றி நீ சிறிதும் சந்தேகப்படாதே. நீயே இந்த வீட்டின் எஜமானியாக இருக்கலாம்...' என்றெல்லாம் அவர் பேசிக்கொண்டே போனுர். கிலியும் பயமும் என் சரீரத்தை ஆட்டின. சில நிமிடங்களுக்குள் என் தலை சுழன்றது. கண்கள் சொருகின. வெளித் தோற்றமெல்லாம் மங்கியது. பாலில் கலந்துள்ள மயக்க மருந்து சரியாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது என்று அப்பொழுது தெரியவில்லை. அப்படியே நாற்காலியில் மயங்கி 'நிர்ஜீவனுக' விழுந்துவிட்டேன்.

''அப்புறம் என்ன நடந்தது? எனக்கு ஒன்றும் தெரியாது. கண்களை விழித்தபோது கட்டிலில் அவருடைய கரங்களுக்கிடையே கட்டுப்பட்டுக் கிடந்தேன். 'ஆகா! மோசம் செய்தான், பாவி. 'செத்த நாய் என்றே, பெத்த மகள் என்றே காமத்திற்குத் தெரியாது' என்பார்களே! அதன் உதாரணமா இது? என்று நெஞ்சம் பதறினேன். நான் கண்விழித்தபோது என் எதிரே வந்து நின்றவள் அவருடைய இரண்டாவது மனைவி. ஆம். அவள் ஊரிலிருந்து திரும்பிவிட்டாள். அவளைப் பார்த்ததும் அடித்து மோதிக்கொண்டு எழுந்தேன். அவரும் திடுக்கிட்டு எழுந்தார். தன் மனைவியைப் பார்த்து நடுங்கிவிட்டார். அப்புறம் என்ன நடந்ததென்பதை எல்லாம் விவரித்தால், அது பெரிய 'பாரதமா'கிவிடும்.

''அந்த நிகழ்ச்சி அப்படியே எங்களுக்குள் மூடுமந்திரமாக்கப்பட்டது. எண்ணி இரண்டு மூன்று நாட்களுக்குள் அவரின் மனைவி என்னை மற்ருேர் எஸ்டேட் இருக்கும் ஊருக்கு அனுப்பிவிட்டாள். நான் போய்ச் சேர்ந்த இடம் காங்காணித் தொழிலால் ஏராளமாகப் பணம் சம்பாதித்தபிறகு அத்தொழிலை விட்ட ஒருவருக்குச் சொந்தமானது.

அவர் அவளுக்குப் பந்துவே. ஆனால், அவள் புருஷனுக்கு விரோதி. அதனால்தான் அவள் என்னை அங்கு அனுப்பி வசித்துவரும்படி கட்டளையிட்டாள். 'நீ இங்கேயே இரு. உன் செலவுக்கெல்லாம் நான் பணம் அனுப்புகிறேன். இவர் உன்னை சகோதரியைப்போல அன்புடன் பாவித்து நடத்துவார்' என்றெல்லாம் சொல்லி என்னை அந்தப் புதிய வீட்டில் விட்டுவிட்டே அவள் போனாள். குழப்பமடைந்த மனதுடன் 'சரி' என்று தலை அசைத்தேன். இத்தகவல் எல்லாம் என் காதலருக்கும் தெரியாமலில்லை. அவர் இந்த ஏற்பாட்டிற்கு இணங்கினாரோ என்னமோ, ஒருவேளை என்னைச் சந்தேகித்து தன் மனதைத் திருப்பிக்கொண்டாரோ என்றும் நான் ஐயுற்றேன். பிற்காலத்தில் தான் எல்லாக் 'குட்டும்' வெளிப்பட்டது. தன் கணவரின் மூத்த அண்ணாவின் குமாரன் தனக்கும் மகன்தானே என்பதை அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. நான் அங்கிருப்பது அவ்ளுக்கு இரண்டுவிதத்திலும் பிடிக்கவில்லை. வயதான தன் புருஷனிடம் என்னைத் தள்ளிவிடவும் அவள் தைரியம் கொள்ளவில்லை. அதே சமயத்தில் என்னை வைத்துக்கொண்டால், தன் கள்ளக் காதலனையும் தன்வசமாக்குவதில் கஷ்டம் ஏற்படும். இவைகளையெல்லாம் யோசித்துத்தான் என்னை அவள் குடும்பத்திலிருந்தே பிரித்துவிட்டாள் என்பதை பிற்பாடுதான் நான் தெரிந்துகொண்டேன்.

"நான் புகுந்த புதிய இடத்தின் யோக்கியதையும் கேளுங்கள். அழகுள்ள பெண்கள் எங்குபோனாலும் சரி; அவர்களுடன் ஆபத்தும் தொடர்கிறதென்றே நினைக்கவேண்டியிருக்கிறது! அங்கு போனபிறகு என் வாழ்க்கை மிகவும் சீர்குலைந்தது! ஒழுக்கமாவது? சன்மார்க்கமாவது? ஒழுக்கம்கெட்ட இந்த உலகத்தில் அவைகளை அனுஷ்டிக்க யாரால் முடியும்? அனுஷ்டித்துப் பார்க்கலாம் என்றாலும் 'சுற்றும் முற்றும்' இருக்கிறவர்கள் எங்கு இடம் கொடுக்கிறார்கள்? அவர்கள் கீழே விழுவதுடன் நம்மையும் பிடித்துத் தள்ளிவிட்டுவிடுகிறார்கள்! சன்மார்க்கம், ஒழுக்கம் என்றால் கஷ்டப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டியதுதான். அவைகளைக் கவனிக்காமல், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சுகமாக இருக்கும்வரையில் காலத்தைப் போக்குவதுதான் சிறந்தது எனும் 'தர்மத்தை' அந்த வீட்டு எஜமானரின் சகவாசத்தால் பெற்றேன். என்னைக் காப்பாற்றுவதாக சத்தியம் செய்த என் காதலரின் பராமுகம் என் வாழ்க்கையின் லகா

ணேயே வேறு பக்கத்தில் திருப்பிவிட்டது. 'கெட்டது கெட்டோம்; பூராவும் கெட்டுவிடுவோமே! பிறர் எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். நம் காலத்தைக் கஷ்டமில்லாமல் நடத்திவிடவேண் டும்' என்று கண்மூடித்தனமாக அந்த வீட்டு எஜமானர் 'வலை'யில் விழுந்தேன். என்னை வைத்துக் கடைசிவரையில் காப்பாற்றுவதாக அவர் வாக்குத்தத்தம் செய்தார் என்று சொல்லவேண்டியதில்லை. அவ ருக்கு வயது 30-க்கு மேல். ஒரு பிரமசாரிதான். அந்தப் பதத்தின் அர்த்தத்தில் அவர் பிரமசாரி அல்ல. 'கட்டினவர்களுக்கு ஒரு வீடு; கட்டாதவர்களுக்கு எத்தனையோ' என்று சொல்லுகிறார்கள் அல் லவா? அந்த முறையில்தான் அவர் பிரமசாரி! அவருக்கு சிங்களம், இங்கிலீஷ் எல்லாம் பேசத் தெரியும். அவருடைய பாட்டன், பூட்டன் அறியாத நாகரிக மோஸ்தரில்தான் அவர் உடை அணிவார். வெளியே விசாரித்தால் 'அவரைப்போல தங்கமான மனிதர் உண்டா?' என்று சொல்லுவதைக் கேட்கலாம். எல்லோருக்கும் நல்லவரைப்போல நடந்துவந்தார். அந்தப் பகுதிகளில் அவர் வார்த்தைக்குச் செல்வாக்கு உண்டு. அந்தரங்க வாழ்க்கையில் அவர் முதல் நம்பர் அயோக்கியர். மேல்பகுதி 'நாடு'களில் அழகான ஏழைப்பெண்கள் கெடுவதற்கு அவர் ஒரு காரணபூதர். இலங்கையில் உள்ள 'பெரிய பெரிய பேர்வழி கள்' எல்லாம் அவரிடம் 'குலாம்'. ஏன்? வாலிபப் பெண்களின் - தரித் திரத்தால் அடிபடும் அழகான பெண்களின் கற்பை விற்கும்படி தூண் டும் 'வர்த்தக'த்தை அவர் கட்டுப்பாடான முறையில் நடத்திவந்தார். இந்த விஷயத்தில் அவருக்கு உதவிசெய்கிற பல பேர்வழிகள் இரகசிய மாக இலங்கையின் புல கிராமங்களில் உண்டு. பெண்களின் கற்பும், வாழ்வும் தொலைந்தால் அவர்களுக்கு என்ன? அவர்களுக்கு வேண்டி யது பணம்! அதற்காகச் சின்னஞ்சிறு பெண்களின் வாழ்வு பலி! இலங் கையின் மேல்பகுதியிலுள்ள குறிப்பிட்ட 'தங்கும் விடுதி' களுக்குப் பெண்களைத் தகுந்த துணையுடன் என் எஜமானர் அனுப்பிவருவார். இம்மாதிரி அனுப்பப்படுகிறவர்களில் நானும் உண்டு என்பதை சொல் லாமல் இருப்பதற்கில்லை.

"மாதங்கள் போகப்போக என் வாழ்க்கையிலேயே பெரிய மாற் றம். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்றாய்விட்டேன். மதுபானம் செய்வதில் தயங்குவதில்லை. குடித்துவிட்டுச் கூத்தடிப்பது எனும் தொழில்தான் என் வாழ்வைப் பற்றிக்கொண்டது. ஒரு படியில்

தவறியவள் மளமளவென்று அடிவாரத்திற்கே வந்து விழுந்துவிடுவது போன்ற நிலைமைக்குள்ளாகிவிட்டேன். அத்தகைய வாழ்வின் லாப நஷ்டத்தை இன்றுதான் உணர்கிறேன்.

''என் எஜமானன் கட்டளைப்படி ஓர் எஸ்டேட்டிற்கு அருகே உள்ள தங்கும் விடுதிக்கு நான் அனுப்பப்பட்டேன். நிலவு இல்லாத இரவு. அந்த விடுதிக்கு என்னை முன்னேற்பாட்டின்மூலம் வரவழைத்திருந்த இரு வாலிபர்கள் வந்திருந்தார்கள். சம்பிரதாயமாக மதுபானக் கச்சேரி முடிந்தது. அவர்களுடைய ஆசையை நான் சாந்திசெய்வதற்காக என் எஜமானர் பணம்பெற்றிருந்தார். ஆகையால், எனக்கு அங்கே அவர்கள் செய்யும் பைத்தியக்காரத் தனத்திற்கெல்லாம் இணங்கவேண்டுமென்பது ஒரு கடமையாக்கப்பட்டிருந்தது அப்பொழுது.

''அங்கு வந்திருந்த இருவரில் ஒருவர் என் கற்பை முதலில் கெடுத்த காதலர், குமரன் என்பவரே. என்னை அங்கு அவர் எதிர்பார்க்கவில்லை என்றே நினைக்கும்படி இருந்தது. தவறுதலாக நான் அங்கு அனுப்பப்பட்டுவிட்டேனோ என்றுகூட சந்தேகித்தேன். அவர் குடும்பத்திலிருந்து பிரிந்தபிறகு மறுபடியும் நான் அவரை அப்பொழுதுதான் சந்தித்தேன். எனக்கு ஆத்திரமாக இருந்தது. அவர் முதலில் பேசவில்லை. தாமதித்து 'உன் விதி இப்படியா ஆகவேண்டும்?' என்று பரிதாபப்பட்டார். நான் பொறுமையை இழந்தேன். ஆத்திரத்தில் அவரை ஏதேதோ திட்டிவிட்டேன். அவர் நிலைமையும் பெரும் சங்கடமாய்ப் போய்விட்டது. அவர் நண்பரிடம் ஏதோ ஆங்கிலத்தில் சொல்லிவிட்டுக் கிளம்பினார். இடை மறித்தேன். என்னை அலட்சியமாகத் தள்ளிவிட்டுப் போய் மோட்டாரில் ஏறினார். வெளியே ஓடிப் போய்ப் பார்த்தபோது, மோட்டார் ஓடி மறைந்ததைக் கண்டேன்.

''என் மனம் நிம்மதி அடையவில்லை. அங்கிருந்த மற்றவருக்கு என் மனோநிலை எப்படித் தெரியமுடியும்? அவர் காரியம் அவருக்கு. நான் திரும்பியபோது அவர் மதுவைச் சுவைத்துவிட்டு 'வா, வா...' என்றார். என்னைக் குடிக்கச் சொன்னார். கவலையும், வேதனையும் கலந்துவிட்டால், அவைகளை மறக்க மதுபானம் ஒரு சிறந்த ஔஷதமாகிவிடுகிறதென்று தோன்றுகின்றதல்லவா? 'சே! ஈதென்ன கவலை! பட்ட

மரம் பட்டமரம்தான்! குடித்து மனம் குளிருவோம்' என்ற எண்ணம் என்னை அடிமையாக்கியது. அவர் ஊற்றிக் கொடுக்கக் கொடுக்க நான் குடித்தேன். நான் ஊற்றிக் கொடுக்கக் கொடுக்க அவர் குடித்தார். அந்தோ! முன்பின் பார்த்து அறியாத எங்கள் இருவரையும் மிருகங்களைப்போல சேர்த்துவைத்தது அந்த மதுபானம். அவன் யாரோ? நான் யாரோ? நான் உணர்ச்சியில் பொம்மையானேன். அவன் உணர்ச்சியில் கிராதகன் ஆனான்.

"சில வருடங்கள் கழிவதற்குள் நான் என் எஜமானனிடமிருந்து பிரிந்துவிட்டேன். என் உடலை விற்ற பணம் எல்லாம் அவனிடமே சமர்ப்பித்துவிட்டு எத்தனை நாளைக்கு சும்மா இருக்கமுடியும்? இவ்விதம் மனம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு நாடக நடிகரின் சிநேகிதம் எனக்குக்கிடைத்தது. 'பைத்தியக்காரி. சம்பாதிக்கிற காசு எல்லாவற்றையும் அவனிடம் கொடுத்துவிடுகிறாயே.வயதாகிவிட்டால் உன்னை யார் கவனிப்பார்கள்? என்னுடன் வா. இந்தத் தொழிலையே தலைமுழுகிவிடலாம். உனக்கு சிங்களப் பாட்டு எல்லாம் சொல்லித் தருகிறேன். கொஞ்ச நாளைக்குள் சிங்கள நாடகத்தில் 'ஸ்திரீ பார்ட்' போட்டுக்கொண்டு நடிக்கலாம். அப்பொழுது நிறையப் பணம் சம்பாதிக்கலாம். ஒருவர் தயவு இல்லாமல் ராணி மாதிரி இருக்கலாம்' என்றெல்லாம் அவர் எனக்குப் போதித்தார். அவர் ஆலோசனையை உடனே ஒப்புக்கொண்டுவிட்டேன். ஏனெனில், விபசார வாழ்க்கையின் விஷம் என் இருதயத்தைத் தின்னத் தொடங்கிவிட்டதென்பதை உணர ஆரம்பித்தேன். வேறு ஏதாவது தொழில் செய்து கண்ணியமாக வாழவே பிரியப்பட்டேன்.

"முடிவில் என் எஜமானருடன் சண்டைபோட்டுக்கொண்டு அந்த நடிகருடன் கொழும்பு வந்து சேர்ந்தேன். அவர் வீட்டிலேயே வசிக்க ஆரம்பித்தேன். அவருக்கு சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு பாஷைகளும் தெரியும். அவர் தனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்றே என்னிடம் முதலில் கூறியிருந்தார். நானும் நம்பினேன். ஆனால், பின்பு அது பொய் என்று விளங்கிவிட்டது. அவர் என்மீது வைத்த மோகத்தால், தன் மனைவியை அவள் தாயார் வீட்டிற்குக் கட்டாயப்படுத்தி அனுப்பிவிட்டார். வெளியில், அவர் தன் மனைவியை அனுப்பிவைத்ததற்கு என்ன காரணம் சொன்னார் தெரியுமா? அது

தான் வேடிக்கையானது! அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றும், மூளை சரியில்லையென்றும் கூறிய விஷயம் பிறகுதான் எனக்குத் தெரிந்தது. உண்மையில் அவளுக்குப் பைத்தியம் ஒன்றுமில்லை. ஆனால் அவளைத் துன்புறுத்தி பைத்தியம்கொள்ளும்படி செய்து அனுப்பியுள்ளார். அவள் மனம் எவ்வளவு நொந்திருக்குமென்பதை அன்று உணராத பாவியானேன்.

* * *

''நாட்கள் பல சென்றன. எனக்கு முதலிலேயே சிங்களம் கொஞ்சம் பேசத் தெரியுமாதலால், சுலபமாக அப்பாஷையில் நன்றாகப் பேசவும் எழுதிப் படிக்கவும் கற்றுக்கொண்டேன். நடிப்பு, பாட்டு முதலியவைகளை எனது புதிய காதலராகிய நடிகர் தினசரி சொல்லிக் கொடுத்தார். இந்திய மெட்டுகளில் சிங்களப் பாட்டுகளைப் பாடம்பண்ணினேன். எப்படியும் என்னை நாடகமேடை நடிகையாக்கிவிட அவர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். நானும் அக்கறையோடு எல்லாவற்றையும் கற்றுக்கொண்டேன். கடைசியில் அவரது எண்ணம் நிறைவேறியது. சிங்கள நாடக நடிகையானேன். கொஞ்சம் எனக்கு நல்ல பெயரும் கிடைத்தது. அத்தொழிலின்மூலம் அதிகமாய்ப் பணமும் கிடைக்க ஆரம்பித்தது. இவ்விதம் நாங்கள் இருவரும் சுகமாகக் காலத்தைப் போக்கிவந்தோம். நான் அவரிடம் எவ்வளவு பரிசுத்தமுடனும், அன்போடும் இருந்தேனோ அவ்வளவு அன்புடனும், ஒழுக்கமாகவும் அவர் இல்லை என்பது சீக்கிரத்தில் தெரிந்துவிட்டது. நாடக நடிப்பின் மூலம் வரும் ரூபாய் எல்லாம் அவரிடம்தான். கொஞ்சகாலைக்குள் அவர் என்னை வெறுக்கவும் குடிவெறியால் அடிக்கவும் ஆரம்பித்தார். அவரிடம் ஓர் அடிமையைப்போல இருக்க நான் விரும்பவில்லை. இதற்கிடையில் என் சாரீரம் இனிமையை இழந்தது. அதனால் நாடகத் தொழிலில் முன்போல வரும்படி கிட்டவில்லை. இதைக் கண்டு நடிகர் என்னை அதிகமாகத் தொந்தரவுபண்ண ஆரம்பித்தார். நாள் ஆக ஆக எனக்குத் தெரியாமலேயே வீட்டிலிருந்த முக்கிய சாமான்கள் அப்புறப்படுத்தப்பட்டுவந்தன. என்னிடமிருந்த நகையெல்லாம் வேறு யாருக்கோ இரவல் கொடுக்கவேண்டுமென்று வாங்கிச் சென்றார். அவ்வளவுதான்! அவர் திரும்பவேயில்லை. வீட்டில் பெட்டியில் இருந்த கொஞ்ச ரொக்கப் பணமும் இரகசியமாக எடுத்துக்கொள்ளப்பட்ட

தென்று தெரிந்தது. நான் அனாதையானேன். வீட்டுக்காரன், வாடகை கொடுக்காததால், உடனே காலிசெய்துவிடும்படி கட்டளையிட்டான். என்ன செய்கிறதென்று தோன்றாது விழித்தேன். என் காதலராகிய நடிகரைத் தேடிப்போகவும் மனம் வரவில்லை. இந்தச் சமயத்தில் தபேலா வாசிக்கும் ஒருவர் 'கவலைப்படாதே! ஒரு ஹோட்டலில் உனக்கு வேலை வாங்கித் தருகிறேன்' என்று கூறினார். அவர் ஆலோசனையை அங்கீகரித்தேன்.

''கொழும்பில் ஹோட்டலுக்குப் பஞ்சமில்லை. வித விதமான ஹோட்டல்கள். அவைகளில் சில, ஹோட்டல்கள்தானா? அங்கே வியாபாரம் நடக்கிறதா? என்று சந்தேகம் வந்துவிடும். வேறு சில ஹோட்டல்களைப்போல அங்கு சதா ஜனக்கூட்டம் இருக்காது. தேத் தண்ணீர், தின்பண்டங்களின் வியாபாரமும் குறைவுதான். பகலில் 'காக்காய் ஓட்டும்' இந்த ஹோட்டல்கள் எப்படி லாபகரமாக நடத்தப்படுகின்றன என்று பார்ப்பவர்களுக்குச் சந்தேகம் ஏற்படலாம். திரை மறைவில் கௌரவமான முறையில் விபசார வாழ்வுக்கு அந்த மாதிரியான ஹோட்டல்களில் இடம் கொடுக்கப்படுகின்றதென்பதை அறிந்தால், சந்தேகத்திற்கு இடமே இல்லை. இம்மாதிரியான ஒரு ஹோட்டலில்தான் எனக்கு உத்தியோகம் கிடைத்தது. அதை நடத்தியவள் ஒரு ஸ்திரீ தான். அவளுக்கு வயது 50. ஆனால், சின்னக் குட்டியைப்போல சிங்காரித்துக்கொள்ளுவாள். விவாகரத்துச் செய்துகொண்டவள்; வேறு கல்யாணம் பண்ணிக்கொள்ளாமலேயே இருந்துவிட்டாள் என்று சொல்லப்பட்டது. அங்கே ஒழுக்கத்தில் கருத்துள்ளவர்கள் வெறுக்கும் வேலைகளில் ஈடுபடும் உத்தியோகம்தான் எனக்கு. அந்தக் கிழவியின் சொற்படி அங்கேயே விபசார வாழ்க்கையிலீடுபடும்படியும் நேரிட்டது. வெளியில்போய்க் கஷ்டப்படுவதைவிட அங்கேயே இருக்க நிச்சயித்துவிட்டேன்.

''அந்த ஹோட்டலுக்கு இரவில் தங்க, ஆண்களும், பெண்களும் வருவார்கள். ஆம். சகோதரன், சகோதரி என்றும், தாய், மகன் என்றும், தகப்பன், மகள் என்றும், சொந்தக்காரர்கள் என்றும், சிநேகிதர்கள் என்றும் சொல்லிக்கொண்டு வருவார்கள். அந்தோ! இரவு நேரங்களில் எல்லாம் அவர்கள் தற்காலிக 'புருஷன்-மனைவி'களாக மாறி விடுவார்கள்! அவர்களுக்கு உண்மைப் பெயர் ஒன்று இருக்கும்.

ஹோட்டல் புஸ்தகத்தில் குறிக்கப்படும் பெயர்களோ வேறு! அப்பப்பா! அந்தக் காட்சிகளை எல்லாம் சொல்லவும் வாய் கூசுகின்றது.

"என் அழகு கெட ஆரம்பித்தது. உடம்பில் வியாதியும் கண்டது. என்னைக் கண்டு சிரித்து விளையாடியவர்கள் சினந்து எட்டிப்போக ஆரம்பித்தார்கள். ஹோட்டல் எஜமானி, என்னால் வரும்படி கிடைக்காதென்று தோன்றியதும் என்னைக் கேவலமாக நடத்த ஆரம்பித்தாள்; பாத்திரங்களைக் கழுவும்படியும் கட்டளையிட்டாள். வியாதியின் வேதனை அதிகமாகவே என்னை அவள் தரும ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டாள். அங்கு பல மாதங்கள் வாடினேன். அதற்கு மத்தியில் அம்மை நோய் பீடித்தது. ஆஸ்பத்திரி அதிகாரிகள் உடனே என்னை அம்மை நோயாளிகள் தங்கும் அங்கொடை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டார்கள். அங்கு பல நாட்கள் இருந்தேன். 'ஏன் இன்னும் இந்தப் பிராணன் போகாமல் இருக்கிறது?' என்று நொந்தேன். கொஞ்சம் தேகம் சுகமானதும் கொழும்பு வந்தேன். அம்மையின் காரணமாக என் அழகு முழுவதும் கெட்டது. நான் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போனேன். அந்த எஜமானி கடுகடுத்து 'போ போ, எங்கேயாவது பிச்சை எடுத்துச் சாப்பிடு. இங்கு தண்டச் சாப்பாடு போட முடியாது' என்று கூறினாள். என் சரீரம் குன்றியது. மூளை கலங்கியது. மரணம்தான் சரி என்று தோன்றியது. தற்கொலைக்கு ஆயத்தமாகி கடல்கரையை நோக்கிப் புறப்பட்டபோதுதான் இந்தக் கிழவி குறுக்கிட்டாள். இவள் என்னிடம் அனுதாபம் காட்டினாள். உபதேசம் செய்தாள். 'பிச்சை எடு; பரவாயில்லை. தற்கொலை செய்வது மகாபாவம்' என்று ஏதேதோ சொன்னாள். 'எனக்கு யாரும் கதி இல்லை; உதவி செய். புண்ணியம் உண்டு' என்றாள். என் தாயாரை நான் பார்க்கவில்லை. ஆனால், இவள்தான் என் தாய்போல. இவளுக்கு உதவி செய்வதினால்தான் 'எடுபட்டவளாகிய என் மனத்திற்குக் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது' என்று சொல்லிக் கதையை முடிக்கப்போனாள். அப்பொழுது அவள் கண்கள், மழை ஜலத்தால் அங்கு எதிரே மின்சார விளக்கின் ஸ்தம்பத்தின் அடிவாரத்தில் ஒதுக்கப்பட்டுக்கிடந்த 'சப்பிய மாங்கொட்டை'யை நோக்கின. உடனே அவள் தன் கைகளால் அதைக் குறிப்பிட்டுக் காட்டி 'அதோ, பாருங்கள், அதை. அதுபோலாய்விட்டது என் வாழ்வும்' என்றாள். அவளின் நேத்திரங்களைக் கண்ணீர் அமுக்கியது. தன் கிழிந்த முன்றானையின் முனையால் கண்

களைத் துடைத்துக்கொண்டாள். கிழவி ஏதோ சமாதானம் கூறினாள்.

சட்டென்று நான் என் கையில் இருந்த மூன்று ரூபாயை அவளிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டேன்.

அவள் முகம் மலர்ந்தது. இரு கரங்களையும் கூப்பி நமஸ்கரித்தாள்.

மழை கொஞ்சம் நின்றுவிட்டது. வெறும் இடிகளின் சப்தம். மின் வெட்டு, வானத்தில் அங்கும் இங்குமாக—குறுக்கும் நெடுக்குமாக.

நான் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு இரண்டு அடி எடுத்து வைத்தேன்.

அவள் என்ன நினைத்தாளோ? எதற்காக இவ்விதம் சொன்னாளோ? என்னைத் திடுக்கிடவைத்தது அவள் கூறிய வார்த்தை. அவள் முதலில் கிழவி இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டுவிட்டு மெதுவாக 'அங்கு வரலாம்' என்றாள். நன்றி தெரிவிக்கவோ, அல்லது பரீட்சிக்கவோ அக்கேள்வி பிறந்ததாகத் தோன்றவில்லை! இந்த ஆண் வர்க்கத்தையே-பெண்களைத் தவிக்கவிடும் ஆண் வர்க்கத்தை நோக்கியே அவளின் வார்த்தை சவால் விட்டதுபோல எனக்குப் பட்டது!

திரும்பிப் பார்த்தேன். அவள் கிழவியுடன் பேசிக்கொண்டிருந்தாள். மின்னல், இடிகளுக்கிடையே நான் 'நடையைக் கட்டி'னேன்.

# நழுவி விழுவானேன்?

இரவு மணி பத்து இருக்கும். வானம் வெள்ளித் தீவாக விளங்கியது. ஆகாயத்து மோகினியாகிய சந்திரிகையின் பிரகாசம். அன்று பௌர்ணமியாதலால் மதியப் பெண் சல்லாபமுடன் வான வீதியிலே பிரயாணம் செய்துகொண்டிருக்கிறுள்.

அந்தத் தெருவில் அது கோடி வீடு. அந்த வீட்டின் மேல் மெத்தையில் உள்ள அறையின் சாளரம் திறந்திருக்கிறது. அந்த அறையில் ஒருவிதமான தெய்வீக எழில் இடம் பெற்றிருக்கிறது. சித்திரம் உள்ள அறை சிந்தனை நிறைந்த அறை என்பார்கள். நான்கு பக்கங்களிலும் மாட்டப்பட்டிருந்த படங்கள் அங்கு வசிப்பவரின் மனோபாவத்தை எடுத்துக்காட்டுவனவாய் இருந்தன.

ஒரு பக்கம் வீர வேதாந்தியாகிய ஸ்வாமி விவேகானந்தர் கம்பீரமுடன் கைகளைக் கட்டிக்கொண்டு தலைப்பாகையுடன் விளங்கும் காட்சி. மற்றொரு பக்கம் அவதார புருஷராகிய ராமகிருஷ்ணரின் உருவம். அதற்கு எதிராகத் தம் பொக்கை வாய்ச்சிரிப்பினால் பூவுலகையே மயக்கிய சாந்த சொரூபி மகாத்மாஜியின் படம். இன்னும் ஒரு பக்கத்தில் லோக ரக்ஷகர் ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட காட்சி. மார்பு வரையில் தீட்டப்பட்டுள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய படமும் முக்கியமான இடத்தில் மாட்டப்பட்டிருக்கிறது.

கிழக்கே முகம்பார்த்துப் போடப்பட்டிருக்கும் அந்த மேஜையின் மீது பரிபூரண கலா அம்சம் விளங்க வார்க்கப்பட்ட கௌதம புத்தரின் வெண்கல விக்கிரகம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மேஜைக்கு வலதுபுறமாக ஓர் அலமாரி. அதில் உள்ள நூல்கள் எல்லாம் தத்துவ சம்பந்தமானவைகளே.

நெருப்புக் குச்சியைக் கிழிக்கும் சப்தம். கையில் இருந்த ஊதுவத்திகளை அந்த வாலிபன் நெருப்புக் குச்சியின் மூலமாகப் பற்றவைத்தான். அவைகளைக் கௌதம புத்தர் விக்கிரகத்தின் பக்கத்திலுள்ள,

கைப்பிடிபோல் செய்யப்பட்டிருக்கும் சிறிய பீடமொன்றில் செரு கிறுன்.

கொளுத்தி வைக்கப்பட்ட ஊதுவத்திகளிலிருந்து நறுமணம் நிறைந்த புகைப் படலங்கள் எழுந்தன. அந்தச் சுகமான மணத்தைக் கொடுத்துக்கொண்டிருந்த ஊதுவத்திகளின் 'தேகம்' எரிந்து சாம்ப லாய்க்கொண்டே வந்தது.

பிறருக்குச் சுகந்த மணத்தை அளிக்கும்பொருட்டுத் தன் தேகத் தையே அர்ப்பணம்செய்த அந்த ஊதுவத்திகளின் தியாகபுத்தியை எண்ணிக்கொண்டே அந்த இளைஞன் படுக்கச் சென்ருன்.

ஆனுல் நித்திரை என்னவோ வரவில்லை. மனம் இடக்குச் செய் தது. "மனக் குரங்கு என்று தெரியாமலா பெரியோர்கள் எழுதிவைத் திருக்கிருர்கள்?" என்று சொல்லிக்கொண்டே சட்டென்று எழுந் தான். கொஞ்நேரம் அங்கும் இங்குமாக உலாவினுன்.

"தாமரை இலையில் உள்ள தண்ணீர்போல இருக்கவேண்டும் என் கிருர்கள் வேதாந்திகள். என் மனம் தாமரை இலைத் தண்ணீரைப் போல் பற்றற்று இருப்பதற்குப் பதிலாகத் தத்தளிக்கிறது. சே! என் உறுதி எல்லாம் ஏன் இப்படித் தளர்கிறது?" என்று தன்னைத்தானே நொந்துகொண்டான்.

அப்பொழுது சாளரத்தின் வழியாக குளிர்ந்த வெண்ணிலவு அறையின் உட்பக்கமாக எட்டிப்பார்த்தது. "இருட்டின் நடுவில் ஒளி உயிர்கொண்டு எழுகிறது" என்று அதைப் பார்த்ததும் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு வான மண்டலத்தை நோக்கினுன். சந்திரிகை அவனது கட்டுப்பாட்டின் கடிவாளத்தை அறுத்துவிட்டு மனக் குதிரையை யதேச்சையாக விடுதலை செய்துவிட் டது.

பெருமூச்சுகள் பல தோன்றி அவனது தேகத்தில் ஓர் அதிர்ச் சியை உண்டாக்கின. பொங்கி வரும் நிலவுபோல அவன் ஒளிமுகம்

என்று எப்பொழுதோ படித்த ஞாபகம் அவனுக்கு வந்தது. ஞாபகம் பழைய சம்பவத்தின் பல்லவிதானே? அதற்குப் பின் அநுபல்லவி, சரணம் எல்லாம் தொடர்ந்தன. நடந்துபோன நிகழ்ச்சிகள் அவன் அகக் கண் முன் மறுபடியும் நடைபெற்றன.

''ஈதென்ன முரட்டு வேதாந்தம்?'' என்று அந்த விண்ணின் மோகினி அவனைப் பார்த்துக் கேட்பதுபோல ஒரு தோற்றம். ''ஆம், முரட்டு வேதாந்தம்தான்''. இப்படி அந்த வாலிபன் தன்னை நோக்கியே சொல்லிக்கொண்டான்.

''நீ இன்னும் பக்குவப்படவில்லை. புஸ்தகப் படிப்பு மூளையைத் தான் குழப்பும். இது என்ன சந்நியாசிப் பித்து! மனத்திற்கு உகந்த அவளைக் கல்யாணம் செய்துகொண்டு சுகமாக வாழ்க்கை நடத்துவதை விட்டுவிட்டு, இப்படி யாராவது முரட்டு வேதாந்தத்தில் இறங்கித் தலையைப் போட்டு உடைத்துக்கொள்ளுவார்களா?''

இப்படி யாரோ மிகவும் கம்பீரத்துடன் மனத்திற்குள் மறைந்து அவனைக் கேட்டுவிட்டுக் கல கலவென்று சிரிப்பதாக அவனுக்குத் தோன்றியது. ''ஐயோ! என்னை மறக்க உங்களுக்கு மனசும் வந்ததா? என் ஆத்மா உங்களுக்காக எவ்வளவு தவியாய்த் தவித்துக்கொண்டிருக்கிறது? தெய்வீகத்தைப்பற்றிப் பேசும் தாங்களா இப்படிக் கல்லாய்விடுகிறீர்கள்? கல்லாய் மாறுவதுதான் தெய்வீகமா? இருதயத்தை வலியச் சித்திரவதை செய்வதுடன் அதை அணுக விரும்புவோரையும் வதைப்பதா தத்துவத்தின் தாத்பரியம்? கோவில் தெய்வந்தான் கல் என்றால், உங்கள் இருதயத் தெய்வமும் கல்லாய் மாறிவிட்டதா?'' என்று அந்த மின்னாள் நேரிலேயே வந்து கேள்விகளைக் கேட்கிறாள் என அவன் எண்ணித் திடுக்கிட்டான்.

தன் சிரசை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டு அப்படியே படுக்கையில் படுத்தான். கண்களைக் கெட்டியாக மூடிக்கொண்டான். சரீரம் அதிர்ந்தது. அவன் என்ன முயன்று என்ன பயன்? அவன் எண்ணத்தில் அந்தச் சௌந்தரிய தேவியின் உருவமே ஓடியது. செக்கச் செவேலென்ற முகம் கன்னங்கறேலென்ற கேசஜாலத்தால் கவரப்பட்டிருக்கிறது. பத்ம நேத்திரங்கள் புன்னகையின் ஒளியுடன் மிரளுகின்

றன. பட்டுப்பூச்சிபோன்ற சிவந்த அதர தளங்கள் அசையுந்தோறும், மயில் இறகின் அடிக்குருத்தைப்போன்ற பல்லின் ஒளி தலைகாட்டியது. அவளுடைய நயனாரவிந்தம் காதலின் மிருதுத்தன்மையைப் பேசாமல் பேசுகின்றது. இரத்தம்போன்ற அந்த இதழ்களின் கோடியிலே அடிக்கடி புன்முறுவல் திருட்டுத்தனமாய்த் தலையை நீட்டுகிறது.

"அந்தோ! இந்தக் கண்ணைவிட்டு இவள் போகமாட்டாளா?" என்று துடிப்புடன் புகன்றான் அவன். "நான்தான் அங்கு அடைக்கலம் புகுந்துவிட்டேனே" என்று அந்தச் சுந்தரி பதில் கூறுவதாக ஒரு தோற்றம். அவ்வளவுதான். அவன் மனம் நூறு குதிரை வேகத்தில் ஓட ஆரம்பித்தது. "ஓம், சாந்தி, ஓம், சாந்தி," என்று அவன் சொல்லிக்கொண்டான். எண்ணத்தின் சுமை அவன் நயன இதழ்களைக் கனமாக்கியது.

* * *

அன்று ஞாயிற்றுக்கிழமை; பள்ளிக்கூடம் இல்லை; விடுமுறை நாள்.

காலை ஏழு மணி, அந்த அழகான மெத்தை வீட்டிலிருந்து அவள் புறப்பட்டாள். இன்றைக்கெல்லாம் இருந்தால் அவளுக்கு வயசு பன்னிரண்டுக்குள்ளாகத்தான் இருக்கும். யாரிடமும் வெட்கப்படாமல் கலகலவென்று பேசும் சுபாவம் உடையவள். புத்திசாலித்தனமாகப் பேசுவாள். சிறு குழந்தையாக இருக்கும்போதே இத்தகைய அறிவுத் திறமை அவளிடம் காணப்பட்டது. எல்லோரும் "அடேயப்பா, முளைக்கிறதற்குள்ளேயே இது என்ன பேச்சுப் பேசுகிறது!" என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்.

அவள் பெயர் அலமு. கண்கள் மந்திர பாணங்கள். கண் வீச்சில் குறும்புத்தனம் கலந்திருக்கிறது. கண்ணாடிபோன்ற கன்னங்கள் நல்ல புஷ்டியுடன் விளங்குகின்றன. வளைந்த புருவக் கட்டு அவளுடைய முகாரவிந்தத்திற்கு வெற்றிக் குடை பிடிப்பதுபோல் காட்சி அளிக்கிறது. அளகபாரம் நன்கு வாரப்படவில்லை. முதல்நாள் பின்னிய பின்னல் அப்படியே காணப்படுகிறது. ரோஜாவர்ணப் பாவாடை ஒன்றை

அவள் கட்டியிருந்தாள். மேலே நீலவர்ணத் தாவணி, கொம்பைச் சுற்றிய கொடிபோலத் தவழ்கிறது. கைகளில் மெல்லிய தங்க வளையல்கள். காலில் ஜிலேபிக் கொலுசு.

உல்லன் நூல்களால் பின்னுவதற்கென்றே சின்னச் சின்ன வட்டமான துவாரங்களுடன் கூடிய அட்டை ஒன்றைக் கரத்தில் வைத்தபடியே அலமு அந்த வீட்டிற்குள் நுழைந்தாள். அவளுடைய நெருங்கிய உறவினரின் வீடுதான் அது.

மிராசுதார் ராமசாமி நாயுடு என்றால் அந்த ஊரில் உள்ள எல்லோருக்கும் தெரியும். நிலபுலன்கள் நிறைய உடையவர். ரொக்கமாகப் பாங்கியிலும் பணம் இருந்தது. ஆகவே சுகமாகக் காலத்தைக் கழித்துவருகிறார். அவருடைய ஏக புத்திரன்தான் நாம் மேலே கூறின இளைஞன் வரதன்.

மிராசுதார் வீட்டிற்குள்ளே தங்கு தடையின்றிச் சென்றாள் அலமு. "அம்மா, அம்மா" என்று கூப்பிட்டாள்.

ராமசாமி நாயுடுவின் மனைவி தாயாரம்மாள், "அலமு, எங்கடி காத்தாலேயே புறப்பட்டுவிட்டாய்? காபி சாப்பிட்டாயா? வா, வா, காபி சாப்பிடலாம்" என்று அழைத்தாள்.

"நான் காபி சாப்பிட்டாச்சு. அது கிடக்கட்டும், வரதன் எங்கே? இதோ பார், இதில் ரோஜாப்பூமாதிரி படம் போட்டு நூலினால் பின்னவேண்டும். வரதனுக்கு 'டிராயிங்' போட நல்லாத் தெரியும். அவனிடம் சொல்லி எனக்கு ரோஜாப் பூ மாதிரி 'டிராயிங்' போட்டுத் தரும்படி சொல்றயா? அதுக்குத்தான் காலையிலே இங்கே ஓடி வந்தேன்."

"அவன் மாடியிலே படிச்சுக்கிட்டு இருக்கான். இன்னம் காபி சாப்பிடக்கூட வல்லே. நீதான் போய்க் கேளேன். போட்டுத் தாரான்."

அலமு வெகு வேகமாகப் படிகளில் ஏறினாள். அடுத்த நொடியில் எதையோ நினைத்துக்கொண்டவளாய் மிகவும் மெதுவாக அடிமேல்

அடி வைத்து நடந்தாள். பூனை மாதிரிப் பதுங்கிப் பதுங்கி அங்கிருந்த அறையை அண்டினாள். வரதன் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதை ரகசியமாகப் பார்க்கவேண்டுமென்பதே அவள் நோக்கம்.

அறையின் கதவு சாத்தப்பட்டிருந்தது. ஜன்னலின் கதவும் மூடப் பட்டிருந்தது. அலமு சப்தம் போடாமல் ஜன்னலின் இடுக்கு வழியாக உள்ளே பார்த்தாள். பார்த்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டமாதிரி இருந்தது. "ஐயோ! வரதனுக்குப் பைத்தியம்பிடிச்சு விட்டதா? அடடா! தலைகீழாக நிற்கிறானே!" என்று நினைத்தாள்.

வேடிக்கை செய்து பார்ப்பதில் பிரியமுள்ளவளாதலால் அவள் மனதில் திடீரென்று ஒரு யோசனை உதித்தது. மௌனமாகத் திரும்பிக் கீழே இறங்கிப் போனாள். தாயாரம்மாளின் கையைப் பிடித் திழுத்தாள். "சப்தம் போடாமே வா. உன் பிள்ளை தலைகீழாய் நிற்கிற விநோதத்தைப் பார்க்கலாம்" என்றாள்.

"என்னடி உனக்குப் பைத்தியமா? தலையாவது கீழாவது - போடி போ" என்றாள்.

"ஐயோ, வாயேன், நேரே காட்டுகிறேன்" என்றாள் அலமு.

அலமுவும் தாயாரம்மாளும் மேலே மெதுவாகச் சென்றனர். அலமு சொற்படி ஜன்னலின் இடுக்கு வழியாகத் தாயாரம்மாள் பார்த்தாள். அப்பொழுதுதான் வரதன் சிரசாஸனம் செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தான்.

இதைக் கண்டதும் தாயாரம்மாளுக்குத் திகில் பிடித்துவிட்டது. அறையின் கதவை ஓங்கித் தட்டினாள். தாழிடப்படாமல் இருந்ததால் அது திறந்துகொண்டது.

"அம்மா, கிட்டே போய்விடாதே. வரதனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது," என்று சிரித்துக்கொண்டே கத்தினாள் அலமு.

## நழுவி விழுவானேன் ?

"இதென்னடா வேலை? குடல் கிடல் ஏறிச் சாவதற்கா இப்படிச் செய்கிய்? நல்லவேளை, அலமு வந்து சொன்னாள்" என்றாள் தாயாரம்மாள்.

எதிர்பாராத இச்சம்பவம் வரதனைத் திடுக்கிட வைத்தது. "அதெல்லாம் ஒண்ணும் இல்லை, அம்மா. குடல் கிடல் ஒண்ணும் ஏறாது, பயப்படாதே" என்று சொல்லிக்கொண்டே அலமுவைப் பார்த்துப் பற்களைக் கடித்தான். அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். தாயாரம்மாளுக்கும் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

"சரி, சரி, வா நேரமாச்சு, காபி போட்டு வெச்சிருக்கேன். குடிச்சுவிட்டு, அலமு என்னமோ 'டிராயிங்' போடணும்னு சொல்றா, அதைப் போட்டுக் கொடு".

"யாருக்கு? அலமுவுக்கா? 'டிராயிங்' வேறயா?" இப்படி வரதன் சொல்லிக்கொண்டே அலமுவைப் பார்த்துக் கோணங்கி காட்டினான்.

இதற்கிடையில் அலமு அங்கு மேஜையின்மீது விரித்தபடியே இருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்தாள். அது யோகாப்பியாசங்களைப்பற்றிப் படங்களுடன் விவரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகம்.

"அம்மா. அம்மா, பாத்தியா இதை? இதில் தலைகீழாக யாரோ நிற்கிற மாதிரி படம் போட்டிருக்கு. இதைப் பார்த்துத்தான் வரதனும் செய்திருக்கிறான்" என்றாள் அலமு.

வரதன் கோபத்துடன் அவளிடமிருந்து அந்தப் புஸ்தகத்தைப் பிடுங்கினான். அலமு குறும்புத்தனமாகப் புன்னகை செய்தாள். வந்துவிட்டது மகா கோபம் வரதனுக்கு. அந்தப் புஸ்தகத்தினாலேயே அவளை அடித்துவிட்டான்.

தாயாரம்மாள் குறுக்கிட்டுத் தடுத்தாள். அதற்குள் மாடியில் நடந்த கலாட்டாவின் சப்தத்தைக் கேட்டு மிராசுதார் அங்கு வந்தார். தயாரம்மாள் அவரிடம் நடந்த விஷயங்களைக் கூறினாள்.

“அட ராமா! என் அறையிலிருந்து இவனை யார் இந்தப் புஸ்தகத்தை எடுக்கச் சொன்னது? அதற்குள் யோகாப்பியாசமா?” என்று அதட்டிவிட்டுப் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு திரும்பினார். தாயாரம்மாளும் அவரைப் பின்தொடர்ந்தாள்.

“வரதா, என்மேல் கோபமா? அடே ‘டு’ விட்டுடாதே. எனக்கு ‘டிராயிங்’ போட்டுத் தாடா.”

“சனியன் மாதிரி காலையிலே எங்கே வந்து சேர்ந்தே?”

“என்னை அடிச்சியே, நான் கோவிச்சுக்கிட்டேனா? நீ என்னமோ பிரமாதப்படுத்துறயே” என்றாள் அலமு.

வரதனுக்கு அலமுவிடம் அளவற்ற பிரியம் உண்டு. அவன் கோபங்கொண்டாலும், அவள் சிரித்த அதே நிமிஷம் அவனும் நகைத்துவிடுவான். அவளுக்கும் அவனிடம் அப்படித்தான். அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே சிநேகிதமானவர்கள். இரண்டுபேரும் எத்தனையோ முறைகள் சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அடுத்த நிமிஷம் சமாதானமாகிவிடுவார்கள். ஒரு நாளாவது வரதனைப் பார்க்காமல் அலமு இருக்கமாட்டாள்; வரதனுக்கும் தினசரி அவளைப் பார்த்தால்தான் சமாதானம் ஏற்படும்.

* * *

நவராத்திரி. ஒவ்வொரு வீட்டிலும் அப்போது படிகளை அமைத்துப் பழைய, புதிய பொம்மைகளை அடுக்கி, கொலுவைப்பது வழக்கமல்லவா? அலமு வீட்டிலும் கொலு வைப்பதற்காக முன் ஏற்பாடுகள் நடந்தன. அலமு, அவள் சகோதரன் ராமானுஜம், வரதன் ஆகிய மூவரும் பழைய பொம்மைகளையெல்லாம் எடுத்துத் துணியால் துடைத்துப் படிகளில் அடுக்கினர்.

கடைசியில் வரதன் தன் கைகளைக் கழுவுவதற்காக வாசல் பக்கம் சென்றான். சோப்பினால் தேய்த்துவிட்டுத் தன் இரு கரங்களையும் நீட்டினான். அலமு ஒரு சிறிய பாத்திரத்தின்மூலம் அக் கரங்களின்மீது

தண்ணீர் ஊற்றினாள். அப்பொழுது அலமுவின் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன.

''அடே! எப்போ நீ கையில் பச்சை குத்திக்கொண்டாய்? நான் இதுவரை பார்க்கவே இல்லையே! உன் பேரை அல்லவா எழுதியிக்கு?''

''அதை ஏன் கேட்கிறாய்? ஒரு நாள் என் சிநேகிதர்களில் சிலர் பச்சை குத்திக்கொண்டார்கள். நான் வேண்டாமென்றுதான் சொன்னேன். ஆனால் அவர்கள் பிடிவாதமாய் என் கையிலும் குத்தும்படி செய்துவிட்டார்கள்.''

''உன் கைக்கு இந்தப் பச்சை நிறம் நல்லாத்தான் இருக்கு'' என்று சொல்லி அலமு புன்னகை செய்தாள்.

''அண்ணா, அண்ணா, வரதன் கையை பார்த்தியா? பச்சை குத்திக்கொண்டு இருக்கானே. உனக்குத் தெரியுமா?''

''எங்கே? எனக்குத் தெரியாதே'' என்று அவசரமாக வரதன் சமீபம் ஓடிவந்தான் ராமானுஜம்.

''இதோ பார், வரதன் சிவப்பான கைக்கு பச்சை நல்லாத்தானே இருக்கு? யாராவது வரதன் அல்ல என்று சொல்லிட்டா என்ன செய்கிறதுன்னு நினைச்சுத்தான் அவன் பெயரையே அச்சு அடிச்சமாதிரி குத்திக்கொண்டிருக்கான்.''

வரதன் அவள் பேச்சை ரசித்தான்.

''அதைச் சொல்லத்தான் நான் வாயெடுத்தேன். நீயே சொல்லி விட்டாய்'' என்றான் ராமானுஜம்.

''கோட்டா பண்ணுகிறீர்கள்'' என்று புன்முறுவலுடன் அலமுவைப் பார்த்துக்கொண்டே கூறினான் வரதன்.

* * *

# நழுவி விழுவானேன் ?

"நீ எதற்காக இங்கே வந்தாய்?"

"பின் நான் எங்கே போவது?

"எங்கேயாவது போ, என்னை வந்து தொந்தரவு செய்யாதே."

"அப்படியானால் பால்யம் முதற்கொண்டு வளர்த்துவந்த நம் காதலின் கதி என்ன?"

"காதலாவது மண்ணாங்கட்டியாவது! என் வாழ்க்கையின் லட்சியத்தை மாற்றிக்கொண்டுவிட்டேன். இது உனக்குத் தெரியாதா? இப்பொழுது சொல்கிறேன், கேட்டுக்கொள். என்னை இனி நம்பவேண்டாம். இந்த மாயையில் நான் விழமாட்டேன். புத்தி ஆத்ம விசாரணையில் இறங்கிவிட்டது. நீயல்ல, வேறு எத்தகைய ரூபவதியாலும் என்னை ஏமாற்ற முடியாது. இதை நிச்சயமாக நம்பலாம். ஆத்ம விடுதலைக்கு இந்தப் பெண்கள் பெரிய தடை என்று நினைக்கிறேன்."

"பக்குவப்படாத கொள்கை! சிருஷ்டியில் பெண்கள் பாபகரமானவர்களா? அவர்கள் குறுக்கே நிற்பதாக நீங்கள் ஏன் கருதுகிறீர்கள்? இது சரியல்ல. விஷ்ணு லக்ஷிமியுடன் இருக்கிறார், சிவபிரான் உடலில் பாதியாகப் பார்வதி விளங்குகிறாள். பிரமன் சரஸ்வதியுடன் வாழ்கிறார். இவ்விதம் நீங்கள் வணங்கும் கடவுள்கள் எல்லோரும் தாம்பத்திய வாழ்க்கையுடன் கூடியவர்கள் என்றே புராணங்கள் கூறுகின்றன. அவைகளை எல்லாம் மறந்துவிட்டீர்களா?"

"இந்த உபதேசத்தை உன்னிடமிருந்து நான் கேட்க விரும்பவில்லை. நீ போகலாம்."

"எங்கே?"

"இஷ்டமான இடத்திற்கு."

"இது தர்மமா? இதுதான் வேதாந்தம் படித்ததன் விளைவா? வேதாந்திகளும் மனிதர்கள்தானே? அவர்களுக்கு இருதயம் கிடை

யாதா? நான் எங்கே செல்வேன்? நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மறந்துவிட்டீர்களா? என்னை இப்படி நடுச்சந்தியில் கைவிடலாமா? இது நியாயம் அல்ல. சத்தியமாகச் சொல்லுகிறேன், தாங்கள் கைவிட்டால் நான் உயிர்விடுவது நிச்சயம். பெண் பாவம் பொல்லாதது. பாவம், புண்ணியம் உங்கள் கையில்."

"வம்பு அளக்கவா இங்கே வந்திருக்கிறாய்? மரியாதையாகப் போய்விடு. நீ இருந்தாலும் இறந்தாலும் எனக்கு ஒன்றுதான். போ, போ."

"முடியாது, முடியாது. என் கதி என்ன?"

"யாரைக் கேட்கிறாய்?"

"உங்களைத்தான்; கட்டாயம் கல்யாணம் செய்துகொள்ளுகிறேன் என்று வாக்குறுதி செய்துகொடுத்த உங்களைத்தான் கதி என்றிருக்கிறேன்."

"நீ போகாவிட்டால் உன்னைப் பலாத்காரமாகப் பிடித்து வெளியே தள்ளுவேன். என் மனதைக் கெடுக்க வந்த மாயையின் சொரூபம் நீ" என்று அவன் அவளைப் பிடித்துத் தள்ளினான்.

"ஐயோ! நான் எங்கே போவேன்? தெய்வமே" என்று சொல்லிய வண்ணம் அவள் மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள்.

இந்தக் கட்டத்தில்தான் வரதன் கனவு கலைந்தது. படுக்கையிலிருந்து திடீரென்று எழுந்தான். தன் கண்களைக் கசக்கிக்கொண்டான். நான்கு பக்கங்களிலும் பார்த்தான்.

"ஈசுவரா, இதுவும் உன் சோதனையா? அலமுவை மறக்கும் சக்தியை எனக்கு அளிக்கமாட்டாயா? இந்தப் போராட்டத்துடன் எத்தனை நாட்களைக் கழிக்க முடியும்? பால்ய முதற்கொண்டே எனக்கு இந்த வேதாந்த விஷயங்களில் பற்றை உண்டாக்கிய நீ, இந்தப்

பிரேமை என்கிற மயக்கத்தையும் ஏன் உண்டாக்கினுய்? அலமு, நீ தான் தயவு செய்து என்னை மறந்துவிடேன்'' என்ருன்.

வரதன் சென்னையில் தனித்த மாடியில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வசித்துவருகிருன். பி. ஏ., பரீட்சைக்குப் படிக்கிருன். அவன் தகப்பனர் மாதந்தோறும் செலவுக்குப் பணம் அனுப்பிவருகிருர்.

வரதன் தங்கமானவன். சிறு குழந்தை முதற்கொண்டே ஈசுவர பக்தியுடையவன். நல்ல புத்திசாலி. நன்ருக அறிவு வளர வளர வேதாந்த நூல்கள் அவன் மனத்தை ஆகர்ஷித்தன. பெண்ணுசையை ஒழிக்க வேண்டும் என்பதை அறிவிக்கும் பல புஸ்தகங்கள் அவன் மூளையைக் குழப்பிவிட்டன.

வனிதாமணிகளிடம் ஒருவகை வெறுப்புக்கொள்ளத் தொடங்கினன். ஸ்வாமி விவேகானந்தரின் வாழ்வு அவன் மனதிற்கு மிகவும் பிடித்திருந்தது. ''ஞான மார்க்கத்தில் இறங்கவேண்டும். இமயமலையை அடைந்து தியானத்தில் அமர்ந்து ஈசுவரனுடன் கலக்கவேண்டும்'' என்ற ஆபேக்ஷை அவன் உள்ளத்தைக் கவர்ந்திருந்தது.

இதன் விளைவாக அவன் ஆத்ம விசாரணையில் மனத்தை ஈடுபடுத்த முயன்றுவந்தான். இளமை முதற்கொண்டே உருவாகி வளர்ந்துவந்த அலமுவின் காதலையும் திரஸ்கரிக்க முடிவுகட்டிவிட்டான். ஆனுல் மனம் கட்டுப்படாமலேயே இருந்தது.

* * *

அலமுவின் தமையன் ராமானுஜத்திற்குக் கல்யாணம். மதுரை நகரின் ஒரு முக்கியமான தெருவில் உள்ள ஒரு பெரிய வீட்டில் அந்தக் கல்யாணம் நடந்தது. கல்யாண வைபவத்தில் கலந்துகொள்ளுவதற்காக வரதன் ரஜாப் பெற்றுக்கொண்டு ஒருநாள் முன்பாகவே சென்னையிலிருந்து மதுரைக்கு வந்துவிட்டான். கல்யாண ஏற்பாடுகளில் பெரிதும் பங்கெடுத்துக்கொண்டான்.

வரதன் அலமுவுடன் பேசக்கூடாதென்றே சங்கல்பம் செய்து கொண்டான். அவளுடன் பேசாமல் இருக்கத் தந்திரமாகச் சந்தர்ப்பங் களுக்குத் தக்கபடி நடந்தான்.

அலமு புத்திசாலி அல்லவா? வரதனுடைய நோக்கத்தை விரை வில் ஊகித்து அறிந்துகொண்டாள். அவன் பாராமுகமாயிருப்பது அவ ளது இருதயத்தை நைய வைத்தது. தனியாகச் சந்தித்து அவனுடன் சம்பாஷிக்கவே அவள் துடித்தாள். ஆனால் அதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. வெகு சுலபமாக அவளும் வரதனும் சந்தித்துப் பேசிக் கொள்ளலாம். வரதன் அதற்கு இடம் கொடுக்காமலே நடந்துகொண் டான்.

ஊர்வல தினம் வந்தது. பிரபல நாகசுரக்காரனின் கச்சேரியுடன் புறப்பட்ட அந்த ஊர்வலம், இப்பொழுது கல்யாண வீட்டை நோக் கித் திரும்பி வந்துகொண்டிருக்கிறது. அழகான கண்ணாடி முத்துக் களால் சித்திர வேலைப்பாடுகளுடன் படகைப்போல ஜோடிக்கப்பட்ட மோட்டார் வாகனத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் அமர்ந்திருக்கிறார் கள். அந்த மோட்டார் வண்டியின் ஓரமாக மாப்பிள்ளையுடன் பேசிக் கொண்டே வரதன் வருகிறான்.

ஊர்வலம் தெருக்கோடியில் நின்றது. நாகசுர வித்துவான், சில் லறை உருப்படிகளை வாசிக்கத் தொடங்கினான். தவுல்காரனும் பக்க வாத்தியமென்ற முறையில் 'இதவாக' வாசிக்க ஆரம்பித்தான். ஆனால் இடை இடையே சில சந்தர்ப்பங்களில் தாளக்காரன் நாகசுரக்கார னின் கோபப் பார்வைக்கு ஆளானான். இந்தக் காட்சியை மிகவும் பிர சித்திபெற்ற மேளக் கச்சேரியில் கூடச் சர்வ சகஜமாகப் பார்க்கலாம். சில வேளைகளில் நாகசுரக்காரனே தாளத்தைத் தவற விட்டுக் கால நிர்ணயமில்லாமல் வாசித்துவிடுவான். அதைச் சமாளிக்கவும், பிறர் அதை அறியாமல் இருக்கவும் அவன் தாளக்காரன் தப்பாகத் தாளம் போட்டுவிட்டான் என்று அவன்மீது பாய்வதும் உண்டு.

மாப்பிள்ளையின் தகப்பனாருடைய வேண்டுகோளின்படி வரதன் சில ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக ஊர்வலத்தை விட்டுக் கல்யாண

வீட்டை நோக்கிப் புறப்பட்டான். குறிப்பிட்ட ஒரு வெள்ளித் தட்டை எடுப்பதற்காகக் கல்யாண வீட்டிற்குப் பக்கத்தில் அவன் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றான். சென்றதும் ஆச்சரியமும் ஒருவகையான அதிர்ச்சியும் அவன் கால்களைப் பின்னுக்குத் தள்ளின.

துக்கமே உருவெடுத்த பதுமைபோல அலமு அங்கே உட்கார்ந்திருந்தாள். விழிக் கடைகளிடையே நீர் ததும்பி நின்றது. காலடிச் சப்தம் கேட்டதும் குப் என்று எழுந்தாள்; கண்களைத் துடைத்தவண்ணம் தன்னைச் சமாளித்துக்கொண்டாள். பேசவேண்டும் என்று அவள் கனிவாய் துடித்தது. அப்படியே அவனைப் பிடித்துக்கொள் என்றது ஆசை. வெட்கமும், கட்டுப்பாடும், ஒழுக்கத்தின் பழக்கமும் அவளைத் தடுத்தன.

ஒன்றும் சொல்லாமல் வரதன் வெளியே போக எண்ணித் திரும்பினான். அவளால் இதைப் பொறுக்கமுடியவில்லை. வெட்கம் விடை பெற்றது. ஒழுக்கமாகிய 'உடை'யில் மறைந்து வரும் கட்டுப்பாடு தகர்ந்தது. ஆசையும் ஆவலும், அன்பும் பிரியமும் இறக்கைகள் கட்டிக்கொண்டு போட்டிபோட்டுப் பறந்தன. முடிவு என்ன? ஓடிப் போய் அவன் கையைப் பற்றிக்கொண்டாள். "நான் என்ன பாவம் செய்தேன்? உங்களுக்கு என் முகத்தைப்பார்க்க பிடிக்கவில்லையா?" என்று பரிதாபத்துடன் கேட்டாள்; விம்மினாள். அவளது அமுதக் குரலில் காதலும் ஆசையும் கலந்திருந்தன.

வரதன் மௌனம் சாதித்தான். அவள் கரத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றான். அவள் விடவில்லை. அவன் செய்கை அவள் நெஞ்சத்தில் முள்ளைக்கொண்டு குத்துவதுபோல் இருந்தது.

"அலமு, நீ இன்னும் சின்னக் குழந்தைதானா? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?"

"அந்த நினைப்பே எனக்கில்லை."

"சரி, சரி, ஊர்வலம் சமீபத்தில் வந்துவிட்டதென்று நினைக்கிறேன். நான் போகவேண்டும்."

"முடியாது. இன்னும் ஊர்வலம் நெருங்கவில்லை."

"அலமு, இதுவா பரிகாசம் செய்யும் நேரம்? நீ எதற்காக இங்கே வந்தாய்? நீ ரொம்ப குணவதி என்றல்லவோ நினைத்திருந்தேன்?"

"என்னை ஏன் இப்படி வார்த்தைகளால் கொல்லவேண்டும்? வேண்டாம். நான் ஏன் இங்கே வந்தேன் என்பதை உங்கள் நெஞ்சில் கை வைத்துக் கேட்டுப் பாருங்கள். அந்த நெஞ்சு பதில் சொல்லும்."

வரதன் பதில் பேசாமல் வெள்ளித் தட்டை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அலமு சிறு குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி அழுதாள்.

இதைப் பார்த்து வரதன் "அலமு, நீ உலகம் அறியாதவளாய் இருக்கிறுயே. இதுதான் புத்திசாலிக்கு அழகா?" என்று கேட்டான்.

"ஒரு சங்கதி......" என்றுள் அலமு.

"சீக்கிரம் சொல்."

"கல்யாணத்திற்கு ஏற்பாடுசெய்து வருகிறுர்கள்."

"ரொம்ப சந்தோஷம். உன் அண்ணன் கல்யாணத்தில் உழைப்பதைவிடப் பன்மடங்கு அதிகமாக உன் கல்யாணத்திலும் உழைக்கிறேன்."

அவளுடைய உள்ளத்தில் ஓர் அக்கினிப் பிரளயத்தை உண்டாக்கின அந்த வார்த்தைகள். இருதய மண்டலம் எரிமலையின் அதிர்ச்சியால் வெடிப்புக்கொண்டதுபோல மாறிவிட்டது.

இந்தச் சமயம் ஊர்வலம் வந்துவிட்டது. கீழே யாரோ, "வரதா, வரதா" என்று கூப்பிடும் சப்தம் கேட்டது.

"அலமு, மன்னித்துக்கொள். பிறகு எல்லாம் பேசிக்கொள்ளு

வோம். நான் போகிறேன்" என்று கூறிவிட்டு வரதன் அங்கிருந்து போய்விட்டான்.

அலமுவின் மூளை சுழன்றது. உயிர் துடித்தது. வரதனுடைய வார்த்தைகளினூடே அமைந்த தாத்பரியம் அவளது சந்தேகத்தை அதிகமாக்கியது. எத்தகைய முடிவுக்கும் அவளால் வரமுடியவில்லை. வருங்காலம் மகா பயங்கரமாகத் தோன்றியது. உயிர் இருந்தும் அற்ற வளைப்போல் ஸ்தம்பித்து அப்படியே நின்றாள்.

ஊர்வலம் அதற்குள் கல்யாண வீட்டின் முன்னால் வந்து நின்றது. பெண்ணும் மாப்பிள்ளையும் இறங்கினார்கள். நாகசுரக்காரர்கள் 'கெட்டி மேளம்' வாசித்தார்கள். 'கெஜ கெஜ' என்ற இசையின் ஓசை. தாளத்தின் தொனி துரிதகாலத்தில் கேட்டது. இந்தச் சப்தம் அலமுவின் மேனியைப்போட்டுக் குலுக்கி எடுத்தது.

* * *

இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் கடந்திருக்கலாம். அதற்குள் எவ்வளவோ மாறுதல்கள்; ஒவ்வொருவரின் ஜீவியத்திலும் வெவ்வேறுவிதமான மாறுபாடுகள். வேங்கடராஜுலு நாயுடுவின் ஜீவியத்திலும் ஒரு பெரிய மாற்றம். அவர் சென்ற இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு முன்புவரையில் கல்யாணமே செய்துகொள்ளுவதில்லை என்றுதான் உறுதியுடன் இருந்தார். ஆனால் இன்றோ குடும்பஸ்தராகிவிட்டார். சௌந்தரியமும், உத்தமமான குணமும் பொருந்திய ஒரு பெண்மணியை மனைவியாகப் பெற்றிருக்கிறார்.

அவர் சாத்விகமானவர். நற்குணம் உடையவர். வேதாந்த விஷயங்களில் பெரிதும் பற்றுடையவர். பக்தி மார்க்கத்தில் அவருக்கு எல்லையற்ற நம்பிக்கை உண்டு. சென்னையில் உள்ள ஒரு பிரபல கலாசாலையில் தலைமைத் தமிழாசிரியராக வேலை பார்த்து வருகிறார்.

அவருடைய மனைவி மிகவும் பயபக்தியுடன் நடந்துவருகிறாள். அவருக்கு அவள்மீது உயிர். சில சமயங்களில் அவள் வதனத்தில் திடீ

றென்று துக்கத்தின் சாயை படர்வதுண்டு. அவர் காட்டிய அன்பும் மாசற்ற பிரியமும் அத்துன்பச் சாயலைப் பறக்கடித்துவிடும்.

ஒருநாள் காலை நேரம். "நாம் பாக்கியம் செய்தவர்களே. சுவாமி கருணாகரர் என் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கே விருந்துக்கு வர ஒப்புக்கொண்டுவிட்டார்" என்றார் நாயுடு.

"நேற்று உங்கள் கலாசாலையில் பிரசங்கம் செய்தார் என்று சொன்னீர்களே, அந்த சுவாமிகளா?"

"ஆம், அவர்தாம். பெரிய ஞானி. தெளிவான அறிவுடையவர். அவருடைய புகழ் இந்தியா எங்கும் பரவிவருகிறது. கூடிய சீக்கிரம் அமெரிக்கா முதலிய தேசங்களுக்கும் இந்து மதத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்யப் போகப் போகிறாராம்."

"அவர் வட இந்தியாவைச் சேர்ந்தவரா?"

"எனக்கு அவர் பூர்விகம் விவரமாகத் தெரியாது. அவர் நம் பக்கத்தைச் சேர்ந்தவராம். கொஞ்ச காலத்திற்கு முன்புதான் ஒரு வட இந்தியச் சாதுவுடன் ஹிமய மலைக்குச் சென்று தியானம், யோகங்களில் ஈடுபட்டுச் சித்தி அடைந்தவராம். ஆரம்பத்தில் அவர் பெற்றோர்கள் அவருடைய இஷ்டத்திற்கு எதிராயிருந்தார்கள் என்றும், குடும்பத்தார்களுக்குத் தெரியாமலேயே ஹிமயமலைக்குச் சென்றார் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர் நன்றாகப் பிரசங்கம் செய்கிறார். அவருடன் தனியாகப் பேசும்போது ஏதோ தெய்வமே பிரசன்னமாகிப் பேசுவதுபோலத் தோன்றுகிறது."

"அப்படிப்பட்ட மகானின் தரிசனம் கிடைப்பது அருமைதான்."

"வாரத்தில் ஒரு கிழமைதான் அவர் கையன்னம் உட்கொள்ளுவது வழக்கமாம். மற்ற நாட்களில் பழங்களும் பாலுமே ஆகாரம். அதிர்ஷ்டவசமாக அவர் அன்னம் புசிக்கும் கிழமை நாளை வருகிறது."

இவ்விதம் வேங்கடராஜுலு நாயுடுவும் அவர் மனைவியும் பேசிக்கொண்டார்கள்.

அவள் மனத்தில் மாத்திரம் என்றைக்கும் இல்லாத அதிர்ச்சி உண்டாயிற்று. ஆத்மாவின் ஆழத்தில் அமுங்கி நசுக்கப்பட்டிருந்த ஏதோ ஒன்று மீண்டும் தலைகாட்டுவதாக அவளுக்குத் தோன்றியது. "ஹே பகவானே! பிரேமை பாபகரமாகக் கருதப்படுமானால் அந்தப் பாவத்தை நீதான் மன்னிக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டாள். நாளைத்தினம் இங்கு வரும் மகானின் ஆசீர்வாதத்தினாலும் தரிசனத்தினாலும், அந்தப் பாபமும் நீங்கிப் பரிசுத்தமாகிவிடுவேன்" என்று எண்ணினாள்.

* * *

மறுநாள், நடுப்பகல் இன்னும் நெருங்கவில்லை. வேங்கடராஜுலு நாயுடுவின் வீட்டிற்கு முன் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து சுவாமி கருணாகரர் இறங்கினார். அவருடன் ஒரு நண்பரும் வந்திருந்தார்.

அமைதியில் பூத்த புன்னகையுடன் சுவாமி கருணாகரர் ஒரு சாய்வான நாற்காலியில் அமர்ந்தார். சுவாமிகளிடம் வணக்கமாக ஏதோ தெரிவித்துவிட்டு நாயுடு உள்ளே போனார்.

"எல்லாம் தயாராகிவிட்டதா?" என்று தம் மனைவியைப் பார்த்துக் கேட்டார் நாயுடு.

"சகலமும் தயார். சுவாமிகளைக் கூப்பிட்டு வரலாம்."

"சரி, முதலில் நீ சுவாமிக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் போ."

அவள் தலை அசைத்தாள். அவள் மனத்திற்குள் ஏதோ போராட்டம். "மகானின் தரிசனத்தால் என் மனசைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளுகிறேன்" என்று உறுதி செய்துகொண்டாள்.

வெளிக் கூடத்தை நோக்கி நாயுடுவைப் பின்பற்றி அவள் வந்தாள். சுவாமிகளின் திவ்ய தேஜஸ் மிகுந்த வதனத்தை அவள் நேத்திரங்கள் பக்தியுடன் பார்த்தன. அவளுடைய ஆத்மா ஈசுவரன்

பாதத்தை நோக்கிச் சரணம் அடைவதுபோல அம்மகானின் அடிகளை நோக்கியது.

அவள் அவர் பாதத்தடியில் நமஸ்கரித்து எழுந்தாள். வாலிப சந்நியாசி அப்பெண்ணின் முகத்தைச் சரியாகப் பார்க்கவில்லை. அவர் தம் இரு கரங்களையும் தூக்கி ஆசீர்வதித்துவிட்டு அங்கிருந்த மற்ருெருவருடன் பேசுவதில் கவனம் செலுத்திஞர். நாயுடுவின் மனைவி மறுபடியும் உள்ளே போய்விட்டாள். உடனே, "எல்லாம் தயாராக இருக்கிறது. எழுந்தருளும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்ருர் நாயுடு.

சுவாமி கருணைகரரும் மற்றவரும் ஆசனத்திலிருந்து எழுந்திருந்து நாயுடுவைப் பின்பற்றி உள் கூடத்திற்குச் சென்ருர்கள். உடனே நாயுடு "அலமு, அலமு, சீக்கிரம் ஒரு பாத்திரத்தில் ஜலம் கொண்டு வா" என்ருர்.

அலமு ஜலம் நிறைந்த வெள்ளிக் கூஜா ஒன்றையும் பெரிய வெள்ளித் தப்ளரையும் எடுத்துக்கொண்டு வந்தாள்.

அலமு என்ற சொல் சுவாமிகளைத் தூக்கிவாரிப்போட்டது. என்றும் அனுபவித்து அறியாத ஒருவகையான சலனம் அவர் சரீரத்தில் ஊடுருவியது. பயங்கரமான அந்தகாரம் தம்மை வந்து மூடுவதாக எண்ணிக்கொண்டே எதிரே தண்ணீர்ப் பாத்திரத்துடன் வந்த அலமுவை கூர்ந்து நோக்கிஞர். கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகமும் நிவிர்த்தியாகிவிட்டது. இயக்கப்பட்ட இயந்திரத்தைப்போல அவருடைய கரங்கள் அவளிடமிருந்து தண்ணீர்ப் பாத்திரத்தை வாங்க முன் நோக்கின.

மனைவியின் கையிலிருந்து பாத்திரத்தைத் தாம் வாங்கிக் கொடுக்க எண்ணியிருந்தார் நாயுடு. அதற்குள் சுவாமிகளே கைகளை நீட்டிவிட்டதால் அலமு பயபக்தியுடன் தண்ணீருடன் இருந்த வெள்ளித் தம்ளரை அவரிடம் கொடுத்தாள். அதை அவர் வாங்கியபோது அவள் கமலக் கண்கள் அந்தச் சந்நியாசியின் கரத்தின்மேல் பச்சை குத்தப்பட்டிருந்ததைக் கவனித்துவிட்டன. 'வ-ர-த-ன்' என்று அங்கே பச்சை

யால் வரையப்பட்டிருந்ததை அவள் படித்தாள். அவ்வளவுதான். குபீர் என்று அவள் தேக முழுவதும் வியர்வை. சரீரம் ஆட்டம் கண்டது. 'ஹா' என்ற சிறு சப்தத்துடன் சந்நியாசியை நோக்கினுள். அந்தோ! கையிலிருந்த கூஜா தானாக நழுவிக் கீழே 'பொத்' என்று விழுந்துவிட்டது.

அதே சமயத்தில், தம்ளரில் உள்ள ஜலத்தால் கரத்தைக் கழுவப் பிரயத்தனப்பட்ட பொழுது கருணாகர சுவாமிகள் வசமிருந்த தம்ளரும், பிரக்ஞையற்ற ஒருவர் கையிலிருந்து நழுவி விழுவதுபோல விழுந்துவிட்டது. ஓவியக்காரனால் உயிர்பெய்து எழுதப்பட்ட சோகம் ததும்பும் இரு சித்திர உருவங்களைப்போல அவர்கள் இருவரும் காணப்பட்டனர். அவர்களின் மனத்தில் என்ன தோன்றிற்றோ? அவர்கள் கைகளிலிருந்து பாத்திரங்கள் நழுவி விழுவானேன்?

வேங்கடராஜுலு நாயுடுவால் அவர்களின் ஆத்மாவுக்குள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இரகசிய வஸ்துவைப்பற்றி எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? கவனக்குறைவாக நடந்துகொண்ட தம் மனைவியைச் சிறிது கோபத்துடன் பார்த்தார்.

அவள் முகத்தில் திகிலும் அச்சமும் கலந்து பிரதிபலித்தன. தன் கணவரது கோபக் குறியை உணர்ந்தாள். "பாபத்தைப் போக்கப் புண்ணியத்தை நாடினேன். புண்ணியம் பாவமாய்விட்டது." இப்படி நினைத்த அவள் இருதயம் பாரத்தால் குடைசாய்ந்தது. சட்டென்று கீழே விழுந்த கூஜாவை எடுத்துக்கொண்டு உள்ளே போகத் திரும்பினாள். அவள் நயனங்களில் ஜலம் பெருகியது.

நாயுடுவின் கோபக்குறியைச் சுவாமிகள் அறிந்தார். தம் மனநிலையைச் சரிப்படுத்திக்கொண்டு "நாயுடுகாரு" என்று அமைதியுடன் கூப்பிட்டுவிட்டுக் கீழே விழுந்த தம்ளரைத் தாமே எடுத்தார்.

"சுவாமி, அபசாரம் நேர்ந்துவிட்டது. மன்னிக்க வேண்டும்" என்றார் நாயுடு.

## நழுவி விழுவானேன் ?

"நாயுடுகாரு, அபசாரம் ஒன்றும் ஏற்படவில்லை. நீர் ஏன் கோபம் காட்டவேண்டும்? தவறுதல் ஏற்படுவது சகஜந்தானே? கையிலிருந்து பொருள் நழுவி விழுவது போலத்தான் மனிதனும் சில சமயங்களில் வாழ்க்கையின் உச்சமாகிய உன்னத ஸ்தானத்திலிருந்து வழுக்கி விழுந்துவிடுகிறான்" என்றார் சுவாமிகள்.

"உண்மைதான்" என்றார் அங்கிருந்த மற்றொருவர்.

இருந்தாற்போலிருந்து ஆகாயம் இருண்டுவிட்டது. சூரியன் இருக்கும் இடம் தெரியவில்லை. கார்முகில்கள் கூடின. மின்னல்கள் 'பளிச், பளிச்' என்று பாய்ந்தன. பலமான காற்று விர் என்று அடிக்கத் தொடங்கியது. இடையே இடிகளின் சப்தம். மழையும் பலமாகப் பெய்ய ஆரம்பித்தது.

சுவாமிகளின் மனமும் அலமுவின் நெஞ்சமும் மின்னல் இடிகளுடன் கூடிய இருண்ட வானமாய் மாறிவிட்டன!

மழைக்குப் பயந்து அந்த வீட்டின் திண்ணையின் பக்கம் ஏறி நின்ற ஒரு பரதேசி பின்கண்ட பாட்டைப் பாடத் தொடங்கினான். எல்லோருடைய கவனத்தையும் அந்தப் பாட்டு, பிடித்து இழுத்தது:—

"நந்த வனத்தில் ஓர் ஆண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந்தான் ஒரு தோண்டி அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!"

# ஊதிய விளக்கு

இந்த உலகத்தில் நம்பக்கூடாத வஸ்து எது என்று யாராவது என்னைக் கேட்டால், நான் ஆயிரம் தெய்வத்தின் தலையிலடித்துச் சொல்லத் தயார், 'மனது' என்று. ஆனல்,இந்த மனத்தை நம்பித்தான் வாழ்க்கை நடத்தவேண்டியிருக்கிறது.

மனது சிருஷ்டியிலே மிகமிக நுட்பமானது. ஆனல் அது வாழ்க்கையில் போடும் புதிர்கள் மிக மிகக் கடினமானவை.

இம்மனத்திற்கு ஒரு தத்துவம்! மனோத் தத்துவம் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள் அறிஞர்கள். ஆனல் எனக்கென்னமோ, இந்த மனது தத்துவத்தையும் ஏமாற்றக்கூடியது என்று தோன்றுகின்றது!

ஒழுக்கம், பரிசுத்தம், சீலம் என்றெல்லாம் வாயைக் கிழித்துக் கொண்டு சிலர் பேசுகிறார்கள் அல்லவா? அவர்களைப்பார்த்து இந்த மனது கேலி செய்கிறது.

யுத்த காலத்தில் எல்லோருடைய நன்மையை உத்தேசித்து மூலாதாரமான உணவுப் பொருட்களைக் கட்டுப்பாடு செய்கிறார்கள். அது போல வாழ்க்கையின் நன்மையை உத்தேசித்து 'இந்த மனத்தை முதலில் கட்டுப்பாடு செய்' என்று ஞானிகள் உபதேசம் செய்கிறார்கள். மனது சிரித்துக்கொண்டே ஞானிகளைப் பார்த்துக் கூறுகிறது: 'மனித சுபாவம் என்று ஒன்று இருக்கிறதென்பது ஞாபகமிருக்கட்டும்.'

பாவம், புண்ணியம், நரகம், ஸ்வர்க்கம் என்றெல்லாம் ஒழுக்கம் புரோகித மனப்பான்மையில் மனதைப் பயமுறுத்தப் பார்க்கிறது! 'பாவமா? புண்ணியமா? ஸ்வர்க்கமா? நரகமா? இவைகளின் ஆஸ்தான மண்டபமே நான்தானே!' என்று மனது தத்துவம் பேசுகிறது. ஆகையால் மனது பிடிபடாத ஒரு சங்கதி. ஆனல், அதையும் கட்டிப்போடுவது அன்பு. கைகூடாத விஷயங்களால் கஷ்டப்படும் மனத்தைக் கை தூக்கிவிடுவது இந்த அன்புதான். ஆனல், ஒன்று. எவ்வளவுதான்

அன்பு இருக்கட்டுமே; அங்கும் இந்த மனதைப் பூராவும் அறிந்து கொள்ள முடிவதில்லை. ஏன்? வாழ்க்கையில் சொல்லக்கூடியவைகளும் சொல்லக்கூடாதவைகளும், சொல்ல முடியாதவைகளும் இருக்கின்றன. இவைகளை மனது இரகசியமாக வைக்கவே விரும்புகிறது! சொல்லலாமா? சொல்லக்கூடாதா? என்று கடைசியாகத் தீர்ப்பு அளிக்கும் உரிமை மனதிற்குத்தான்! மனத்தின் கட்டளைப்படி என் கதையைச் சொல்லுவதென்று தீர்மானித்துவிட்டேன். கதைகளிலே, காவியங்களிலே வரும் லட்சியப் பூர்வமான பாத்திரங்களை மனத்தில் வைத்துக்கொண்டு இதைப் படிப்பவர்கள் கட்டாயம் ஏமாறவேண்டும். ஏனெனில், நான் லட்சியப்பூர்வமான, மகா பரிசுத்தமானவர்களைப்பற்றி சொல்லப்போவதில்லை. நான் சொல்லப்போகிறவர்களை நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கை நடத்தும் கூட்டங்களில் காணலாம். ஆனால் மனதுதான் அவர்களைப் போர்த்திவைத்திருக்கிறது.

தவறுதல் மனித இயற்கை என்று சொல்லுவதை நிதர்சனமாகக் காட்டும் 'ஜீவன்' கள்தானே அதிகம்! அந்த மாதிரி 'ஜீவன்' களிடம் தான் எனக்கு நம்பிக்கை அதிகம். ஏனெனில் அவர்களைச்சுற்றி லட்சியக்கோட்டை இல்லை. மனதையும், மனித சுபாவத்தையும் அவர்களிடம் பார்க்கிறோம். இதில் இன்னொரு விசேஷம். மனத்தின் லட்சணத்தையும், மனித சுபாவத்தின் குணத்தையும் உணர்ந்தவர்களுக்கு மன்னிக்கும் தேவசுபாவமும் வந்துவிடுகிறது. லௌகிகக் கட்டுப்பாடு என்று கூறி இந்த மன்னிப்பைக்கூட மனம் கிண்டல் செய்கிறது.

* * *

சமீபத்தில்தான் எனக்குக் கல்யாணம் செய்துவைத்தார்கள்; இல்லை, மன்னிக்கவும், நான் கல்யாணம் செய்துகொண்டேன். இவ்விதம் சொல்லுவதற்குக் காரணமுண்டு. 'சுபயோக சுபவேளையில் சிவபெருமானின் கிருபையை முன்னிட்டு, பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, இஷ்டஜன, பந்துமித்திரர் சமேதராய் இரண்டுநாள் முன்னதாகவே வந்திருந்து தம்பதிகளை ஆசிர்வதிக்கவேண்டுமென' கேட்கப்பட்டு என் கல்யாணம் நடைபெறவில்லை. என் மனைவியை நானே தேர்ந்தெடுத்து பெற்றோர்களின் சம்மதம் இல்லாமலே கல்யாணம் செய்துகொண்டுவிட்டேன்.

இது எங்கள் குதும்பத்தில் பெரிய எதிரொலியைக் கிளப்பிவிட்டது. கல்யாணத்திற்கு தகப்பனார் வரவேயில்லை. ஒரே பிடிவாதமாக இருந்துவிட்டார். 'நான் இவன் கெடுதலுக்கா சொல்லுவேன்? என் வார்த்தையை மீறுவதா? நான் வளர்த்த பயல். தகப்பன் என்ற மரியாதை வேண்டாமா? ஜாதி எப்படியோ? குலம் எப்படியோ? படித்தவள் என்று எவளையோ ஒருத்தியைக் கல்யாணம் செய்துகொண்டுவிட்டான். இனி சாகும்வரையில் அவன் முகத்தில் விழிப்பதில்லை' என்று என் தகப்பனார் சபதம் எடுத்துக்கொண்டுவிட்டார். பெற்ற மனம் பித்து என்பார்கள்! என் தாயாருக்கும் இக்கல்யாணத்தில் இஷ்டம் இல்லைதான்; இருந்தாலும் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. எப்படியோ தன் மகன் சந்தோஷமாகக் குடும்பம் நடத்தினால் போதும் என்று எண்ணினாள். கல்யாணத்திற்கு வந்திருந்தாள். முடிந்ததும் வீட்டிற்குப் போய்விட்டாள். இதற்காக என் தகப்பனார் அவளுடன் ஒரு மாதம்வரையில் பேசவில்லையாம்! எப்படி தண்டனை! அத்துடன் நின்றுவிடவில்லை: 'காலிப் பயல்மாதிரி கண்டவளைக் கல்யாணம் செய்துகொண்டிருக்கும் அவனை நினைத்து ஒரு முழுக்குப் போட்டுவிடு. இனி அவனைப் பார்க்கப்போனால் என்னை மறந்துவிடு' என்று தந்தை உத்தரவுபோட்டுவிட்டார். அந்தோ! தகப்பனாரின் பிடிவாதத்தால் என் தாய் உள்ளம் எப்படிக் கஷ்டப்பட்டதோ?

பெற்றோர்களின் மனதைக் கஷ்டப்படுத்தி நாம்தான் ஏன் இந்தக் கல்யாணத்தைச் செய்துகொள்ளவேண்டும்? என்று ஒரு கேள்வியைப் போட்டு என்னை ஏமாற்றப் பார்த்தது மனது. அறிவைக்கொண்டு 'மனதே, ஏமாற்றாதே! கல்யாண விஷயம் என் சொந்த விஷயம், பெற்றோர்களுக்கும் அதில் அபிப்பிராயம் சொல்ல உரிமை உண்டு; ஆனால், சர்வாதிகாரம் செய்ய இடமில்லை' என்று பதில் கூறி சமாளித்தேன். 'பெரியவாள் சாபத்தைப் பெற்று வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறாய். உன் வாழ்க்கை உருப்படுமா? மேலும் மனத்தைப்பற்றி நீ என்ன தெரிந்துகொண்டுவிட்டாய்? அதிலும் பெண்களின் மனது மிகவும் ஆழமானது. அதைக் கண்டுபிடிப்பது துர்லபம் என்று எழுதிவைத்திருப்பதை மறந்துவிட்டாயா? உன் மனைவியின் மனத்தில் என்ன இருக்கிறதென்று உனக்குத் தெரியுமா?' என்று அறிவே என்னைக் கேட்க ஆரம்பித்தது. 'அது எனக்குத் தெரியும். நான் ஊதப்பட்ட ஒரு விளக்குபோல என்பது அவளுக்குத் தெரியுமோ, தெரியாதோ? அது

அவள் மனத்திற்குத்தான் தெரியவேண்டும். என் இருதயத்தில் முதன் முதலில் ஏற்றப்பட்ட விளக்கை பெற்றோர்களே ஊதினார்கள். வாழ்க்கையை அந்தகாரம் கப்பிக்கொண்டது. மடிந்து மண்ணாகிவிடுவேன் என்று நம்பினேன். லட்சியக் கோட்டையில் அகப்படாததினால் மனத்தைச் சமாளித்துவந்தேன். ஊதப்பட்ட அந்த விளக்கு இப்பொழுது மீண்டும் ஏற்றப்பட்டுவிட்டது. ஏற்றியவள் யார்? என் மனைவி கல்யாணிதான்' என்று எனது ஒத்தாசையுடன் மனதே பதில் கூறியது. இப்படியெல்லாம் சிந்தனைச் சுழல்கள் என் மனத்துடன் பந்தயம் போட்டு வந்தன.

முதலில் என் தகப்பனார் எனக்குக் கல்யாணம் செய்துவைப்பதற்காக ஒரு பெண்ணைப் பார்த்தார். தன் குடும்பத்திற்கும், குலத்திற்கும் பணக்கார அந்தஸ்திற்கும் ஏற்ற பெண் என்பது அவர் அபிப்பிராயம். அப்பெண் என் தாயாருக்குப் பிடிக்கவில்லை; காரணம் அப்பெண் என் தாய் வழியில் சொந்தமில்லையாம்! தாயார் ஒரு பெண்ணை நிச்சயித்தாள். என் தந்தைக்கு அப்பெண் பிடிக்கவில்லை. கடைசியில் அவ்விருவர் மனதும் ஒப்புக்கொண்டு தெரிவுசெய்யப்பட்ட பெண் என் மனத்திற்குப் பிடிக்கவில்லை. என் மனதிற்குப் பிரியமான பெண் பெற்றோர்களுக்குப் பிடிக்கவில்லை. இவ்விதம் என் கல்யாணப் பேச்சு நிச்சயம் பெறுமல் நகர்ந்துகொண்டேயிருந்தது. கூட வருஷங்களும் நகர்ந்தன. எனக்கு வயது 29 ஆகும்வரையில் பெண் விஷயத்தில் ஒரு முடிவு ஏற்படவில்லை. கடைசியில், நான் என் மனத்திற்குள், மணமே செய்து கொள்ளுவதில்லை என்று நான் தீர்மானித்திருந்தேன். பருவ உணர்ச்சி என் சரீரத்தைப் பரீட்சைசெய்யும்போதெல்லாம் கதையில் வரும் சில லட்சியப் புருஷர்களின் லட்சணத்தை நினைத்துக்கொண்டு சமாளிக்கப் பார்ப்பேன். அதுவுமன்றி ஆரம்பத்திலேயே என் வாழ்க்கைக்குப் பலமான ஓர் அடி விழுந்துவிட்டது. அந்த அடி சரீரத்தில் விழுந்திருந்தால் தாங்கிக்கொள்ளலாம்; மனத்தில் விழுந்த அடியைத் தாங்குவது இலேசானதல்ல. சரீரக் காயம் ஆறிவிடும்; மாறிவிடும். மனக் காயம் மாறினாலும் ஆறுதென்று தோன்றுகின்றது. ஆறியதாகத் தோன்றினால், அதனாலேற்பட்ட தழும்பு மாறுதென்றே புலப்படுகிறது. பட்டுப்போன மரம்போல இருந்தஎன்னை மறுபடியும் துளிர்க்க வைத்தவள் கல்யாணிதான். கல்யாணியை நான் சந்திக்காமலிருந்திருந்தால்கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிருக்கும்.

என் மனைவி கல்யாணியைப்பற்றி சொல்லாவிட்டால் எனது கதை ஸ்வாரஸ்யப்படாது. ஏனெனில், அவள் என் ஜீவியத்தின் ஸ்வரஸ்தானமாகிவிட்டாள். முதன்முறையாக நான் சந்திக்கும்போது அவள் கொம்பை இழந்த கொடிபோலவே காணப்பட்டாள் என்று நான் நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. நானோ கொடியை இழந்த கொம்புபோலவே காணப்பட்டேன். கொடியும், கொம்பும்போல ஐக்கியப்பட்டுவிட்டோம்.

கல்யாணி நல்ல அழகி. நல்ல படிப்பாளியும்கூட. சுதந்திர உணர்ச்சி அதிகம்; வீட்டுக்கு அடங்காதவள் என்ற பெயர் உண்டு. பி - ஏ. வரை படித்தவள். அத்துடன் நின்றுவிடவில்லை. வைத்திய வேலைக்குப் படித்து 'லேடி-டாக்டராக' வேலைபார்த்துவருகிறாள். அவளும் 28-வது வயதுவரையில் கல்யாணம் செய்துகொள்ளவேயில்லை. பெற்றோர்கள் பார்த்த மாப்பிள்ளைகள் எல்லாம் அவளுக்குப் பிடிக்கவில்லை. குடும்பத்தார்களுடன் சண்டைபோட்டுக்கொண்டு தனியாகவே குடித்தனம் நடத்திவந்தாள். டாக்டர் வேலையில் கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டே சுயேச்சையாக ஜீவியத்தை நடத்திவந்தாள். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்றெல்லாம் சொல்லுகிறார்கள் அல்லவா? அவைகள் எல்லாம் அவள் விஷயத்தில் அமுலில் இல்லாத சொற்கள். சூதுவாது அற்றவள். யாரிடமும் சங்கோஜமின்றி பேசுவாள். கட்டை விரலால் பூமியைக் கீறி கடைக்கண் பார்வையை அதன்மீது படரவிடும் கதாநாயகி அல்ல அவள். எந்த விஷயங்களைப்பற்றியும் சுவாரஸ்யமாகப் பேசும் சரஸி, ஆண்களைக் கண்டதும் சில பெண்கள் கோணிக் குனிந்து அங்கத்தைத் தண்டித்துக்கொள்ளுகிறார்கள் அல்லவா? அந்த ரகப் பெண் அல்ல கல்யாணி. அவளுக்கு மோட்டார் ஓட்டத் தெரியும். தனது சொந்த மோட்டாரில்தான் அவள் வெளியே போய்வருவது வழக்கம். அவள் மோட்டார் ஓட்டியதைக் கண்ட மற்றவர்கள், அதை வைத்துக்கொண்டு அவள் குணத்தைப்பற்றியெல்லாம் பேசத் தொடங்கிவிட்டார்கள்!

படிக்கத் தெரிந்தாலே பெண்கள் கெட்டுப்போய்விடுவார்கள் என்று எண்ணும் மனப்பான்மை எப்பொழுதுதான் மாறுமோ? மேலும் படித்த பெண்களைப்பற்றி பொதுவாக ஏதாவது கதையைக் கட்டிவிடுவதும் சகஜம். இந்தமாதிரியான அபவாதம் கல்யாணிக்கும்

உண்டு. "28 வயதுவரையில் ஒரு பெண்பிள்ளையால் பரிசுத்தமாக வாழ்க்கையை நடத்தமுடியுமா? அதுவும் சர்வசாதாரணமாக ஆண்களுடன் கொஞ்சமும் வெட்கமில்லாமல் பழகும் பெண்களால் எப்படி கட்டுப்பாடாக இருக்கமுடியும்? எல்லோராலும் சீதையும், சாவித்திரியுமாக இருக்கமுடியுமா என்ன?" என்றெல்லாம் உலகம் பேசத்தான் செய்கிறது. உலகம் பலவிதம். உலைவாயை மூடினாலும், ஊர் வாயை மூட முடியுமா?

கல்யாணி ஸ்படிகம்போன்றவள்; காதலுக்கு உயிர்; அன்புக்குப் பத்தரை மாற்றுத் தங்கம்; மனத்திற்கு மலர் என்றெல்லாம் எல்லோருக்கும் எப்படித் தெரியும்? அவளுடைய வெளிப்புற வாழ்க்கை முறைகளைக்கண்டு உலகம் ஒன்று கூறுகிறது! ஆனால், என் உள்ளத்தில் ஒட்டிக்கொண்ட அவள் உள்ளத்தை அறிந்துகொண்டவனாக நான் விளங்கினேன். உலக அபவாதத்திற்கு உட்பட்ட கல்யாணிக்கு நான் கணவனாகப்போவதை என் தகப்பனாரும் தாயாரும் விரும்பவில்லை. ஏனெனில் கல்யாணியின் மனத்தை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை; அறிந்துகொள்ள முயற்சிக்கவுமில்லை. லேடி டாக்டராகிய கல்யாணியை மற்ற மருமகள்மாதிரி வீட்டில் வைத்துக்கொள்ள முடியாதென்பது என் தாயாருக்கு விளங்கிவிட்டது. மேலும் 'பெண் என்றால் அடக்கம் வேண்டாமா? ஆண்களைப்போல வைத்தியத் தொழில் செய்யும் கல்யாணி ஒருகாலும் கணவனுக்குக் கட்டுப்பட்டு நடக்கமாட்டாள். வெள்ளைக்காரியைப்போல 'தாஸ்பூஸ்' என்று இங்கிலீஷில் பேசுவாள். அவளை யாராவது மருமகளாக ஏற்றுக்கொள்ள முடியுமா? அத்துடன் அவள் ஜாதியோ நாயுடு ஜாதியாம். நம்முடைய குலத்துக்கும், அவள் குலத்துக்கும் ஸ்நானப்பிராப்திகூட கிடையாது. இந்த 'அழகி'ல் சம்பந்தம்கொண்டால் நம்முடைய இனத்தவர்கள் எல்லாம் என்ன சொல்லுவார்கள்?' இவ்விதம் என் தாயார் நினைத்ததால்தான் என் திருமணத்தை அவளும் விரும்பவில்லை.

*　　*　　*

நானும் பி. ஏ. வரை படித்தேன். படிப்பு முடிந்ததும் எந்த இடத்திற்கும் வேலைக்கு அனுப்ப என் தகப்பனாருக்கு இஷ்டயில்லை. வேலை செய்துதான் சாப்பிட வேண்டுமென்ற நிர்ப்பந்தமுமில்லை. ஏனெனில்,

நாங்கள் பரம்பரையாகப் பணக்காரர்கள். நிலம், ஆஸ்தி எல்லாம் உண்டு. அதனால் ஏற்படும் வீண் கௌரவமும், மமதையும் எங்கள் குடும்பத்தைத் தொடர்ந்திருந்தன.

பி. ஏ. பரீட்சையில் தேறியதும் என் தகப்பனாரின் உத்தரவுப்படி எங்களுக்குச் சொந்தமான பெரிய மருந்து வியாபாரக் கடையை நானே மேற்பார்த்துவந்தேன். அக் கடையை என் பெயருக்கே தகப்பனார் எழுதிவைத்துவிட்டார். என் மனப்போக்கை அறிந்த அவர் சுதந்தரமாக அக்கடையை நிர்வகிக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்புவித்துவிட்டார். நானும் புத்திசாலித்தனமாக அக்கடையை நிர்வகித்து வந்தேன்.

இந்தக்காலத்தில்தான் நான் கல்யாணியைச் சந்திக்கும்படி நேரிட்டது. சிலசமயம் அவளே தன் மோட்டாரில் எங்கள் கடைக்கு வருவாள். சில மருந்துகளை அனுப்பும்படிச் சொல்லுவாள். அவள் பெயரில் பத்துவரவு கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொண்டாள்.

முதன்முறையாக அவளைப் பார்த்ததும் திடுக்கிட்டேன். ஏனெனில், அவள் முகஜாடை என் உள்ளத்தில் பாலியபருவத்தில் ஏற்றப்பட்ட விளக்கை ஞாபகமூட்டியது. அவளும் முதன்முதலில் என்னைப் பார்க்கும்போது வேறு யாருடைய முகச்சாயலையாவது என்னிடம் கண்டிருப்பாளா? என்று என்னால் சொல்லுவதற்கில்லை. சந்தேகத்தை வைத்துக்கொண்டு மனம்போடும் புதிர்களில் மனிதன் மாட்டிக்கொள்ளுவது கூடாது; மாட்டிக்கொள்ளுவது மனத்தையே கொல்லுவது போல ஆகிவிடுவதும் உண்டு. ஆகையால் அதை நான் பெரிதாகக் கொள்ளவில்லை.

புதுவருடப் பிறப்பின்போது நான் கல்யாணியின் அழைப்பின் பேரில் அவள் தங்கியிருந்த பங்களாவுக்குப் போயிருந்தேன். அன்றைய விருந்து எனக்கு மாத்திரம்தான்.

விருந்துக்குப்பிறகு நாங்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் சம்பாஷணையில் எத்தனையோ விஷயங்கள், கலை, ராஜீயம், சமூகம், முதலியவைகளைப்பற்றியும் பேசிக்கொண்டே வந்தோம்.

"இங்கிலீஷைப் படித்துவிட்டு இந்தக்காலத்துப்பெண்கள் எல்லா வகையிலும் ஆண்களுடன் போட்டிபோட வந்துவிடுகிறுர்கள்" என்றேன் இடையே.

கல்யாணி அந்தப் பேச்சை பொதுவாக்கிக்கொண்டு மேலே விவாதிக்கப் பிரியமில்லாமல் புன்னகையுடன் சொன்னுள்: "அவர்கள் போட்டிபோடவில்லை. உங்களைப்போன்றவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கப் பார்க்கிறுர்கள்!"

நான் சிரித்தேன்.

கல்யாணி தன் கைக்கடிகாரத்தைக் கழற்றிவைத்துக்கொண்டே "சும்மா வேடிக்கையாகவே கேட்கிறேன்; வினையாகக் கேட்கிறேன் என்று நினைத்துவிடாதீர்கள். நீங்கள் ஏன் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளாமலிருக்கிறீர்கள்?" என்று சொல்லிவிட்டு புன்னகையை மலரவிட்டாள். கேட்டு முடிவதற்குள் அவள் அதரதளங்கள் ஏதோ தவறுதல் செய்துவிட்டதாக எண்ணியதோ என்று தோன்றியது.

ஆம். அவள் கேட்டது ரஸமற்ற கேள்விதான். ஆனுல் வாழ்க்கையில் ரஸமேற்றும் கேள்வி!

"ரஸமான கேள்விதான். ஆனுல் ரஸ..." என்று நான் பேசிமுடிப்பதற்குள் கல்யாணி குறுக்கிட்டு, "எல்லாவற்றிற்கும் மனசுதான் காரணம். மனசு இருந்தால் ரஸமற்றதையும் நாமே ரஸமாக்கிக்கொள்ளக் கூடாதா?" என்று புகன்றுள். அப்பொழுது அவள் வதனவிலாசத்தில் புன்னகையின் ரேகை ஓடியது. கண்கள் கொஞ்சும் சின்னக் குழந்தைகளின் உள்ளத்தைக் காட்டின. முதலில் அவசியமில்லாமல் கழட்டிய கைக்கடிகாரத்தை மறுபடியும் அவள் தன் கையில் கட்டிக்கொண்டே என்னைப் பார்த்தாள். அவள் மேலே பேசவில்லை. இருதயத்தையே படம்பிடித்துக் காட்டும் அந்தப் பார்வையில் நான் அப்படியே லயித்து விட்டேன். உணர்ச்சி எங்களை 'எடுப்பார் கை பாலகு'க்கிக்கொண்டு விட்டது. அதிகம் கூறுவானேன்? மங்கிய வாழ்க்கையில் எங்கள் உள்ளம் ஓர் உதயஜீவ விளக்கை ஏற்றிக்கொண்டுவிட்டது. நின்றுபோன விளக்கு மீண்டும் எரிகிறது! அதை அணைக்கவோ, ஊதவோ இந்த

உலகத்தில் யாருக்கும் சக்தி கிடையாது! உலகம் புரண்டாலும், இது உறுதி! எவ்வளவு தைரியமான முடிவு! ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர் என்ற உண்மையை நாங்கள் உணர்ந்துவிட்டோம். பின்பு உலகத்தைப்பற்றி எங்களுக்கு என்ன கவலை? கல்யாணம் செய்துகொள்ளுவதென்று முடிவுபண்ணிக்கொண்டோம்.

இந்த முடிவுசெய்யும்போது நான் வேடிக்கையாகக் கூறினேன்: "கல்யாணி, இந்த மனதை நீ நம்புகிறாயா?"

"ஏன் இந்த நம்பிக்கை அற்ற கேள்வி?" என்று பதில் கேள்வியில் மடக்கினாள்.

"இல்லை, மனதை நம்பினால், கல்யாணம் என்ற சம்பிரதாயம்கூட தேவையில்லையே!"

"அப்படியா? உலகத்தைப்பற்றி உங்களுக்குக் கவலையில்லாவிட்டால் எனக்கும் கவலையில்லை! என் மனசை பரீட்சிக்கிறீர்களா? நான் எப்பொழுதுமே மனதை நம்புவதில்லை. மனதுடைய மனிதர்களை நான் நம்பத் தயார். அந்த நம்பிக்கையில்லாவிட்டால், வாழ்க்கை ஒரு பெரிய பளுவாகப் போய்விடும்."

"ரொம்ப சரி. உன் மனத்திடம் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அப்புறம் உலகத்தைப்பற்றிக் கவனிப்பானேன்."

* * *

கொஞ்சநாள் கழித்துதான் கல்யாணிக்கும் எனக்கும் ஆடம்பரமற்ற முறையில் 'ரிஜிஸ்தர்' திருமணம் நிறைவேறியது. நாங்கள் தனியாகக் குடித்தனம் செய்யவும் ஆரம்பித்துவிட்டோம். சில மாதங்கள் நடையைக் கட்டின.

ஒருநாள். நிலவுகாலம். இரவு 9½ மணி இருக்கும். சாப்பாடு எல்லாம் முடிந்துவிட்டது.

படுக்கையறைக்கு வந்தேன். கட்டிலில் அமர்ந்து தலையணைகளை ஒரு பக்கமாகச் சாய்த்துப் படுத்தேன்.

கல்யாணியும் உற்சாகமுடன் அங்கு வந்தாள். அறையில் கிடந்த சாய்மான நாற்காலியில் சாய்ந்தாள்.

அறையில் மின்சார விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது.

அரைமணி நேரம் வரையில் நாங்கள் உலகத்தைச் சுற்றிவந்தோம் — ஆம். சம்பாஷணையின் மூலம்தான்!

சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தில் மணி 10 அடித்து, அதன் எதிரொலியும் அடங்கியது. கட்டிலுக்கு எதிர்ப்புறமாயிருந்த சாளரத்தின் கதவு சாத்தப்பட்டே இருந்தது.

சட்டென்று கல்யாணி எழுந்தாள். மின்சார விளக்கை அணைப்பதற்குரிய பொத்தானை அமுக்கினாள். இருள் ஓடிவந்தது.

கல்யாணி ஜன்னல் கதவைத் திறந்தாள். ஜிலுஜிலுப்பின் ஜீவவேகத்தை உடைய சந்திர ஒளி அந்தச் சாளரத்தின் வழியாக அறைக்குள் பிரவேசித்து தரையை முத்தமிட்டது.

கல்யாணி சந்திர ஒளியைக் காட்டி ''இந்த ஒளிக்கு ஈடு ஏது?'' என்று சொல்லிவிட்டு என் பக்கம் வந்தாள்.

கல்யாணி அறையில் விளக்கை அணைத்ததும், இருள் கவிழ்ந்ததும் என் மத்னதிலேற்பட்டுள்ள தழும்பை ஞாபகமூட்டின. நடந்துபோன சம்பவங்களைப் பிரதட்சணம் செய்துவந்தன எண்ணங்கள். கல்யாணி சொன்ன வார்த்தை என் காதில் நன்றாக விழுந்தது. ''உடனே இந்த ஒளிக்கு இணையும் உண்டோ?'' என்று கல்யாணியையே குறிப்பிட்டு பதில் சொல்ல வேண்டுமென்றுதான் விரும்பினேன். சிந்தனை என் மனத்தின் லகானை எங்கேயோ திருப்பிவிட்டுவிட்டது. மௌனமாக இருந்தேன்.

''என்ன அதற்குள் தூங்கிவிட்டீர்களா? அல்லது வேறு ஞாபகமா?'' என்றாள் கல்யாணி.

திடுக்கிட்டு ''வேறு ஞாபகமில்லை. ஆனால் ஒரு ஞாபகம்'' என்றேன் தடதடப்புடன்.

"எதைப்பற்றியோ? அதை நான் தெரிந்துகொள்ளக்கூடாதா?"

"நீ விளக்கை அணைத்தாய் அல்லவா? உடனே நேற்று நான் ஒரு தமிழ்ப் பத்திரிகையில் படித்த ஒரு சிறு கதையின் ஞாபகம் வந்தது."

"கதையா? என்ன கதை? எதைப்பற்றி?"

"விளக்கு ஏற்றுவதுபற்றி — அதுவும் வாழ்க்கையில் விளக்கு ஏற்றப்படுகிறது; அணைக்கப்படுகிறது. அணைக்கப்படுகிறது; ஏற்றப்படுகிறது. விளக்கை ஏற்றுகிறார்கள்; ஏற்றிக்கொள்ளுகிறார்கள்; ஊதியும் விடுகிறார்கள். நெருப்பை மேலும் மேலும் மூளவும் செய்கிறது காற்று! அடியுடன் அணைக்கவும் செய்கிறது காற்று! இப்படியெல்லாம் சிந்திக்க வைக்கிறது அந்தக் கதை."

"அப்படியா? அக்கதையின் பெயர் என்ன? அந்தப் பத்திரிகையைக் கொடுங்கள். நான்..." இவ்விதம் கூறிக்கொண்டே மின்சார தீபத்தின் பொத்தானை மறுபடியும் அழுக்கினாள்.

மீண்டும் அறையில் பிரகாசம். இருள் வந்தவழியே சொல்லிக் கொள்ளாமல் சென்றது. அறைக்குள் அரையும் குறையுமாக விழுந்து கொண்டிருந்த சந்திர ஒளி மங்கியது.

"கல்யாணி, நீ அந்தக் கதையைக் கேட்கத்தயார் என்றால், நானே படிக்கிறேன்" என்றேன்.

"அறிவைத் தூண்டும் கதை மூளையைப் பலிவாங்கிவிடும்! உணர்ச்சிக் கதை என்றால் எனக்கு நிரம்பப் பிடிக்கும். ஏனெனின், இந்த மாதிரிக் கதையில் வரும் பாத்திரங்களுடன் நாமும் அழலாம்; சிரிக்கலாம்; கண்ணீர் விடலாம்."

கல்யாணி படுக்கையில் சாய்ந்துகொண்டு கதை கேட்கத் தயாரானாள். நான் எழுந்து புஸ்தக அலமாரியிலிருந்து அப்பத்திரிகையை எடுத்தேன். சாய்மான நாற்காலியில் உட்கார்ந்தபடியே படிக்க ஆரம்பித்தேன்.

* * *

"அடடா! கொஞ்சம் பொறுங்கள். கதையின் பெயரைச் சொல்லாமல் வாசிக்கிறீர்களே" என்று கேட்டாள் கல்யாணி.

"மன்னிக்கவும். கதையின் பெயர் 'ஊதிய விளக்கு!'"

"உம். மேலே படியுங்கள்."

"கல்யாணி, தூக்கம் வந்தால் சொல்லிவிடு. அதே க்ஷணத்தில் கதையை நிறுத்திவிடுகிறேன்."

"நீங்கள் தூங்கி விழாமல் படித்தால் போதாதா?"—கல்யாணி உதடுகளை அசைக்காமல் கண்ணால் நகை ஒளி காட்டினாள்.

நான் கதையை ஆரம்பித்தேன்:

## ஊதிய விளக்கு

பொங்கல் பண்டிகைக் கழிந்து ஒரு வாரமிருக்குமென்று நினைக்கிறேன். எனக்குக் கொஞ்சம் விவரம் தெரிந்த வயசுதான். ரொம்பவும் பால்யமுமல்ல; சரியான யுவப் பருவமுமல்ல. விளையாட்டுப் புத்தி அதிகம்; துஷ்டத்தனமும் உண்டு. பள்ளிக்கூடத்திலும் சரி; வீட்டிலும் சரி; நான்தான் 'ராஜா'. பணக்கார வீட்டுக் குழந்தை என்ற மமதையில் பள்ளிக்கூடத்தில் அட்டகாசம் செய்வதுண்டு. செல்லக்குழந்தை என்ற முறையில் வீட்டிலும் என் இஷ்டப்படி நடப்பேன். சில சந்தர்ப்பங்களில் பொறுக்கமுடியாத நிலைமையில் மாத்திரம் என் தகப்பனாரும், தாயாரும், 'தண்டி'ப்பது உண்டு.

ஒரு நாள். காலை நேரம். எங்கள் வீட்டுக்குப் பின்புறம் உள்ள என் அறையில் படிப்பதுபோல பாசாங்கு செய்துகொண்டிருந்தேன். நான் உட்கார்ந்திருந்த நாற்காலிக்குக் கிழக்குப்பக்கமாக ஒரு ஜன்னல். அதன் 'உடை'போல கண்ணாடிக் கதவு. அக்கதவை முதலில் திறந்துவிட்டேன். உடனே அச்சாளரத்தின் வழியாக யாரையோ தேடிவருவதுபோல் காலைக் காற்று குளுமையைக் கொட்டிக்கொண்டே அறைக்குள் நுழைந்தது. குளிர்ந்த காற்றைக் 'குடித்து'க்

கொண்டே வெளியே நோக்கினேன். என் நோக்கத்தைக் கவராத பாடப் புஸ்தகம் மேஜைக்குப் பாரமாகக் கிடந்தது.

நான் இருந்த அறைக்கு எதிர்ப்புறம் ஒரு சின்னத் தோட்டம். அதற்கு இடையே ஒரு பக்கம் எங்கள் வீட்டு மாட்டுக் கொட்டில். பால் கறக்க இன்னும் இடையன் வரவில்லை. ஆகையால், அங்கு ஒரு பக்கம் கட்டியிருந்த பசுங்கன்று 'அம்மா, அம்மா' என்று பால் குடிக்க அலறுகிறது. கன்றின் குரல் கேட்ட பசுவும் 'அம்மா' என்று பலமாகச் சத்தம் போடுகிறது. ஆகா! அந்த அம்மா என்ற சப்தத்திலே எத்தகைய தாய்மையின் லட்சண நாடகம்! இவ்விதம் நான் அப்பொழுது சிந்திக்கமுடியவில்லை. பசு தன் தலையை ஆட்டும்போதெல்லாம் அதன் கழுத்தில் கட்டியிருந்த மணி ஓசைதான் என் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. 'ஏன் இன்னைக்கு இன்னும் இடையன் வரவில்லை? அவன் வர நேரமானால், அம்மா காப்பி கொடுக்கவும் நேரமாய் விடுமே' என்று நான் நினைத்துக்கொண்டே நின்றேன்.

கண்ணாடி வளையல்களின் சப்தம் கேட்டது. ஆமாம். கிரிஜாதான் ஒரு கையில் பளபளவென்று நன்றாக விளக்கப்பட்ட பால் சொம்புடன் பசு இருக்கும் பக்கமாகப் போகிறாள். மற்றொரு கையில் ஒரு சிறிய குங்குமப்பரணிதான். அதோ அந்தச் சொம்பை ஒரு பக்கம் வைத்துவிட்டாள். பசுவின் சமீபம் போகிறாள். அடடா! வீட்டில் உள்ள எல்லோரையும் சமீபத்தில் வர இடம் கொடுக்காத அந்தத் துஷ்டப் பசு அவளிடம் மாத்திரம் எவ்வளவோ பிரியம் காட்டுகிறது! கிரிஜாவைக் கண்டதும் அது தன் தலையைத் தூக்கி தன் உற்சாகத்தைக் காட்டியது. முதலில் சிறுமி கிரிஜா மெதுவாக அதன் கழுத்தைத் தடவிக்கொடுத்துவிட்டு, அதனுடைய நெற்றியில் மஞ்சளைத் தடவி குங்கும நாமமிட்டாள். கன்று அவளைக்கண்டு துள்ளியது. தன் கட்டை அவிழ்த்து 'தாயி'டம் விடும்படி கிரிஜாவைக் கேட்பதுபோல 'அம்மா'என்று கத்தியது.

"இதோ வரேண்டி, கண்ணு" என்று கிரிஜா மான்குட்டிபோல அதன் சமீபம் சென்று நெற்றியில் பொட்டு வைத்துவிட்டு, தன் கன்னத்தோடு அதன் முகத்தை ஒத்திக்கொண்டாள். "பாவி, பால் கறக்கிறவன் இன்னைக்கு இன்னும் வரக்காணுமே. பாவம், மாடும் கன்

றும் தவியா தவிக்குதே'' என்று சொல்லிக்கொண்டாள்.

என்ன அதிசயம்! அவ்வளவு அதிகாலையில் கிரிஜா ஸ்நானம் செய்துவிட்டாள் என்பது அவளது தலை மயிரினின்று சொட்டிய நீர்த் துளிகள் சாக்ஷி கூறின. அந்தச் சமயத்தில் அக் கேசஜாலங்களை அவள் அள்ளி செருகியிருந்தாள். கிரிஜாவை யார் பார்த்தாலும், நல்ல லக்ஷ்மீகரம், மூக்கும் முழியுமாய் லட்சணமாய் இருக்கிறாள்' என்று சொல்லிவிடுவார்கள். காலைக் கதிரவனின் ஒளி தோட்டத்தில் உள்ள மரஞ் செடி கொடிகளின் சந்துக்களை எல்லாம் கடந்து கிரிஜாவின் பால்ய சௌந்திரியத்திலே ஒரு சோபையை அள்ளித் தெளித்தது. முகத்தில் மஞ்சள் பூசியிருந்தாள். நெற்றி விலாசத்தில் குங்குமப் பொட்டு அக் ரஸ்தானம் வகித்தது. அவள் முகத்தில் மஞ்சள் பூசியிருந்தது எனக்குப் பிடிக்கவில்லை. வைதீகமான என் தாயாரின் கட்டளைப்படிதான் அவள் பழங்காலத்து சம்பிரதாயத்தை ஒட்டி மஞ்சள் பூசிக்கொள்ள ஆரம்பித்தாள் என்ற சங்கதியைப் பிற்காலத்தில்தான் நான் அறிந்தேன்.

அப்பொழுது நான் பார்க்கும் சமயத்தில் கிரிஜா சிங்கப்பூர் சிட்டிப்பாவாடையைக் கட்டியிருந்தாள். மேலே போட்டிருந்தது ஒரு பட்டு ரவிக்கை. அதன்மீது குறுக்காக அணைந்து சென்று இடுப்பின் ஒரு பக்கம் செருகி நின்றுக்கொண்டிருந்தது இந்திய மில் துணி தாவணி.

கிரிஜாவின் மஞ்சள் பூசிய முகம். செக்கச் சிவந்த குங்கும திலகம்' கழுத்தில் சங்கு மணி மாலை. 'கையில் கண்ணாடி வளையல்கள். இவைகள் ஒரு கன்னி தெய்வத்தை எனக்கு அப்பொழுது ஞாபகமூட்டவில்லை. ஆனால் கிரிஜாவைப் பயமுறுத்தி விளையாடவேண்டுமென்று தோன்றியது. கிரிஜாவும் பெரிய வாயாடி. பதிலுக்குப்பதில் பேசாமலிருக்கமாட்டாள். யார்யாரிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும்? எப்படிப் பேசவேண்டும்? என்பதெல்லாம் அவளுக்குத் தெரியும். பதில்களும் புத்திசாலித்தனமாக இருக்கும். 'முளைக்கிறதுக்குள்ளே இப்படி பேசுதே' என்று சிலர் சொல்லவும் நான் கேட்டிருக்கிறேன். அவளிடம் அடக்கம் ஒடுக்கமெல்லாம் கிடையா. அவளும் சிறுமி தானே! என்னைவிட அப்பொழுது வயதில் இரண்டு வருடம் குறைந்த

வள் என்பதுதான் என் மதிப்பு. சின்னக் குழந்தையிலிருந்து எங்கள் வீட்டிலேயே வளர்ந்தவள். அவளும் நானும் அடிக்கடி சண்டைபோட்டுக்கொள்ளுவோம்; வைதுகொள்ளுவோம். பேசாமலிருப்பதற்காக 'டூ' விட்டுக்கொள்ளுவோம்; கிரிஜாவே முதலில் 'டூ' விடுவாள். ஆனால் அரை க்ஷணம்கூட அவளால் வாயை மூடிக்கொண்டிருக்க முடியாது. முதலில் பேசும்போது அவளை நான் கேலி செய்வேன்.

பசுமாடு மறுபடியும் கத்தியது. உடனே அதைச் சமாதானப் படுத்த கிரிஜா ஓடினாள். அதன் கழுத்தை மறுபடியும் தடவிக்கொண்டிருக்கிறாள். என் மனத்தில் திடீரென்று ஒரு யோசனை உதித்தது. சப்தம் போடாமல் மெதுவாகப் பின்புறமாகச் சென்று கிரிஜாவின் கண்களைப் பொத்தி "பூச்சாண்டி புடிச்சிக்கோ" என்று பயமுறுத்தவேண்டுமென்பதே அந்த எண்ணம். நினைத்ததை முடித்துவிடுவதென்று தீர்மானித்து அறையைவிட்டு வெளியே வந்தேன். அடிமேல் அடிவைத்து ஓசையே கேட்காமல் கிரிஜாவுக்குப் பின்புறமும் போய்விட்டேன்—கையைத் தூக்கி அவள் கண்களைப் பொத்த எண்ணியபோது பசு என்னை அண்ணாந்தபடியே பார்த்துவிட்டதென்று தோன்றியது. தலையை ஆட்டி ஒரு துள்ளு துள்ளி என் பக்கமாக காலை உதைக்கவும் ஆரம்பித்தது.

சட்டென்று திடுக்கிட்டு கிரிஜா திரும்பினாள். அவள் கண்களில் குறும்புத்தனத்தின் திருஷ்டி. சின்ன பவளத் துண்டங்கள் போன்ற உதடுகளில் பூத்த புன்முறுவல் என்னைப் பார்த்து பரிகாசம் செய்வது போலத் தெரிந்தது. அவள் சொன்னாள்: "வேணும், சத்தம் போடாமே வந்தா இப்படித்தான்."

எனக்கோ கோபம் கோபமாய் வந்தது; கிரிஜாவின் மேல் அல்ல; என் எண்ணத்தை நிறைவேற்றமுடியாமல் செய்த அந்தப் பசுமாட்டின்மீது தான். பால் கறக்கிறவனிடம் பயந்துகொண்டு அது பேசாமலிருக்கும். கிரிஜாவிடமோ பிரியமுடன் சாதுவாக இருக்கும். வேறு யார் போனாலும் உதைதான்; முட்டுதான். மாட்டின்மீது வந்த கோபத்தைக் காட்டிக்கொள்ள நான் என்ன செய்தேன் தெரியுமா? பக்கத்தில் கஞ்சித் தொட்டியில், கஞ்சியைக் கலக்கவைத்திருந்த ஒரு தடித்த கழியை எடுத்தேன். ஓங்கி பசுவை அடித்தேன்.

அப்பசுவின்மீது கிரிஜா உயிரை வைத்திருக்கிறாள் என்பதை அறிந்திருந்தும் கோபத்தினால் 'பளார்' என்று அடித்துவிட்டேன். பசுவின்மீது அடி விழாமலிருப்பதற்காக கிரிஜா குறுக்கே கை நீட்டுவாள் என்று கனவிலும் கருதவில்லை. நான் பசுவை அடிக்கும்போது "ஐயோ! பாவம்! அடிக்காதே" என்று தன் கையை நீட்டினாள். மாட்டின்மீதுவிழும் அடி அவள் கையில் விழுந்துவிட்டது. அவள் கரத்தை அலங்கரித்த பலநிறக் கண்ணாடி வளையல்களில் சில நொறுங்கிச் சிதறின. 'அம்மாடீ' என்று கையைப் பிடித்துக்கொண்டே அப்படியே கீழே உட்கார்ந்துவிட்டாள்.

என் மனசு 'பக்பக்' என்று அடித்துக்கொண்டது. ஒன்றுமே புலப்படவில்லை என் கையிலிருந்த தடி தானாகவே நழுவி விழுந்துவிட்டது. பயத்தோடு "கிரிஜா, ஒன்னை யார் குறுக்கே கையை நீட்டச் சொன்னா" என்றேன். கிரிஜாவுடன் பரிகாசம் செய்து விளையாடுவதில் பிரியமுண்டு. ஆனால் அவள் மனசு நோக என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடிவதில்லை. இந்த உணர்ச்சி ஆரம்பகாலத்திலேயே என் இருதயப் பிரதேசத்திலே விழுதுவிட்டுக்கொண்டுவிட்டது. அச்சமுடன் அவளைப் பிடித்துத் தூக்கி கையை வாயினால் ஊதி "நல்லா அடி விழுந்துடுச்சா?" என்று தடதடப்புடன் கேட்டேன். "ஒன்னை யார் இங்கே வரச்சொன்னா? அடிச்சுவிட்டு வலிக்குதான்னு கேட்குறாயா...? விடு விடு... நான் போறேன்..." என்று சொல்லிக்கொண்டே முன்னே நடந்தாள்.

கிரிஜா என் அம்மாவிடமும் அப்பாவிடமும் இதைச் சொல்லிவிட்டால்...? இந்தப் பயம் என் நெஞ்சைப் பிடித்து அழுத்தியது. அப்பாவுக்குத் தெரிந்தால் என் முதுகுத் தோலை உரித்துவிடுவார் என்று எனக்குத் தெரியும். அம்மாவும் திட்டுதிட்டுன்னு திட்டிவிடுவாள் ஏனெனில் இருவரும் கிரிஜாவிடம் உயிர் வைத்திருந்தார்கள். மெதுவாகப் பின்சென்று "கிரிஜா, ஒனக்கு ஒரு கும்பிடுபோடறேன். அம்மாகிட்டே சொன்னாலும் அப்பாகிட்டே சொல்லிவிடாதே" என்றேன். "ஊஹும். நீ அடிப்பே. நான் மட்டும் சொல்லக்கூடாதோ? இதைச் சொல்லி ஒனக்கு அடிவாங்கிக் கொடுக்காட்டா என் 'பேரை' மாத்தி வைச்சுக் கூப்பிடு" என்று கிரிஜா பதில் சொல்லிக்கொண்டே கையை

மற்ருெரு கையால் தடவியவண்ணமாய் உள் கூடத்திற்குச் சென்ருள்.

நான் அடித்துக்கொள்ளும் மனத்துடன் பின்னே சென்று என் அறையின் வாசல் படியில் நின்றேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. முதலில் ஓடிப்போய் அம்மாவிடம் ஏதாவது பொய் சொல்லிசமாளிக்கலாமா? என்று நினைத்தேன்.

* * *

''அக்கா, அக்கா, இதோ, பால் கறக்கிறவர் வந்துட்டார்'' என்று கூறிக்கொண்டே பின்கட்டுபக்கம் ஓடிவந்தாள் 'லோக்டி'. 'லோக்டி' என்பவள் என் தங்கை. அவள் உண்மைப் பெயர் லோகநாயகி. எங்கள் வீட்டில் உள்ள அனைவரும் அவளை 'லோக்டி' என்றுதான் கூப்பிடுவது வழக்கம். இச்சிறுமியும் பேசுவதில் கிரிஜாவுக்கு 'அக்காள்'தான். எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது பேசிக்கொண்டேயிருப்பாள். முறுக்காகத்தான் பதில் பேசுவாள். 'பெண் குழந்தையா, லட்சணமா? இருக்கவேண்டாமா? பெண் குழந்தென்ரு அடக்கமாயிருக்குன்னு பேரு. 'இது' எங்கிருந்தோ என் வயித்தில் பிறந்து இப்படி பிராணனை வாங்குகிறது!' என்றெல்லாம் என் அம்மா அவளை திட்டாதநாள் இல்லை. திட்டையும் வாங்கி உதிர்த்துவிட்டு கலகலவென சிரித்துவிடுவாள். ''இரு, இரு. இப்போ எல்லாம் பேசலாம். நாளைக்கு ஒருத்தன் வரப்போகிருன் அல்லவா? அவன் உன்வாயைக் கட்டிப் போடருன் பாரு'' என்று கிரிஜாபெரிய கிழவிபோல லோக்டியிடம் சொல்லுவாள். ''ஒனக்கும் அப்படித்தானே!'' என்று சட்டென்று பதில் சொல்லிவிடுவாள் லோக்டி. இவள் கிரிஜாவுக்கு வயதில் இளையவள்.

கையைத் தடவிக்கொண்டே வந்த கிரிஜாவைப் பார்த்ததும் ''அக்கா, கையில் என்ன?'' என்று கத்தினுள் லோக்டி. இந்த வார்த்தைகள் மறைவாக நின்றுக்கொண்டிருந்த என் காதில் விழுந்தன. அதற்கு மத்தியில் என் தாயாரும் ''ஏன் இப்படி இரைகிறீர்கள்!'' என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தாள்.

''அம்மா, கிரிஜா கையைப் பாரேன். இட்லிமாதிரி 'புஸ்' என்று வீங்கியிருக்கம்மா'' என்ருள் லோக்டி.

பதறியவளாய் ''எங்கே?'' என்று கிரிஜாவின் கையைப் பார்த்தாள் தாயார்.

"ஈதென்னடி இப்படி? வளையல் எல்லாம் உடைந்துபோச்சா? கண்ணுடிக்குத்தி இங்கு ரத்தம்கூட கொஞ்சம் கசியறதே. எங்கே போய் என்ன செய்தாய்?" என்று கேட்டாள் என் அம்மா.

ஒரு நிமைப்பொழுது கிரிஜா விழித்தாள். உண்மையைச் சொல்லி விடலாமா? அல்லது வேறு எதையாவது சொல்லி சமாளிக்கலாமா? என்று அவள் நினைத்திருக்கவேண்டும்.

கிரிஜா கீழே விழுந்ததைத் தான் பார்த்ததாகப் பொய் சொல்ல லாம் என்று நினைத்துக்கொண்டே அவர்கள் நிற்குமிடத்துக்கு ஓடிவந் தேன். நினைத்தபடி பேசமுடியவில்லை. "அண்ணு, கிரிஜா கையைப் பார்த்தாயா? இட்லிமாதிரி உப்பியிருக்கு அண்ணு" என்ருள் லோக்டி.

என்னைப் பார்த்ததும் கிரிஜாவுக்கு என்ன தோன்றியதோ என்னமோ? சட்டென்று சொன்ருள்: "பசுமாட்டுக்கு மஞ்சள் குங்குமம் தடவப்போயிருந்தபோது, அம்மா, அது யாரோன்னு நினைச்சு சட்டென்று உதைச்சுவிட்டது."

"ஆமாம். அது துஷ்டமாடுதான். அதை வித்து துலைக்கணும்னு எத்தனையோ தடவை தலையிலே தலையிலே அடித்துக்கொண்டேன். ஆனு, அவரு கேட்காமே இன்னும் வைச்சுக்கொண்டு இருக்கிருரு" என்று என் அம்மா என் தகப்பனுரைக் குறிப்பிட்டுக் கூறினுள்.

"சரி. கிரிஜா, இப்படி உட்கார். வெந்நீர் ஒத்தடம் கொடுத்தா வீக்கம் குறையும். லோக்டி, சமையல்கட்டுக்குப் போய் வேலைக்காரியை வெந்நீர் கொண்டுவரச் சொல்லு" என்ருள் அம்மா.

என் தங்கைக்கு முன்பு நானே சமையல் அறைக்ப்கு போனேன். அங்கு வேலைக்காரியைக் காணும். லோக்டி வேலைக்காரியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாள். அங்கு அடுப்பின்மீது காய்ந்துகொண்டிருந்த தண்ணீரில் கொஞ்சம் எடுத்து மற்ருெரு பாத்திரத்தில் ஊற்றி நானே எடுத்துக்கொண்டுபோய் அம்மாவுக்குப் பக்கத்தில் வைத்தேன். லோக்டியும் பின்னே ஓடிவந்தாள்.

என் தாயார் ஒரு துணியை அச்சுடு ஜலத்தில் நனைத்து பிழிந்தாள். பின்பு கிரிஜாவின் கைக்கு ஒத்தடம் கொடுத்தாள். சில நிமிஷம் கழிந்ததும், "ஹே. பாலா, (என் பெயர் பாலசுப்பிரமணியன்) தண்ணீரை

மொண்டு கொஞ்ச கொஞ்சமாக கைமேலே ஊத்து. , நான் உருவிவிடு கிறேன், அப்போ வலி குறையும். பாவம், கை 'கன்னி'ப்போச்சே'' என்ருள்.

தாயின் கட்டளைப்படிச் செய்தேன். கிரிஜா என் முகத்தைப் பார்க்கவேயில்லை. என்மீது அவள் பிரமாதமாகக் கோபப்பட்டுக்கொண்டிருக்கிருள் என்பது எனக்கு நன்ருகத் தெரிந்தது. அவளுக்கு மேலும் கோபம் வரும்படி நான் சொன்னேன்: ''கிரிஜாவிடம்தான் அந்த பசு மாட்டுக்கு ரொம்பவும் அன்பாச்சே......அதுவா உதைச்சுது? ஐயோ! பாவம்''

கிரிஜா நிமிர்ந்து பார்த்துவிட்டு தலை குனிந்தாள். ஒன்றும் பேசவில்லை. என்னை அவள் தன் மனத்திற்குள்ளாகவே திட்டுகிருள் என்று தெரிந்தது.

''சரி, சரி. நீ சும்மா இரு. அண்ணு, நீதான் அந்தமாட்டுக்கிட்டே போய் பாரேன். அப்போ தெரியும்'' என்ருள் லோக்டி.

பால்யத்தில் நடந்த இச்சம்பவம் கிரிஜாவுக்கும் எனக்கும் இடையே ஒரு பட்டுபோன்ற நெசவுக்கு இடத்தை ஏற்படுத்திவிட்டதென்று சொல்வேன். நான்தான் அடித்தேன் என்று உண்மையைச் சொல்லாமல் மாடு உதைத்துவிட்டது என்று கிரிஜா எதற்காக சொன்ளுள்? இந்தக் கேள்வி அந்தப் பால்ய பருவத்திலேயே என் உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சியைக் கிளப்பிவிட்டது. என்ன பரிகாசம் செய்தாலும், என்ன விளையாட்டாகச் சொன்ளுலும், தெரியாத்தனமாக எதையாவதுசெய்துவிட்டாலும் கிரிஜா அவைகளை எல்லாம் பொருட்படுத்துவதில்லை. பதிலுக்குப்பதில் திட்டுவாள்; வைவாள்; ஆனல் குடும்பத்தில் மேல் உள்ளவர்களின் காதுவரையில் எத்தகவல்களும் போகாமல் பார்த்துக்கொள்ளுவாள். வளர்த்தவில்லை. எங்களை அறியாமலேயே எங்களது மனத்தை அன்பும், பிரியமும் பண்புப்படுத்திக்கொண்டே வந்தன.

வாழ்க்கைக்கு வயதைக்கூட்டும் வருடங்கள் ஒன்றுக்குப்பின் ஒன்ருக நகர்ந்தன.

எங்களை — கிரிஜாவையும் என்னையும் பால்யம் எவ்வளவுக்கெவ்வளவு சேர்த்து வைத்ததோ அவ்வளவுக்கவ்வளவு பிரித்து வைத்து பரி

சோதிக்கத் தொடங்கியது யௌவனம்.

நான் வாலிபத்தின் முதல் படியில் ஏறிவிட்டேன். பத்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தகாலம்; எனக்குச் சரியாக ஞாபகமிருக்கிறது. கிரிஜாவும் யுவதியாகிவிட்டாள். எல்லோரும் அவளை 'பெரிய மனுஷியாகிவிட்டாள்' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். என்னை மாத்திரம் யாரும் 'பெரிய மனுஷன்' என்று அழைக்கவில்லை!

கிரிஜா என்னைக் கண்டு மறைய பிரியப்படவில்லை; ஆனால் மறைய வேண்டியிருந்தது. எனக்கு அவளிடம் நேராக சம்பாஷிக்கவேண்டுமென்ற ஆவல்; ஆனால் பேச முடியவில்லை. தாயாரின் கண்கள் எப்பொழுதும் கிரிஜாவை முற்றுகையிட்டு வந்தன. எங்கள் வீட்டில் கிரிஜாவைத் தனியாகச் சந்திக்க நான் பல முறை முயன்றதுண்டு. பலன் கைகூடவில்லை. அடிக்கடி பார்ப்போம். நேத்திரங்கள், வாய்களின் பிரதிநிதிகளாய் விளங்கும். வாய் துடிக்கும் பேச, ஆனால் பேச முடியவில்லை. ஈதென்ன கஷ்டம்? நான் பால்ய பருவத்தைப் போற்றி வாலிபத்தை தூஷித்தேன்.

யுவப் பருவத்தின் சாக்ஷாத்காரத்தினால் கிரிஜா ஒரு புதிய அழகு பெற்று விளங்கினாள். அவளைப் பார்க்குந்தோறும், நினைக்குந்தோறும் என் மனத்தில் நவ நவ கற்பனைகள் புரண்டன. பால்யத்தில் எங்களைச் சேர்த்து வைத்த அன்பும் பிரியமும் இப்பொழுது ஒரு புதிய கவசத்தைப் போட்டுக்கொண்டன. கிரிஜாவைப்பற்றிய சிந்தனைக்கு முடிவேயில்லாமல் போய்விட்டது. அவளின் தேகக்கட்டும், வெண்கலச் சிரிப்பும் என் பருவ உணர்ச்சியை நோக்கி 'கரகோஷம்' செய்தன.

மனம் உண்டானால் வழி உண்டு அல்லவா? எங்களிருவருக்கிடையே மனம் பால்யத்திலேயே அஸ்திவாரம் போட்டுவிட்டது; இப்பொழுது வாலிபத்தில் சேது கட்டிக்கொண்டுவிட்டது! கிரிஜா என்னுடையவள்—என்னுடையவள்! என் மனம் தீர்மானித்துவிட்டது. இதை மறுக்க யாரால் முடியும்? எந்த எண்ணத்தையோ பிடித்துத் தள்ளிக்கொண்டேவந்த பெருமூச்சு என்னை ஒரு நிமைப்பொழுது திணற அடித்துவிட்டது. அதோ உள்ளே அறைக்குள் என் தங்கை 'லோக்டி' யுடன் கிரிஜா சிரித்து விளையாடிப் பேசுகிறாள். என் காதில் விழுகிறது. என் மனம் மலர்கிறது!

சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து நேராக வீட்டுக்குப் போவேன். 'காப்பி'யைக் குடிப்பேன். உடனே 'துடுப்பை' எடுத்து சுழற்றிக்கொண்டே டென்னிஸ் பந்தாடப்போய்விடுவேன். இதுதான் வழக்கம்.

அன்று மாலை பந்தாடப் புறப்பட்டேன். வீட்டிலிருந்து வீதிக்கும் வந்துவிட்டேன். என் மனத்தில் நிம்மதியில்லை. சட்டென்று திரும்பி வீட்டிற்குள் நுழைந்தேன். வெளிக் கூடத்தில் ஒருவருமில்லை. மௌனமாக பின்புறமுள்ள என் அறைக்குப் போய்விட்டேன். நேற்றுதான் என் நண்பன் ஒருவனிடமிருந்து இரவல் வாங்கிய ஆங்கில நவீனம் ஒன்றை வாசிக்க ஆரம்பித்தேன். நான் அறையிலிருப்பது வேறு ஒருவருக்கும் தெரியாது. இது ஒருவிதத்தில் நன்மையைத் தந்தது.

'பொழுது போகவில்லையே' என்று சொல்லுகிறவர்களைப்பார்த்து 'இதோ நான் போகிறேன்' என்று கூறுவதுபோல பொழுது சாய்ந்தது. வெளிச்சம் கம்மியது. போதிய வெளிச்சமில்லாததால் புஸ்தகத்தைப் படிக்கமுடியவில்லை. ஏடுகளைத் திருப்பிக்கொண்டேயிருக்கிறேன்; சும்மா அல்ல; படித்த பிறகுதான். ஆனால், 'எங்கே படித்த வரையில் கதையைச் சொல், என்று யாராவது கேட்டால் நான் 'திரு திரு, என்று விழிக்கவேண்டியதுதான்! ஏனெனில், அதுவரையில் என் மனசு கிரிஜாவின் 'கதை'யைப் பாராயணம் செய்து கொண்டிருந்தது.

அறையை இருள்வந்து கவ்விய பிறகு விளக்கைக் கொளுத்த வேண்டுமென்று எண்ணம் ஜனித்தது. மேஜையைப்பார்த்தேன். வழக்கப்படி அங்கிருக்கும் விளக்கு இல்லை. 'சரி, யாரையாவது கூப்பிட்டு விளக்கை ஏற்றிஇங்கு கொண்டுவரச் சொல்லுவோம்' என்று நினைத்து வாயெடுத்தேன். அதற்குள்............

என் அறையை நோக்கி தீப ஒளிபடர்ந்தது. என் மனசு—வாலிபத்தின் சேஷ்டையை ரஸிக்கும் மனசு ஆசையைக் 'கம்பியில்லாத் தந்தி' யாக்கிக்கொண்டு ஒரு செய்தியை அனுப்பியது.—அதென்ன? ''கண்மணி, கிரிஜா, என் மனது இன்னுமா உனக்குத் தெரியவில்லை?

அந்த விளக்கை எடுத்துக்கொண்டு நீயே வரக்கூடாதா'' அடுத்த நொடியில் அறிவு இந்த எண்ணத்தை ஆராய்ந்து சிரித்தது. ஆனல் என் எண்ணம் வீணுகவில்லை. எதிர்பார்த்தபடி எதிர்பார்த்த நபர் வந்துவிட்டால் 'அடடா! உங்களுக்கு ஆயுள் நூறு, இப்போதுதான் நினைச்சேன், நீங்களும்வந்துவிட்டீர்கள், என்றெல்லாம் சொல்வதுண்டு அல்லவா? அந்தமாதிரி நானும் அப்பொழுது சொல்லும் அதிர்ஷ்டக் காரனுக மாறிவிட்டேன்!

ஆம். அவள்தான்—ஏற்றிய விளக்குடன் அறைக்குள் வந்தாள்.

வாய்ச் சொற்களை 'வெற்றிகரமாகப் பின்வாங்க' வைத்துவிட்டு முன்னோக்கிவந்த உணர்ச்சி தொட்டிலிலாடுவதுபோல அவளைப் பார்த்தேன்.

புன்சிரிப்பு—அதுவும் ரமணிகளின் புன்சிரிப்பு விஞ்ஞானிகளுக் கும் சவால் விடும் ஓர் இரகசிய ஆயுதம்! பெண்களின் சாமர்த்தியத்திற்கு அது ஒரு தற்பாதுகாப்பு. அத்தகைய புன்முறுவலால் தன்னைச் சுற்றி 'அரண்' சமைத்துக்கொண்டே அவள் என்னைப் பார்த்து திருஷ்டியைத் தவழவிட்டாள். மேலும், மேலும் வெட்கமற்று மடிந்து, மடிந்து விழும் அலைகளாயின என் உணர்ச்சிகள். நான் திணறினேன். என்ன செய்யலாம்? புது அனுபவம்!

இதற்கிடையில் விளக்குமேஜையின்மீது வைக்கப்பட்டுவிட்டது. விளக்கின் ஒளி அவள் வதனத்தில் 'விளையாடி'யது. நானும் 'விளை யாடப்' பார்த்தேன். அவளோ, உணர்ச்சியின் வெறியோடு, மலையை அணைந்துவந்தாலும் கீழ்நோக்கி ஓடிப்போகிற நீர் வீழ்ச்சியைப் போல அப்பொழுது காணப்பட்டாள்.

சட்டென்று என்மூளை தந்திரம் என்ற ஒரு விளக்கை ஏற்றிக் கொண்டது. அதன் பலன் என்ன? அப்போது என்ன தோன்றியது? தயவு செய்து கேட்கவேண்டாம்.

சட்டென்று விளக்கை நான் ஊதிவிட்டேன்.

அறையை இருள் அணைந்தது. அறை சோபையை இழந்தது.

ஆனல் எங்களிருவர் இருதயப் பிரதேசத்திலே சோபை எழுந்தது. எங்களிருவருக்கும் மத்தியிலே உணர்ச்சிவிளக்கு ஏற்றப்பட்டது!

உணர்ச்சியின் 'தாலாட்டை'ப் பாடும் பெருமூச்சுகள் அந்த விளக்கை கோடி சூரியப்பிரகாசமாக்கின.

திக்கித் திணறி முதலில் நான் சொன்னேன்: "கிரிஜா,, உனக்கு ஆயுள் நூறு. நான் இப்போதுதான் நினைச்சேன். நீயே........."

"உஷ்!" என்று தனது புஷ்பக்கையால் என் வாயைப் பொத்தி விட்டு மிகவும் மெதுவாக மூச்சோடு மூச்சாக அஞ்சல் செய்தாள் கிரிஜா: "தெரியும், தெரியும், தெரியும். இப்படிச் சொல்லி ஏமாத்தலாம்னு எண்ணமா?"

வாயைப் பொத்திய கரம் என் கழுத்தைநோக்கி ஊர்ந்தது. அத்துடன் இன்ப அணுக்கள் கண்ணுக்குத்தெரியாத மின்சாரத்தைப் போல ஊடுருவின. தென்றலை ரஸித்து தலைசாயும் புஷ்பக் கொடியைப் போல என்னைப் பின்னிக்கொண்டு விட்டாள்.

உலகத்தையே மறக்கவைக்கும் இந்தமாதிரி சம்பவங்கள் எப்பொழுதும் நீடிப்பதில்லை. நீடித்தால் அந்த "இன்பநாடகம்" சுவாரஸ்யப்படுவதில்லை போலும்! ஆனால் இன்பத்தின் சிகரத்திலிருந்து உற்பத்தியாகும் சிரஞ்சீவிச்சாரலில் ஒதுங்கும் இந்த உணர்ச்சிகள் நீர்க்கோலமாக மாறுவானேன்? அற்பாயுள் பெற்று வருவானேன்? என்று என்மனம் தேம்பியது.

வெளிப்புறம்; சப்தம். வெளிக்கூடத்தில் கட்டியிருந்த எங்கள் வீட்டு நாய் திடீரென்று குலைக்க ஆரம்பித்துவிட்டது. நாங்கள் இருந்த அறைக்குச் சமீபமாக காலடிச் சப்தம். இதன் பலன் என்ன? அறையில் நான் மீண்டும் ஏகாந்தமாகி விட்டேன்; இல்லை, என்னுடன் இருளும் இருந்தது. கொஞ்சநேரத்திற்கு முன்பு எனக்கு உதவி செய்து தட்டிக்கொடுத்த அதே இருள், அறையை அணைந்தபடியே கிரிஜா சென்றபிறகு என்னைப் பார்த்துக் கைதட்டியது! என்ன கர்வம் இந்த அந்தகாரத்திற்கு!

மற்றொருநாள். கையெழுத்து மறையும் நேரம்—விளக்கேற்றும் வேளை.

எப்பொழுதுமே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்

டால், இந்தப் பாழும் மனசு சமாதானப்படுவதில்லை. அதிலும் காதல் மனத்தைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை! அன்பு, பிரியம், பிரேமை என்று சொல்லுகிறார்கள் அல்லவா? இவைகள் எல்லாம் அந்தமனத்தைச் சுற்றித் 'தானுனே' கொட்டின! அதுமாத்திரமா? 'திம்பி'யும் சுற்றின. ஏதோ ஓர் இன்பப் பிரபஞ்சத்திற்குத் திடீரென்று மின்சார ஏணியின்மூலம் போவதுபோல எனக்குத் தோன்றியது. ஆம், எல்லாம் கற்பனை தான்!

நான் அந்த அறையிலிருந்தது வேறு ஒருவருக்கும் தெரியாது— ஓர் அழகிய 'ஆத்மா'வைத்தவிர.

அந்த 'ஆத்மா' அங்கு கட்டாயம்வரும் என்று உறுதியாக என் மனம் நம்பியது. இந்த நம்பிக்கை போதாதா? கற்பனைக்குக் 'கண், மூக்கு, வாய், எல்லாம் முளைத்துவிட்டன! அந்தக்காலத்தில் காளிதாசனைப் போன்ற கற்பனை எனக்கிருந்திருந்தால் நானும் மேகதூதத்தைப்போன்ற மற்றொரு காவியத்தைச் சிருஷ்டித்திருப்பேன் என்று இப்போழுது தோன்றுகின்றது! அவளைப்பற்றி எத்தனையோ யோசனைகள்! எத்தனையோ சிந்தனைகள்! அவள் சந்தேகப்படலாம்; சந்தேகப்படுவதுசரி. அதைப்போக்க வேண்டியது என் கடமை. 'உலகம்அழிந்தாலும்சரி; பாலசுப்ரமணியன் வாக்கு அழியாது' என்று அவளிடம் உறுதியாகச் சொல்லிவிடவேண்டும்.........இவ்விதமெல்லாம்மனசு எண்ணங்களை நெய்துகொண்டே போகிறது.

நினைத்தபடி முடிந்துவிட்டால் இந்தமனம் அடையும் மகிழ்ச்சி... ஹா! ஹா!......

அவள்—என் வாழ்வில் முதன் முதலாக 'விளக்கேற்றி' அலங்கரித்தவள் கையில் விளக்குடன் அறைக்குள் வந்துவிட்டாள்.

இருள் 'வெளிச்சத்தை நம்பாதே' என்று சொல்லி மறைந்தது. விளக்கின் ஒளி அறையை ஆலிங்கனம் செய்துகொண்டது.

அவள் 'குடுகுடு' என்று வந்தாள்; மேஜைமீது விளக்கை வைத்தாள். மின்வெட்டுவதுபோலத் திரும்பிப்போக முயற்சித்தாள். என் மனசு அவளைப் பிடிக்கத்தாவியது.

அடடா! அப்பொழுது அந்த வதனத்தில் எத்தகைய திவ்யதேஜஸ்! அந்த இரத்தம் போன்ற உதடுகளின் அசைவுகளிலே எவ்வளவு குறும்புத்தனம்! அந்த நளின நேத்திரங்களிலே எத்தகைய ஆசையின் கிளர்ச்சி!

கண்ணைப்பறிக்கும் முறையில் அவள் தன்னை அலங்கரிந்துக்கொண்டிருக்கவில்லை. நீல நிறமயமான மில்துணிப் புடவை. வெளிர் ரோஜா வர்ண ரவிக்கையின் ரமணீகரம். காதில் சாதாரண சிகப்புக்கல் தோடு. மூக்கில் ஒத்தைக்கல் புஷ்பராக மூக்குத்தி. கழுத்தில் சங்குமணிமாலை. நெற்றியில் குங்குமப் பொட்டு. இந்த அலங்காரம் சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால், என் மனசுக்கு நிரம்பப் பிடித்திருந்தது!

ஆசையின் லாகிரியுடன் பார்த்தேன். ஏககாலத்தில் மேலே எடுத்த அடிவைக்கப் பார்த்தாள் அவள். உடனே அவளது கரத்தைத் தாவிப்பிடித்துக் கொண்டேன்.

மான்போல துள்ளி புறுபோல ஒடுங்கினாள் அவள். சுற்றியும் பார்த்தாள். யாராவது பார்த்து விடுவார்களோ என்ற அச்சம் அவள் முகத்தில் அச்சாகியது. எனக்கும் உள்ளூர நடுக்கம்தான்! இருந்தாலும் முன்னைவிட அதிகமாய்த் தைரியம் பிறந்துவிட்டது.

அவ் விளக்கொளியிலே அவளது வதன விளையாட்டை ரஸிக்க விரும்பினேன். அவளோ.........?

அவளுக்குச் சட்டென்று என்ன தோன்றியதோ? முன்னொரு நாள் நான் விளக்கை ஊதினேன் அல்லவா? அதை நினைத்துக்கொண்டாளோ, என்னவோ? எதிர்பாராதமுறையில் அவளே சட்டென்று விளக்கை ஊதி அணைத்துவிட்டாள்.

வெளிச்சம் விடைபெற்றது. இருள் 'உதவிக்கு வந்துவிட்டேன்' என்றது! அறையில் கவிழ்ந்திருந்த அந்தகாரத்திற்கு மத்தியிலே நாங்கள் எங்களது உள்ளத்தின் விளக்கைத் தூண்டித்தூண்டித் தூண்டிவிட்டுக்கொண்டே............

அவள் ஏன் விளக்கை அணைக்கவேண்டும்? உள்ளத்தின் பாஷை உணர்ந்தவர்களுக்குத்தானே தெரியும்?

நாங்கள் பெருமூச்சுடன் நெருங்கினோம். என் கை அவள் இடுப்புக்கு அரண் செய்தது. அவள் என் மார்பகத்தில் முகத்தைத் தோய்த்தாள். முகத்தைத் தூக்கிப்பிடித்து "கிரிஜா, ஏன் விளக்கை ஊதினாய்?" என்றேன்.

"நீங்கள்தான், என்னை அப்படியே கடித்து விழுங்கிவிடுகிற மாதிரி பாத்தீங்களே. அந்த திருஷ்டியிலே இருந்து தப்பத்தான் ஊதினேன்" என்றாள். பெருமூச்சு எதிரொலித்தது.

"நீ என்ன வெல்லக்கட்டியா? அப்படியே விழுங்கிவிட.........?" மெதுவாகச் சிரித்தேன்.

கிரிஜா மௌனமாக என் சட்டைப் பொத்தானைத் தடவினாள்.

"எனக்கோர் சந்தேகம். அதை ரொம்பநாளாக உன்னைக் கேட்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டே யிருக்கிறேன்."

"என்ன? என்ன?" ஆவல் கலந்த கிலியுடன் கேட்டாள்.
"ஒன்றுமில்லை. பாலியத்தில் மாட்டுக் கொட்டிலில்......"

"ஆமாம். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறதே. அதற்கென்ன?"

"இல்லை, உன் கையில் நான் அடித்ததை மறைத்து மாடு உதைத்ததாகப் பொய் சொன்னாயே. அது எதற்காக?"

"அதுவா? ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணிவை என்று சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? அதற்காகத்தான்!"
"பண்ணிவைக்கவா? அல்லது பண்ணிக்கொள்ளவா? இதை நினைத்துத்தான் பொய் சொன்னாயா, என்ன?"—புன்னகைத்தான்.
"இல்லை அப்போ என்னமோ அப்படிச் சொல்லு என்று என் மனசு சொல்லியது."

"என் மனசும் அப்படித்தான் சொல்லிற்று."

"அது போகட்டும். இன்னொரு சந்தேகம். அந்த மாட்டுக் கொட்டிலில் நடந்த சம்பவத்தின்போது, உன் கண்ணைப் பொத்த வேண்டு

மென்று நான் வந்தேன். உனக்குப் பின்னே நான் நின்றதை நீ எப்படிச் சட்டென்று கண்டுகொண்டாய்?"

"ஓ, எனக்கு இன்னும் ஞாபகமிருக்கு. நீங்க பின்னே வந்ததுமே பாத்துட்டேன். ஆனுக்கா. தெரியாதுமாதிரி நின்னேன். நான் எப்படி பாத்தேன் தெரியுமா? நீங்கள் வந்ததும் மாடு தலையைத் தூக்கிச்சி. அதன் பெரிய கண்களிலே உங்க உருவம் தெரிஞ்சுது. அப்போ நீங்க எவ்வளவு சின்னவ......இப்போ எவ்வளவு உசந்து விட்டீயுங்க......"

அவளுடைய கொஞ்சும் பேச்சுக்கள் என் தேகத்தை சிலிர்க்க வைத்தன. ஆசையின் வேகம் அவளை அப்படியே ஆலிங்கனம் செய்துகொண்டது. இடையே மௌன இன்பம்.

திடீரென்று அவள் என்ன நினைத்துக்கொண்டாளோ? என் பிடியிலிருந்து விலகிக்கொள்ள முயன்றாள். தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். நான் திடுக்கிட்டுவிட்டேன். கண்ணீரைத் துடைத்து காரணத்தைக் கேட்டேன்.

"எப்போதும் நாம் இப்படி இருக்க முடியுமா?......" என்று விம்மிக்கொண்டே கேட்டாள்.

"பைத்தியமே, அச்சந்தேகம் வேண்டாம். நீ என்னுடையவள். இது சத்தியம். உலகத்தைப்பற்றி எனக்குக் கவலையில்லை" என்றெல்லாம் கதாநாயகன்போல சொல்லிக்கொண்டே போனேன்.

"என்ன இருந்தாலும் நான் ஒரு வேலைக்கார......" அவளால் பேசமுடியவில்லை. வார்த்தைகள் சிதறின.

"பைத்தியம் அதை மறந்துவிடு". நிலையற்றவள்போல் அவள் தள்ளாடினாள். ஆதரவுடன் அணைத்து ஆறுதல் கூறினேன்.

என்ன ஆச்சரியம்! ஒரு "ஹரிக்கேன்" விளக்கைத் தூக்கிக்கொண்டு அப்பக்கம் திடீரென்று ஓடிவந்தாள்—என் தங்கை ரோஸடிக்

அவ்வளவுதான். கிரிஜா 'அடித்து மோதி'க்கொண்டு வெளியே ஓடினுள் எதிரே "லோக்டி" வந்தாள். "இங்கேயா இருக்கே. ஒன்னை வெளியெல்லாம் தேடினேன். யாரு அங்கே? அங்கே, அண்ணுவா?"

"லோக்டி, சீக்கிரம் நெருப்புப் பெட்டியை எடுத்துவா. இந்த விளக்கைக் கொளுத்த வேண்டும்" என்றேன்.

"நான் மாட்டேன். கிரிஜா அக்கா கொளுத்துவா. அவகிட்ட சொல்லேன்" என்று கூறிய வண்ணமாய்க் கிரிஜாவைப் பிடித்துக் கொண்டாள்.

"விடு விடு. நான்போய் வேலையைக் கவனிக்கணும்" என்று திமிறினுள் கிரிஜா.

"எனக்கு எல்லாம் தெரியும். இப்படிவா. ரொம்ப வெட்கப் படுறேயே".

கிரிஜாவைப் பிடித்து அறைக்குள் ஒரு புறம் நிறுத்தினுள் "அண்ணு, நான்சொல்றபடி கேக்கணும். என்ன தெரிஞ்சுதா?" என்று சொல்லிவிட்டு கிரிஜாவுக்குப் பக்கத்தில் என்னை நிற்க வைத்தாள்.

"ஈதென்ன விளையாட்டு? அம்மாவுக்குத் தெரிஞ்சா......?"

"அம்மா, கோயிலுக்குப் போயிருக்கா. அப்பா இன்னும் வெளியே இருந்து வல்லே. எனக்குத்தெரியாதா?" என்ருள் லோக்டி.

"என்னை ஏன் இப்படி நிற்க வைக்கிருய்?" என்று நான் கேட்டேன்.

"ஒங்களில் யாரு உயரம்னு பார்க்க".

"பார்த்தாச்சா?" என்ருள் சிரித்துக்கொண்டே கிரிஜா.

"கொஞ்சம் பொறு. அவதிப் படுருயே" என்று கூறிவிட்டு என்னைப் பார்த்து "அண்ணு, கோவிச்சுக்காதே. நான் ஒண்ணு சொல்லப்

போறேன். நீங்கரண்டுபேரும் பொண்ணு, மாப்பிள்ளை மாதிரி இருக்கிங்க" என்ருள்.

"இருந்தாலும் உனக்கு இவ்வளவு வாய் கூடாது?" என்ருள் கிரிஜா.

"இருந்து இருந்து கிரிஜாவையா நான் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்?" என்று நான் வேடிக்கையாகச் சொன்னேன்.

"ஏன், எங்க கிரிஜாவுக்கு என்ன? அழகு குறைச்சலா? என்ன அண்ணு, அப்படிச்சொல்றே? அண்ணு, கிரிஜாவை நீதான் கல்யாணம் செய்துக்கணும்; இல்லாட்டி அவ வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டா, நம்மை எல்லாம் விட்டுட்டு போயிடுவா. அவளை விட்டு நான் எப்படி இருப்பேன்?"

"உஷ். சின்னக்குழந்தை என்கிறது சரியாக இருக்கே. ஒனக்குக் கல்யாணம் ஆளு, நீயும் அப்படி போகவேண்டியதுதானே!" என்ருள் கிரிஜா.

"கல்யாணம் பண்ணிக்காமயே இருந்துடுறேன். அப்போ?"

எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

லோக்டியிடம் இரகசியமாகச் சொன்னேன்: "இதை எல்லாம் அம்மாகிட்டே சொல்லாதே. தெரியுமா?"

"ஏன், அம்மா, அப்பாகிட்டே சொல்லி கிரிஜாவுக்கும் ஒனக்கும் கல்யாணம் பண்ணச் சொல்லப்போறேன். கிரிஜாமேலேதான் அம்மாவுக்கு ரொம்ப. பிரியமாச்சே......"என்ருள் லோக்டி.

"ஐயோ! கிணறுவெட்ட பூதம் புறப்பட்டமாதிரி ஆய்விட்டதே!" என்ருள் கிரிஜா.

"என் கண் அல்லவா லோக்டி,இதைஒருவரிடமும் சொல்லாதே" என்று நான் தயவோடு கேட்டுக்கொண்டேன்.

கிரிஜாவும், நானும் விழிப்பதைப் பார்த்து, அவளும் ஒன்றும் விளங்காது விழித்தாள். எதையோ யோசித்துவிட்டு முடிவில் சொன்னாள்: "சரி, அம்மா, அப்பாகிட்டே சொல்லவில்லே."

பிறகுதான் எங்கள் மனது சிறிது சமாதானம் அடைந்தது. அதே சமயத்தில் ஒரு தீர்மானம் இருதயத்தில் பதிவாகியது. அதென்ன?

"லோக்டியின் குழந்தை உள்ளம் எங்களுக்கு முதலிலேயே கல்யாணம் செய்து வைத்துவிட்டது. எப்படியும் கிரிஜாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதென்று நான் முடிவு கட்டிக் கொண்டு விட்டேன்.

எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்? லோக்டி வாயாடி அல்லவா? அவளால் வாயை மூடிக்கொண்டு எப்படி இருக்க முடியும்? என் அம்மாவிடமே 'கிரிஜாவை அண்ணுவுக்குக் கல்யாணம் பண்ணி விடு' என்று ஒருநாள் வேடிக்கையோடுவேடிக்கையாகச் சொல்லிவிட்டாள். ஆனால், அதற்கு முன்பேஎன் தாயாருக்கும் இத்தகவல் தெரிந்து விட்டது; கடைசியில் தகப்பனாரின் காதுவரையில் போய்விட்டது. அவ்வளவுதான். ஆபத்து அத்தியாயம் என் கதையில் ஆரம்பமாகியது.

என் தகப்பனாருக்கு சிவபெருமானிடம் பரமபக்தி. அகத்தில் எப்படியோ? அது மனதுபோடும் புதிர். புறத்தில் சரியான "சிவப்பழமா"க விளங்கினார். சிவச் சின்னங்கள் அவரைச் சதா அலங்கரித்துக் கொண்டேயிருக்கும். சிவபத்தியினால்தானோ, என்னவோ? என் பிதாவிடம் "நெற்றிக்கண்" கோபமும் சர்வ சாதாரணம். 'பெரிய மிராசுதார், பாம்பரையாக நல்ல அந்தஸ்து உள்ள குடும்பம். பணக்கவலை கிடையாது' என்ற மனத்தடிப்பும் அவருக்கு உண்டு. ஜாதியில் உயர்ந்தவன் என்ற சண்டாளத்துவ "தத்துவம்" அவர் உடன் பிறந்ததோ என்று எண்ணும்படி ஏற்பட்டுவிடும்.

கிரிஜாவையும், என்னையும் ஐக்கியப் படுத்திய காதல் அவர் மனத்தில் ஆத்திரத்தையும், கோபத்தையும் எழுப்பி விட்டுவிட்டது! என்ன காரணமோ? சட்டென்று அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை.

இச்செய்தி வெளிப்பட்டால், தனது குடும்ப கௌரவத்திற்கே பெரிய கெட்ட பெயர் வந்துவிடுமென்று அவர் நினைத்திருக்க வேண்டும். இல்லையேல் கட்டாயம் தன் சுபாவமான கோப நெருப்பைக் கொட்டியிருப்பார். இரகசியமாக என் தாயாருடன் கலந்துகொண்டு தந்திரமாய் சில ஏற்பாடுகளைச் செய்தார்.

மேல்படிப்புக்காக என்னைக் கட்டாயப்படுத்தி சென்னைக்கு அனுப்பி விட்டார். நான் சென்னைக்குப் புறப்படும்போதும் கிரிஜா எங்கள் வீட்டில்தான் இருந்தாள். கடைசிநாள் அவளைத் தனியாகச் சந்திப்பதற்குக்கூட முடியாமல் போய் விட்டது. உணர்ச்சி பூகம்பம் என் உள்ளத்தை உதிர உதிர உலுக்கிவிட்டது. ஏமாற்றத்தைக்கவ்விய என் கண்கள் 'கூண்டுவிட்டு கூண்டுபாயும்' சக்தியில்லாமல் போய் விட்டதே என்று தேம்பித் தவித்தன. புயலுக்கிடையே மின்வெட்டு கண்சிமிட்டுவதுபோல கிரிஜாவை தற்செயலாய் சமையல்கட்டில் நேத்திரங்கள் பார்க்கவில்லை; ஆவலுடன் சூட்சும ரீதியில் ஆலிங்கனம் செய்துகொண்டன! ஆமாம். அந்த ஒரு நிமிடம் கண்ணால் பேசிக் கொண்டோம். சோக நாடகம் நடைபெற்றது; ஆனால், சொல்லமுடியவில்லை. கண்கலங்கி உள்ளம் கரைந்து அங்கம் பதற பிரிந்தோம். "சபாஷ்! பாலசுப்பிரமணியம், உன் உறுதியை உலகம் மெச்சும். பாவம், பளிங்குபோன்ற கிரிஜாவைக் கெடுத்துவிட்டு, வாய் திறந்து ஓர் ஆறுதல் மொழியைக்கூடக்கூறாமல் சென்னைக்குப்புறப்பட்டுவிட்டாயே. இது தகப்பனாரின் கட்டளை என்று நீ 'சாக்கு'ச்சொல்லலாம். ஆனால், நீ ஒரு கோழையைப்போல நடந்து கொள்ளுகிறாய்." இப்படி யார் சொல்லுகிறார்கள்? வேறு ஒருவருமில்லை, என்னைச்சுற்றி முற்றுகையிட்ட எண்ண வளையங்களின் எதிரொலிதான்!

இரகசியமாக லோக்கியைக் கூப்பிட்டு, கிரிஜாவைப் பற்றி அடிக்கடி எனக்குக்கடிதம் எழுதும்படி இரகசியமாகச் சொல்லி வைத்தேன். கிரிஜாவிடமும் என்னிடமும், உயிர் வைத்திருந்த அவள் இரண்டு நாளைக்கு ஒரு தடவையாவது இரகசியமாகக் கடிதம் எழுதிப் போட்டு விடுவாள். அதைப் படித்தால்தான் மனம் நிம்மதி அடையும்.

சென்னைக்கு வந்து சரியாக இரண்டு மாதங்கள்கூட இருந்திருக்காதென்று நினைக்கிறேன். அதற்குள் நான் எதிர்பாராதது—எல்லாம்

நடந்து விட்டது. என் உள்ளம் குடைசாய்ந்து விழும் சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன.

"கிரிஜா நீ போனதிலிருந்து துரும்பாய்விட்டாள். எப்போதும் உன் ஞாபகம்தான். சாப்பாடுகூட சரியாக சாப்பிடுவதில்லை......"

"ஏன் அண்ணு, நீபயப்படுகிருய்? கிரிஜாவை அழைத்துக் கொண்டுபோய் நீயே கல்யாணம் பண்ணிக்கக்கூடாதா? அவள் எவ்வளவு அழுகிருள் தெரியுமா? ராத்திரி அவள் பக்கத்திலேதான் நான் படுக்கிறேன். தாணுக ஏதோ சொல்லிக்கொண்டே தேம்பி அழு கிருள். உன் மனசு கல்லு. அண்ணு......"

"இப்போ அம்மா, அப்பாகூட கிரிஜாவைக் கவனிப்பதேயில்லை. திட்டுகிறதும், வையறதுமா இருக்கிருர்கள். ஏதோ உபகாரம் செய்த தற்கு கிரிஜா, அபகாரம் செய்துவிட்டாளாம்! நாயைக்குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தால் அப்படித்தாணும்! இப்படி அவங்க பேசுவது எனக்குப்பிடிக்கவேயில்லை........."

"அப்பா, கிரிஜாவின்பாட்டிக்குக் கடிதம் எழுதி வரவழைத்து விட்டார். நாளைக்கு அந்தப்பாட்டியுடன் கிரிஜாவை அனுப்பப் போகி ருங்களாம். 'கிரிஜாவை சீக்கிரம் கல்யாணம்செய்து கொடுத்துவிடு. அதற்காக வேண்டிய பணச்செலவை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்' என்று அந்தப்பாட்டியிடம், நம்ப அப்பா சொல்லிவிட்டார். கிரிஜா ஊருக்குப் போவப்போகிருள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நீ அவளைக்கல்யாணம் பண்ணிக்கவேண்டுமாஞல் உடனே புறப்பட் டுவா......"

"அண்ணு, இதை எழுதவே எனக்கு மனசு இல்லை. சொன்ஞல் உன்மனசு கஷ்டப்படும் என்று தெரியும். அண்ணு, பாட்டியும், கிரி ஜாவும் அவகர்ளுடைய ஊருக்கு ரயில்வண்டியில் போய்க்கொண்டிருந் தார்களாம். ரயில் ஒரு பெரிய ஆற்றின் பாலத்தின்மீது ஓடிக்கொண் டேயிருக்கும்போது கிரிஜா திடீரென்று பாய்ந்து ஆற்றில் குதித்து விட்டாளாம். ஆற்றிலே ஒரே வெள்ளமாம். அதனுலே கிரிஜாவின் சரீரம்கூடதெரியாமே அடித்துக்கொண்டு போய் விட்டதாம். இனி

மேல் இந்தமாதிரி ஒரு கிரிஜாவை எப்போ அண்ணு பார்க்கப் போகி ரேும்?......இந்தச் செய்தியை கிரிஜாவின் பாட்டியே திரும்பி வந்து அப்பா அம்மாவிடம் கூறி அழுதாள்......"

இந்தத் தகவல்களை எல்லாம் அப்போதைக்கப்போது என் தங்கை 'லோக்டி' எனக்கு எழுதியகடிதங்களின் மூலம் தெரிந்து கொண் டேன்.

கிரிஜா தற்கொலை செய்துகொண்டாள் என்ற கடைசிச் செய்தி என் மூளையைக் கலக்கிவிட்டது. என் குடும்பத்தின்மீது தீராத வெறுப்பு ஏற்பட்டது. விரக்தியின் சாயலில் நான் ஒதுங்க ஆரம்பித்தேன். படிப்பில் புத்தியே செல்லவில்லை. நடைப் பிரேதம்போல சென்னையிலேயே தங்கி வந்தேன்.

காலத்திற்குக் கவலையின் வேகத்தைக் குறைக்கும் சக்தி உண்டு! கிரிஜா இவ்வளவு விரைவில் தன்னை "ஊதிய விளக்கா"க மாற்றிக் கொள்ளுவாள் என்று நான் கனவிலும் கருதவில்லை. ஆனுல், உண்மையில் கதைகளில் வரும் லட்சியக் காதலியாக நடந்துகொண்டு விட்டாள். ரோமியோவும், ஜூலியத்தும், லைலாவும், மஜ்னுவும் அசரீரிகளாக வந்து என்னையும் கிரிஜா உள்ள இடத்திற்குக் கூப்பிட்டார்கள்! நான் திடுக்கிட்டு விட்டேன். அவர்கள் அழைப்பை நான் நியாயமாக ஏற்றுக்கொள்ளும் நிலைமையில்தான் இருந்தேன். ஆனுல்......

இடையிலே என் வாழ்க்கையில் ஒருத்தி வந்து சேர்ந்தாள். சென்னை ராஜதானிக் கல்லூரியில் என்னுடன் என் வகுப்பிலேயே படித்து வந்தவள். அவள் கிரிஜாவின் புனர் ஜன்மமாக விளங்கினுள். கிரிஜா ஆங்கிலம் படிக்காதவள். ஆனுல் இவள் ஆங்கிலம் படித்தவள். அவ்வளவுதான் வித்தியாசம். மற்ற வகையில் குணம், பேச்சு, நடை, பாவனை எல்லாவற்றிலும் கிரிஜாவுக்கு ஒத்திருந்தாள்.

உடைந்துபோன என் மனத்தை அவள் அன்பு திருப்பியும் ஓட்டவைத்துவிட்டது. என் உள்ளத்தில் ஊதப்பட்ட விளக்கை அவள் மீண்டும் ஏற்றிவிட்டாள். என் வாழ்க்கையின் ஆரம்ப இரகசியத்தை

அவள் கேட்க வில்லை. அவளுடைய ஜீவியத்திலும் ஏதாவது இரகசியம் உண்டா? என்பதை அறிய நான் முயற்சிக்கவில்லை. ஆனால் எங்களுடைய மனது பக்குவப்பட்டு விட்டது. இருவரிடமும் மனித சுபாவமே அதிகம். அதிதமான லட்சியங்கள் எங்களைக் கட்டுப் படுத்த வில்லை. மேலும் வளர்த்தவில்லை. என் கதையை முடி துவிடுகிறேன். நாங்கள் இருவரும் பி. ஏ. பரீட்சையில் தேறிய பிறகு எங்களுடைய பெற்றோர்கள் சம்மதமில்லாமலேயே கல்யாணம் செய்து கொண்டுவிட்டோம். நான் கல்யாணம் செய்துகொண்டது சரியா? என்று நீங்கள் கேட்கலாம். புனிதமான மனத்தை அலசிப் பாருங்கள். "கல், மண், தூசி" எல்லாம் கண்ணில் படத்தான் செய்கின்றன! அதுதான் உலகம். லட்சியக்கோட்டையில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அமானுஷ்யமாயில்லாமல், அசாதாரணமாய்த் தோன்றாமல் இருக்கும் மனித சுபாவத்தில்தான் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

அடடா! கிரிஜா யார் என்பதைப்பற்றி இதுவரையில் சொல்ல மறந்துவிட்டேனே. கிரிஜா எங்கள் வீட்டிலிருந்த வேலைக்காரியின் மகள். கிரிஜாவின் தாயார் புருஷனை இழந்த பிறகு மிகவும் கஷ்டப் பட்டாள். குழந்தையாக இருந்த கிரிஜாவுடன் எங்கள் வீட்டில் வேலைக்கமர்ந்தாள். அவள் குணத்தில் தங்கம்; மிகவும் அடக்கம். எனது பெற்றோர்கள் அவளையும், அவள் குழந்தையையும் அன்புடன் காப்பாற்றி வந்தார்கள். அக்குழந்தைக்கு கிரிஜா என்று பெயரிட்டவள் என் தாயார்தான். கிரிஜாவை தன் சொந்தக் குழந்தைபோலவே வளர்த்து வந்தாள் என்று சொல்வது மிகையாகாது. இதற்கிடையில் திடீரென்று கிரிஜாவின் தாயார் மாரடைப்பால் மரணமானாள். தனது அந்தியகாலத்தில் அவள் என் பெற்றோர்களிடம் கிரிஜாவையும், கிரிஜாவின் பாட்டியையும் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டாள். அவளுக்கு அளித்த வாக்கின்படி என் பெற்றோர்கள் கிரிஜாவைக் காப்பாற்றி வந்தார்கள் என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் கிரிஜா என்ன இருந்தாலும் வேலைக்காரியின் மகள்தானே? 'நம்முடைய குடும்பத்தின் கௌரவமென்ன? அந்தஸ்தென்ன? நம் ஜாதி என்ன? நம் ஆசாரமென்ன? நமது பந்து ஜனங்கள் அறிந்தால் என்ன சொல்லுவார்கள்? இந்த விஷயம் வெளிப் பட்டாலே தலையை வெளிக்காட்ட முடியாதே' என்றெல்லாம் என்பெற்றோர்கள் நினைத்துவிட்டார்கள்.

உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்துவிட்டாள் கிரிஜா' என்று எண்ணினார்கள். கிரிஜாவே என்னைக் கெடுத்துவிட்டதாகத் தீர்மானித்துவிட்டார்கள். உண்மையில் கிரிஜாவைக் கெடுத்தவன் நான்தான் என்பதை அவர்கள் அறியவில்லையோ? அல்லது அறிந்தும் அறியாதவர்கள்போல நடந்துகொண்டார்கள் போலும்!

கிரிஜாவோ உலகத்தைச் சிறிதும் அறியாதவளாய்விட்டாள். எனது வாழ்க்கையில் 'விளக்கேற்றிய' அவள் தன் 'வாழ்க்கை விளக்கை' ஊதிக்கொண்டுவிட்டாள்; லட்சியப்பூர்வமான கதாநாயகியாகிவிட்டாள். ஆனால், நானோ சர்வ சாதாரணமான மனிதக் கும்பலில் ஒருவனாகிவிட்டேன். குற்றமற்ற அவளின்மீது குற்றம் சுமத்த நான் அருகன் அல்லன். ஆனால், அவள் தற்கொலை செய்துகொண்டதை நினைக்க நினைக்க என் மனம் வெந்து வெந்து சாம்பலாகிறது. அப்படியானால் நீ ஏன் மற்றொருத்தியை மணம் புரிந்துகொண்டாய் என்று தயவு செய்து கேட்டுவிடாதீர்கள். பொசுங்கிய சாம்பலும் உரமாகிவிடுகிறது! நான் அசாதாரணமான மனிதன் அல்ல. என் செய்கையை பலஹீனம் என்று சொல்லலாம்; தவறுதல் என்று கூறலாம். இலட்சியமற்றவன் என்று என்னைத்திட்டலாம். ஆனால், மனித சுபாவம் என்னைத் தொட்டிலிலிட்டு ஆட்டிவிட்டது! ஒழுக்கவாதிகளும், லட்சியவாதிகளும் மனோதத்துவத்தின் போக்கை உணர்ந்தால் என்னைக்கட்டாயம் மன்னித்துவிடுவார்கள்!

என்மீது உங்களுக்கு அனுதாபம் இருக்காது. ஆனால், உங்கள் அனுதாபம் கிரிஜாவுக்கு உண்டு என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நான் பிழை செய்துவிட்டதாக நீங்கள் எண்ணினால், தயவுசெய்து கிரிஜாவின் ஆத்மாவுக்காக என்னை மன்னித்துவிடுங்கள்!

இவ்விதம்படித்து ஒருவாறு கதையை முடித்தேன்.

"அப்பாடா! முடித்ததா?" என்றாள் கல்யாணி.

"கதை எப்படி?" என்றேன்.

''எப்படியிருக்கவேண்டுமோ அப்படியிருக்கிறது.''

கல்யாணி முல்லைச் சிரிப்பை அரும்பவிட்டாள்.

''கல்யாணி, நான் ஒரு கேள்வி கேட்கப்போகிறேன்...''

''கிரிஜாவைப்பற்றி தானே?''

''கிரிஜாவைப்பற்றி அல்ல; ஆனால் நீ கிரிஜாவாகயிருந்தால்...?''

''என்னசெய்வாய் என்று கேட்கிறீர்களாக்கும்?''

நான் புன்சிரிப்புடன் தலை அசைத்தேன்.

கல்யாணி கண்களைநர்த்தனமாட விட்டுக்கொண்டே கூறினாள்: ''பெண்களின் ஸ்திரபுத்திக்கு கிரிஜா ஓர் உத்தம உதாரணம். கைவிடும் சுபாவமுள்ள ஆண்களுக்குப் பாலசுப்பிரமணியம் ஓர் 'அவதாரம்'! இதைக் காட்டத்தான் இந்தக் கதை எழுதப்பட்டிருக்கிறதென்று யாரும் சொல்லிவிடுவார்கள்....''

''அப்படியானால் நீ கிரிஜாவை ஆதரிக்கிறாய் என்றாய்விடுகிறது...''

''வாஸ்தவம்.கிரிஜாவினிடம்தான் என் அனுதாபம் செல்லுகிறது. அவளை ஆதரிக்கிறேன். ஆனால் அவளை இக்கதையில் சிருஷ்டித்த கதாசிரியரை நான் ஆதரிக்க முடியாது.''

''எதனால் இப்படிச் சொல்லுகிறாய்? கிரிஜாவைப் பற்றி அப்படி எழுதியதற்காக அந்தக் கதாசிரியரை நீ ஆதரிக்கத் தயாராகவில்லையா?''

''ஆமாம். பாலசுப்ரமணியத்தை மாத்திரம் சாதாரண மனுஷ்ய சுபாவத்தில் காட்டி, கிரிஜாவை மாத்திரம் காதலுக்காக தற்கொலை செய்துகொண்டதாக எழுதுவானேன்? அவளையும் மனித சுபாவத்துடன் சிருஷ்டிக்கக் கூடாதா? அவளை மாத்திரம் பிடித்து ஆற்றில் தள்ளுவானேன்?''

"காதலை ஸ்திரப் படுத்த."

"கதை எழுதுகிறவர்கள் எல்லாம் இந்தக் காதலைப் பிடித்துக் கொண்டுதான் தொங்குகிறார்கள். அவர்களுக்குவேறு'போக்கு இடம் கிடையாதா? 'காதல்; அன்றேல் சாதல்" என்று யுகயுகமாய்ச் சொல் லிக்கொண்டும், கதையைக் கட்டிக்கொண்டும், காவியங்களைச் சிருஷ்டி த்துக்கொண்டுமிருப்பர்வர்களை கட்டாயம் எச்சரிக் வேண்டும். காதல் காதல் என்று வாழ்க்கையையே 'கொலை' அல்லவோ செய்து தீர்த்து விடுகிறார்கள்' எனக்கென்னமோ இந்த வாழ்க்கையில் ஓர் அணுதான் இந்தக் காதல் என்று தோன்றுகின்றது. காதலுக்காக இந்த வாழ்க் கையையே 'தலைமுழுக' அடித்துவிடுவது மகாபாவம்; மேலும் மனித சுபாவத்துக்கு ஒத்த—அவிந்து போகாத ஆசாபாசங்களை அறியாத குற்றமுமாகும்"

"ரொம்ப சரி. கிரிஜாவாக இருந்தால் நீ தற்கொலை செய்து கொ ள்ள மாட்டாய் என்றுதானே சொல்லுகிறாய்?"

"ஆமாம். அந்தக்கதையில் வரும் பாலசுப்பிரமணியம் கிரிஜாவை ப்போலவே காணப்பட்ட மற்றொரு ஸ்திரீயை கல்யாணம் செய்து கொண்டுவிட்டான் அல்லவா? அதுமாதிரி நான் கிரிஜாவாக இருந் திருந்தால், பாலசுப்பிரமணியத்தைப் போலவே காணப்படும் மற்றொ ருவரைத் தேர்ந்தெடுத்து கல்யாணம் செய்துகொண்டு விடுவேன். அது போகட்டும். நீங்கள் பாலசுப்பிரமணியனாகயிருந்தால்......?"

"......கிரிஜாவைப்போல தற்கொலை செய்துகொண்டு விடுவேன்."

"எல்லாம் சொல்லுவது சுலபம்......"

இவ்விதம் கூறிவிட்டு "டக்" கென்று எழுந்தாள் கல்யாணி. மின் சார விளக்கின் பொத்தானை அழுத்திதள்ளி.

உடனே இருள் அறையைக் கட்டிப் பிடித்தது.

நிலவின் ஒளி அறைக்குள் நீண்டு படுக்கவில்லை. ஜன்னல் கம்பியுடன் நின்றுவிட்டது.

ஊர்முழுவதும் அமைதியின் இன்பம். வான மண்டலத்திலே சந்திரிகையின் மலர்ச்சி.

"கிரிஜாவைப்போல விளக்கை ஊதவில்லை; ஆனால் பொத்தானை அமுக்கி விளக்கை அணைத்துவிட்டேன்" என்றாள் கல்யாணி. நானும் கட்டிலின் சமீபம்சென்றேன்.

"ஏன் விளக்கை அணைத்தாய்?" என்று கேட்டேன்.

"நீங்கள்தான் என்னை கடித்து விழுங்குகிறமாதிரி பார்த்தீர்களே! அதனால்தான் கிரிஜா மாதிரியே நடிக்கிறேன்!"

"ஓ! அப்படியானால் நானும் பாலசுப்பிரமணியம்மாதிரியே பதில் சொல்லுகிறேன். நீ என்ன வெல்லக் கட்டியா?...... கடித்து விழுங்கிவிட..."—நான் சிரித்தேன்.

"வெல்லக்கட்டியல்ல; தங்கக்கட்டியாக்கும்! ஜாக்கிரதை!"என்று கூறி கல்யாணியும் சிரித்தாள்.

"தங்கக்கட்டியல்ல; தங்கக் கம்பியாக்கும்!" என்றேன் நான்.

"ஓகோ! நீங்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் நான் வருவேன் என்று நினைத்துவிடாதீர்கள்"—கல்யாணி 'விழுந்து விழுந்து" சிரித்தாள்.

அதிகாலை. கண் விழித்தேன். பக்கத்தில் கல்யாணியைக் காணவில்லை. தலை நிமிர்ந்து பார்த்தேன்.

சாய்மான நாற்காலியிலமர்ந்தபடியே கல்யாணி பத்திரிகையைக் கையிலேந்தி வாசித்துக்கொண்டிருக்கிறாள். ஆம். நான் நேற்று இரவு

படித்துக்காட்டி! அதே கதையைத்தான் அவள் திரும்பியும் படித்துக் கொண்டிருக்கிருள் என்று தெரிந்துவிட்டது. என்ன ஆச்சரியம்! அவள் எதற்காக அதைத் திருப்பி வாசிக்கவேண்டும்?

மூளை யோசனையில் நீந்தியது. என் வாழ்க்கையில் கிரிஜா விளக்கேற்றினுள். அதுபோலவே கல்யாணியின் வாழ்க்கையிலும் வேறு யாராவது......இந்தச் சிந்தனை என் உள்ளத்தை இழுத்துப்பிடித்து சவாரி செய்ய ஆரம்பித்தது. அதைப்பற்றி நான் அவளைக் கேட்க மனம் துணியவில்லை. ஏனெனில் அவளும் எனது வாழ்வின் இரகசியத்தைக் கிளற முயற்சிக்கவேயில்லை. என்னை நானே சமாளித்துக்கொண்டு மெதுவாக எழுந்து "கல்யாணி, நான் படித்தபோது கதையைச் சரியாக கேட்கவில்லை போலிருக்கிறது.அதனுல்தான் திருப்பி அதைப்படிக்கிருயோ?" என்று கேட்டேன்.

"அதற்காகப் படிக்கவில்லை. இந்தக் கதையை நீங்கள்தான் எழுதியிருக்கிறீர்கள் என்று எதற்காக என்னிடம் சொல்லாமல் மறைத்துவிட்டீர்கள். நீங்கள் எழுதிய கதை என்ருல் கவனமாகக் கேட்க மாட்டேன் என்ற எண்ணமா?"

"நான் எழுதியதாக உனக்கு யார் சொன்னது?'

"சொல்லுவானேன்? இதில்தான் "சந்துரு"என்று பெயர் போட்டிருக்கிறதே. சந்திர சேகரன் என்று கூப்பிடுவதற்குப் பதிலாகத் தங்களை உங்கள் அம்மா சந்துரு என்று செல்லமாகக் கூப்பிடுவது வழக்கம் என்றும், அந்தப் பெயரிலேயே பத்திரிகைக்குக் கதைகள் எழுதுவது வழக்கம் என்றும் தாங்களே என்னிடம் சொல்லியிருக்கிறீர்களே. அதை நான் மறந்துவிட்டேன் என்று நினைத்தீர்களா? பெண்களுக்கு ஞாபக சக்தி அதிகம்!"

"பைத்தியமே, உலகத்தில் நான் ஒருவன்தானு "சந்துரு"? எத்தனையோபேர். இதற்குப் பிறகும் நான்தான் இந்தக்கதையை எழுதியிருக்கவேண்டுமென்று நீ நம்புகிருயா?"

"உங்களை நம்பவில்லை. உங்கள் மனதை நம்புகிறேன்".

"அப்படியா? உலகத்திலே நம்பக்கூடாத வஸ்து இந்த மனசு தான் என்பது என் அபிப்பிராயம்!"

"வாஸ்தவம், மனத்தின் சுபாவத்தை அறிந்தவர்கள் இதைப்பற்றி குறிப்பிடத் தேவையில்லை. ஆனால் ஒன்று. நானும் மனதைநம்பத் தயாரில்லை; இருந்தாலும் மனதுடைய மனிதர்களை நம்பித்தான் ஆகவேண்டியிருக்கிறது; இல்லையேல் வாழ்க்கை ஒரு பெரிய பளுவாகி விடுகிறதென்று முன்பு ஒரு சமயம் கூறியதாக ஞாபகம்."

"தத்துவம் பேசுகிறாயே!' என்று கிண்டலுடன் கூறினேன்.

"தத்துவமில்லை, பெண்களுக்கு என்ன பேசத்தெரியும் என்று நினைப்பது ஆண்களின் சுபாவம்! தெரிந்ததோ? வாழ்க்கையைப் பளுவாக்கிறதும் மனசுதான்; இலேசாக்கிறதும் மனசுதான்; இதைத் தெரிந்துகொள்ளத் தத்துவம் படிக்கவேண்டியதில்லை."

இவ்விதம்கூறிக்கொண்டேகல்யாணி "கலகல" வென்றுசிரித்தாள்.

ஆம்! அதே வெண்கலச் சிரிப்பு! அதே "கலகலப்பு"! அதே குரலினிமை! அதே இன்பம் தோய்ந்த திருஷ்டி! என்ன அதிசயம்! கிரிஜாவே எதிரே வந்து நிற்கிறாள். இதோ சினிமாப்படக் காட்சிபோல கிரிஜாவின் தோற்றம் கல்யாணியின் உருவத்தோடு சம்மேளித்து விட்டது.

"அட கடவுளே, ஈதென்ன இப்படிப் பார்க்கிறீர்களே. கண் வைத்து விடாதீர்கள்!" என்றாள் கல்யாணி.

சட்டென்று நான் நகைத்துவிட்டேன்.

கல்யாணியின் பதில் சிரிப்பு கிரிஜாவின நகைப்பாகவே எதிரொலித்தது; எதிரொலிக்கிறது; எதிரொலித்துக்கொண்டே யிருக்கிறது! எதிரொலித்துக்கொண்டேயிருக்கும்.!

# கலா-நிஷ்டை

"என்ன இழவு. எப்பொழுது பார்த்தாலும் இப்படி புஸ்தகமும் கையுமாக உட்கார்ந்திருக்கிறாயே! எப்படித்தான் பொழுது போகிறதோ? படித்த சில பிரம்மசாரிகள் இப்படித்தான். 'ஐயோ, என் தலைவிதியே!' என்று புஸ்தகங்களிடம் 'சரணாகதி' அடைந்து விடுகிறார்கள்!"

இவ்விதம் அப்பொழுதுதான் அங்கு வந்த ஞானம் சிரித்துக்கொண்டே கூறிவிட்டு ஒரு நாற்காலியில் அமர்ந்தான். அவன் நண்பன் ரமணன் புஸ்தகத்தை கையில் வைத்துக்கொண்டே "பிரம்மசாரிகளுக்கு புஸ்தகம் ஓர் உற்ற துணை தான்; ஆனால், குடும்பஸ்தர்களுக்கோ ஒரு பெரிய பாரம்தானே!" என்றான்.

"நான் உன்னைப் போல புஸ்தகங்களைப் படிக்காதவன் என்று சொல்லிக்காட்ட வேண்டாம்! அது போகட்டும், அதென்ன புஸ்தகம்?"

"கலையைப் பற்றிய புஸ்தகம்."

"ஓ! நீ ஒரு கலைஞன் என்பதை மறந்துவிட்டேனே! என்னமோ, கலை கலை என்று கதை அளந்து வைத்திருக்கிறார்கள்! அவ்வளவுதானே! கலை என்றால் என்ன?" என்றான் ஞானம் கிண்டலாக.

"எங்கே கலை பரிபூரணத்வத்தை அடைகிறதோ, அங்கே கலை பரிணமிக்கிறது."

"ஆகா! அழகாய்ப் பேசிவிட்டாயே! இந்தக் கலைஞர்களே கனவு காண்கிற பேர்வழிகள்தானே! பிரத்தட்சயத்தைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே புரிவதில்லை."

"வாஸ்தவம், கனவு காண்பவர்கள் தான்! பிரத்தட்சயம் தான் ஒரு வகையில் கனவில் புது ஜன்மம் எடுக்கிறது, புது கற்பனையுடன்! அக் கற்பனை தான் இலக்கியமாகிறது........"

"சரி, சரி, போதும். கலையும் வேணும், கத்தரிக்காயும் வேணும்., புறப்படு, சீக்கிரம். மணி ஏழு ஆகப்போகிறது. இந்நேரம் ஆரம்பமாகியிருக்கும்."

"எங்கே புறப்படச் சொல்லுகிறாய்?"

"இன்று வெள்ளிகிழமை அல்லவா? லலிதாவின் பாட்டுக் கச்சேரியை அன்று ரேடியோவில் கேட்டதிலிருந்து நேரில் கேட்கவேண்டுமென்று அன்றொரு நாள் நீ சொன்னது ஞாபகமில்லையா?"

"ஆமாம்."

"வெள்ளிக்கிழமை தோறும் அவள் வீட்டில் அவளே வீணையை மீட்டி சாக்ஷாத் சரஸ்வதி மாதிரி பாடுவது வழக்கம். இது உனக்குத் தெரியாதா?"

"எனக்கு எப்படித் தெரியும்? சங்கீதக்காரர்களிடையே உனக்குள்ள வியாபகம் எனக்கு உண்டா?"

"சரி, கிண்டலுக்கு ஆரம்பித்து விட்டாயா? நேரமாகிறது, புறப்படு. அந்தப் புஸ்தகத்தைத் தூக்கிஉடைப்பில்போடு. லலிதாவின் முகமே ஒரு கலைப் புஸ்தகமாயிற்றே!" இவ்விதம் கூறிவிட்டு ஞானம் கலகல வென்று சிரித்தான்.

"என்ன இருந்தாலும் தாசிவீடு அல்லவா? அங்கு வர என் கால் கூசுகிறது."

"நல்ல வேளை! மனசு கூசவில்லையே!"

ஞானம் மறுபடியும் சிரித்து விட்டு சொன்னான்:' "கலைஞன் என்று சொல்லிக் கொள்ளுகிறாய். சங்கீதத்தில் பெரியபித்து என்கிறாய். நேரில் போய்க் கச்சேரியைக் கேட்டு வருவோம் என்றால் இப்படி பேசுகிறாயே! என்ன இருந்தாலும் இந்தக் கலைஞர்களே கோழைகள்!

வெறும் கற்பனை ஜம்பம். காரியத்தில் இறங்கும் போது குலை நடுக்கம்! இந்தக் கலைஞனுக்கு எல்லாம் தெரிந்தது போல பேசத் தெரியும்; அனுபவிக்க மாத்திரம் தெரியாது."

"உனக்குத் தான் தெரிகிறதென்று ஏதேதோ, பேசிக் கொண்டே போகிருயே! கலைஞன் ஒருவனுக்குத் தான் தெரியும் எதை எதை எப்படி அனுபவிக்க வேண்டும், எப்படி ரசிக்க வேண்டும்மென்று. பிறர் மனம் நோகாமல், மானபங்கமில்லாமல், ரசாபங்கமில்லாமல், ரஸிக்கவோ, அனுபவிக்கவோ அவனுல் தான் முடியும்."

"சரி, விவாதம் வேண்டாம். லலிதாவின் ஆடல்பாடல்களை நீ எவ்வளவு தூரம் ரஸிக்கிருயோ, அனுபவிக்கிருயோ என்பதை நேரில் பார்த்து விடுவோமே!"

மேலே பேச்சுக்கு இடம் கொடுக்காமல் ரமணனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஞானம் புறபட்டு விட்டான்.

ஞானம் சரஸி; பணக்காரக் குடுபத்தில் பிறந்தவன். தகப்பனர் இறந்து விட்டதால் குடும்பத்தில் அவன்வைத்தது சட்டமாகிவிட்டது. சொத்துநிறையஇருந்ததால் 'மைனர்'விளையாட்டி'ல் இறங்கிவிட்டான். அதனல், முன்னேர்கள்சேர்த்து வைத்துப்போன ஐஸ்வரியம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்தது. ஞானத்திற்குச் சங்கீதத்தில் அதிகப் பித்து. அவனுக்குப் பாடக்கூடத் தெரியும். சங்கிதக்காரர்களிடையே பரிச்சயமும் அதிகம். அவனுடைய மனேபாவமே அலாதியானது. 'என்னப்பா உலகம்? இருக்கிறவரையில் நன்ருகச் சாப்பிடனும். அநுபவிக்கனும், சுகிக்கனும், சாவனும்" என்று அடிக்கடி அவனே குறிப்பிடுவது வழக்கம்.

ரமணன் தஞ்சாவூர் ஜில்லாப்பேர்வழி. அவனது தகப்பனருக்கு சென்னை சர்க்கார்காரியாலயத்தில் ஒரு பெரிய உத்தியோகம். ஆகவே அவர் சென்னையிலேயே தன் குடும்பத்துடன் வசித்துவந்தார். அவருக்குப் பூர்வீகமாகவே சொத்து உண்டு. நில சம்பந்தமாக சில விவகாரங்களைக் கவனிப்பதற்காகத் தன் மகனை சொந்த ஊருக்கு அனுப்பியிருந்

தார். தகப்பனாரின் கட்டளைப்படி ரமணன் தன் சொந்த ஊருக்கு வந்தான். அவன் வந்து இப்பொழுது இரண்டு மாதங்களாகின்றன. ஞாலம் பால்யசிநேகிதனாதலால் அவனை அடிக்கடி பார்க்க வருவது வழக்கம்.

ரமணன் நல்ல அழகன். அவன் கண்களில் ஓர் அலாதியான ஒளி மின்வெட்டும். புன்னகையின் சாயல் நிரந்தரமாக விளங்கும் முகம் உடையவன். சீக்கிரத்தில் அவனுக்குக் கோபமே வராது. யாரிடமும் சுமுகமாகவே பேசுவான். பேச்சில் கற்பனை மலிந்திருக்கும். லளிதன், கலைஞன், ரசானுக்களின் பிண்டம், அழகு உபாசகன், மதுரகலைகளில் மகா பிரியமுள்ளவன் என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம். சித்திரம் வரைதல், புகைப்பட மெடுத்தல், புஸ்தகம் படித்தல்—இவைகள் தான் அவனுக்கு ரொம்பவும் பிடித்த வேலைகள். பி. ஏ. படித்துத் தேறிய பிறகு எங்கும் வேலைக்குப் போக விரும்பவில்லை. சொந்தத்தில் புகைப்பட மெடுக்கும் "ஸ்டுடியோ" ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று மனத்திற்குள் திட்டம் போட்டு வைத்திருக்கிறான். இதைப்பற்றிதன் தகப்பனாரிடம் கூறவும் தீர்மானித்து விட்டான். இதற்கிடையில் அவனது பெற்றோர்கள் அவனுக்குக் கல்யாணம் செய்யவேண்டுமென்று பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். ரமணனோ கல்யாணத்தைப் பற்றி சிந்திக்கவேயில்லை. அவனது சைத்ரீக உள்ளத்தில் கற்பனைப் பெண் ஒருத்தி உருவாகிக் கொண்டே வந்தாளோ, என்னமோ? அதைப்பற்றி அவன் யாரிடமும் வாய் திறக்கவில்லை. ரஸிக்கப் பிறந்த கலைஞரிடம், அனுபவிக்க பிறந்த கலைஞரிடம் ஒழுக்கத்தின் பெயரில் கட்டுப்பாடுகளைக் காட்டி பயமுறுத்துவது அழகல்ல என்பது அவன் அபிப்பிராயம். உலகக் கட்டுப்பாடுகளும், சம்பிரதாயங்களும் அவனது கற்பனையின் கிண்டல் பாகம்!

அன்று லலிதாவின் சங்கீதக் கச்சேரி 'அமீரா'க அமைந்துவிட்டது. லலிதா குரலழகுடன் உடல் அழகும் பெற்ற குயிலாளாக விளங்கினாள். அவள் சங்கீதவழி பாவ பூர்வமானது. ஒரு சிலர் இராக ஆலாபனம் செய்வதாக இழுத்து, வளைத்துப் பிடித்து ஒரு மணி நேரம் வரையில் 'யுத்தம்' செய்கிறார்கள் அல்லவா? அந்த முறைக்கு நேர்மாறானது லலிதாவின் இராக—பாணி. வீணையின் சுருதி சுத்தத்தோடு லயித்து,

எடுத்துக் கொண்ட இராகத்தை இரண்டு மூன்று நிமிடத்திற்குள் பாடி முடித்து விடுவாள். அதில் சுகமும், பாவமும் பொங்கும்; போட்ட சங்கதிகளின் அசைவுகள் மறுபடியும் தலைகாட்டா. சுருங்கமாகச் சொல்லப்போனால் சுகிப்பதற்கு லலிதாவின் சங்கீதத்திற்கு ஈடு இல்லை எனலாம்.

இது ஞானத்தின் அபிப்பிராயம். இதை முழுக்க முழுக்க ஒப்புக் கொண்டு மேலும் புகழ்ந்து பேசினான் ரமணன்.

அன்று கச்சேரி முடிந்த பிறகு கடைசிவரையில் உட்கார்ந்தவர்களில் ஒருவன் ஞானம்; மற்றவன் ரமணன் என்று சொல்லவேண்டியதில்லை.

ரமணனை ஞானம் லலிதாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான். "இவாளுக்குச் சொந்த ஊர் இது தான். ஆனால் சென்னையில் வாசம்: சங்கீதத்திலே நல்ல ஞானம். அது மாத்திரமல்ல. பொதுவாகச் சித்திரம், நடனம் முதலிய கலைகளைப் பற்றி எல்லாம் நிறைய படித்தவர்...."

"ஓ! அப்படிப்பட்ட ஞானஸ்தர்களின் ஆசீர்வாதம் தான் அவசியம்" என்றாள் லலிதா.

"ரமணா, லலிதாவை சாமான்யமாக எண்ணி விடாதே. சமஸ்கிருதம் கூட படித்திருக்கிறாள். தமிழிலும் நல்ல ஞானம். ரொம்ப புத்திசாலி. பேச்சில் வெல்லுவது ரொம்ப சிரமம்."

லலிதா மௌனம் சாதித்தாள். அந்த மௌனத்தில் அரும்பியது ஒரு முல்லைச் சிரிப்பு!

"ஆமாங்க. மகாலிங்க பாகவதரைப்பற்றி கேள்விப்பட்டிருப்பீர்களே. சமஸ்கிருதத்திலே மகா பண்டிதர். அவர்தான் லலிதாவுக்கு பாலியத்திலேயே ஹரிகதை சொல்லி வைத்தார். அப்போதே சமஸ்கிருதத்திலும் நல்ல ஞானத்தை உண்டாக்கிவிட்டார். அவர் கைதூக்கிவிட்ட குடும்பம்தான் இது. அவர் மாத்திரம் உயிருடனிருந்திருந்தால்

எங்கள் குடும்பத்துக்கு எவ்வளவு உபகாரமாயிருக்கும்'' என்று இடையே லலிதாவின் தாயார் 'நீட்டி முழக்கி'ப் பேசினாள்.

ஞானம் அவளுடன் மேலும் பேசாமல் லலிதாவை நோக்கி ''இன்றைய கச்சேரி ரொம்ப திவ்யம்'' என்றான்.

''என்னமோ என் மனத்திற்குத் திருப்தியில்லை. மேலும் பாருங்கள், உடம்பு சுகமில்லை. முன் மாதிரி பாடுவதற்கு முடிவதில்லை. அதிருக்கட்டும், அவாள் என்ன வாயைத் திறக்காமல் அப்படியே உட்கார்ந்திருக்கிறார்களே!'' என்றாள் புன்னகையைத் தவழவிட்டுக்கொண்டே லலிதா.

''என்ன ரமணா, ஏன் இந்த மௌனம்? மௌனம் சர்வார்த்த சாதகமா?'' என்றான் ஞானம்.

''இல்லை, லலிதாவின் கச்சேரியை நான் இன்னும் கேட்டுக்கொண்டேயிருக்கிறேன்! இன்னும் அந்த வீணையின் நாதமும், குரலினிமையும், பாவபூர்வமாக அனுபவித்துப் பாடிய சாகித்தியமும் என் காதில் விழுந்துகொண்டேயிருக்கின்றன. அதனால்தான் நான் பேசவில்லை'' என்றான் ரமணன் சிரித்துக்கொண்டே.

லலிதா சட்டென்று கேட்டாள்: ''ஈதென்ன, ஹாஸ்யமா? கற்பனையா?''

''இரண்டுமில்லை; பைத்தியம்!'' என்று ரமணனே கூறிவிட்டு திரும்பி ''என்ன ஞானம், நான் சொல்லுவது சரிதானே!'' என்றான்.

''சந்தேகமில்லாமல் கலைஞர்கள் பைத்தியக்காரர்கள்தானே!'' என்றாள் லலிதா.

சிரிப்புச் சத்தம் கொஞ்சம் எதிரொலித்தது.

புறப்படுவதற்குமுன்பு ரமணன் ஐம்பது ரூபாய் நோட்டை ஞானத்தின் கையில் கொடுத்து லலிதாவுக்கு சன்மானமாக அளிக்கும்படிக் கூறினான்.

ஞானம் அப்பணத்தை அங்கிருந்த தாம்பூலத்தட்டில்வைத்து லலிதாவுடம் கொடுத்தான். லலிதா அதை வாங்கும்போது ரமணனை நோக்கினுள்; ரமணன் அவளையே பார்த்தான். இக்கண்காட்சியை ஞானம் கவனித்தான்.

ஞானம் நினைத்தான்: "சரி. என்ன இருந்தாலும் அனுபவமில்லாதவன்தானே ரமணன்! லலிதாவின் 'வலை'யில் விழுந்துவிட்டான்."

லலிதாவைப் பற்றி அவன் நினைத்தான்: "என்ன இருந்தாலும் தாசிதானே, மற்றொருவனை தன் 'வலை'யில் மாட்டவைத்து பணம் பறிக்க நடிக்கிருள்."

உண்மையில் ரமணன் லலிதாவைப் பற்றி என்ன நினைத்தான்? லலிதாதான் ஏமாற்றும் நோக்கத்துடன் அவ்வளவு லளிதமோடு ரமணனைப் பார்த்தாளா?

அவர்கள் மனசுக்குத்தான் தெரியும் அந்த மூடுமந்திரம்!

* * *

நரகத்தில் ஸ்வர்க்கம்!

ஆம்.-அவள்-லலிதாவின் வாழ்வு அப்படி! ஆனுல், அவள் ஸ்வர்கத்தில் நரகத்தைக் கண்டாள். ஏன்?

அவள் வாழ்வு அப்படி! பச்சையாகச் சொல்லப் போனுல் விபசார வாழ்வுதானே? கோவிலும், ஆகமும் 'தேவதாசி' என்று 'புனித'ப் பாஷையில் பேசுவதால், வர்ணிப்பதால் அவளுடைய வாழ்வின் நரகத்தை மறைத்து விடமுடியுமா?

ரமணனின் சைத்ரீகக் கண் லலிதாவின் வாழ்வில் ஸ்வர்க்கத்தைக் கண்டது. நரகத்தைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. அந்த ரமணியின் அழகு, சங்கீதம், வாக்குச் சாதுரியம், பவ்யம், அறிவுவிலாசம், அன்பு, மரியாதை இவை எல்லாம் ரமணனின் சிந்தனையில் பூத்தன நட்சத்திரங்களாக. அவளைச் சதா பார்த்துக்கொண்டிருந்தாலே போது என்று, கற்பனை அவன் மனதிற்குள் கவிபாட ஆரம்பித்து விட்டது. ஆகவே;

லலிதாவின் வீட்டிற்கு அடிக்கடி போவான்; பாடச் சொல்லுவான் மெய்ம்மறந்து அச்சங்கீதத்தை அனுபவிப்பான்; அவளின் மதுர சம்பா. ஷணைகளில் தனது மனத்தைப் பரிமளிக்க வைத்துக் கொள்ளுவான். ஆனால், ஒன்று. எவ்வளவு நேரமானாலும் லலிதாவின் கிரகத்தில் அவன் தங்குவதில்லை; வேறு வித்தியாசமாகவும் அங்கு நடந்து கொள்ளவில்லை. இந்த ஓர் அபூர்வநிலை அவர்களுக்கு மத்தியில் ஓர் ஆச்சரியப் புதிரைப் போட்டது! இருவரும் ஒருவர் மனதை ஒருவர் பரீட்சித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்களோ என்று தோன்றியது. கலைப் பிரியமும், அறிவு விலாசமும் நிறைந்த அந்த இருவருக்குமிடையே கொஞ்ச நாட்களாக உணர்ச்சிப் போராட்டம் ஆரப்பமாகி விட்டது. நாகரிகத்தில்தோய்ந்த அவர்களது புத்திசாலித்தனம் 'தற்பாதுகாப்பு'த் தந்திரத்தை அனுஷ்டிக்கவே முதலில் வழிகாட்டியது! இத் 'தந்திரம்' உணர்ச்சிப்போரில் ஒரு சாதுரிய முறையா? ஆனால்,மலர பக்குவம் அடைந்து வெடிக்கப் பார்க்கும் புஷ்பத்தைத் தடுக்கமுடியுமா?

உணர்ச்சி மனத்தின் 'சுரக்கட்டை'களை அடித்துக்கொண்டே வருகிறது! ஆம்! ஒரு ஸ்தாயி! மற்றொரு ஸ்தாயி! ஸ்தாயிக்குமேல் ஸ்தாயி! பஞ்சம ஸ்தாயியை எட்டிப் பிடித்துவிட்டது அந்த இரவு!

அந்த இரவு—பௌர்ணமி இரவு—முழு நிலவு பூத்து வெள்ளி ஒளியை அள்ளி அள்ளி உதிர்க்கும் நாள் அல்லவா? அதை ரமணனால் எப்படி மறக்க முடியும்?

மேல்மாடி. திறச்தவெளி. பூரண சந்திரிகையின் கொள்ளையிடும் ஒளி. உருவத்தைக் காட்டாது தன் ஸ்பரிசத்தால் உணர்ச்சியைக் கிளறிச் செல்லும் காற்று.

கீழே ரத்தினக் கம்பளம். ஒருபக்கத்தில் சுகந்தப்புகைச் சுருள்களை காற்றில் அலைமோதவிடும் ஊதுவத்திகள். பக்கத்தில் ஒரு வெள்ளித் தட்டு. அதில் ஜாதிப் புஷ்பமும், ரோஜாவும், 'கட்டிமுத்தமிடு' வது போன்ற புஷ்பச்சரங்கள். வெண்தாமரையைப்போல செய்யப்பட்டிருந்த ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் நறுமணம் கமழும் சந்தனக் குழம்பு,

எதிரே கந்தர்வப்பெண் மாதிரி லலிதா வீணையை மீட்டிக்கொண்டு பாடுகிருள்; பாவமும், நயமும் பொங்க பாடுகிருள். இடையே வாய்ப் பாட்டை நிறுத்தி, அப்பாட்டின் 'மூர்ச்சை'யை வீணையின் நாதத்தில் கிளறி நயமாகச் சப்தஜாலம் செய்கிருள். இனிய இசை மாரிப் பொழி கிறது.

ஏகாந்தமான அந்த இனிய இடத்தில் வேறு ஒருவருமில்லை, ரமணனைத் தவிர.

லலிதா கச்சேரி 'பந்தா'வைப் பின்பற்ருமல் இன்பத்தேன் வந்து பாயும் தமிழ்க் கீதங்களை பாடிக் கொண்டே வருகிருள்.

ரமணன் மௌனியாளுன். அவனது பஞ்சேந்திரியங்கள் இன்ப அணுக்களின் தூண்டுதலில் அமிர்தமயமான மயக்கம் கொண்டன: சப்த இன்பத்தில் சயனித்தன. தடஸ்தம் என்று சொல்லுகிருர்களே, அந்த நிலைமைக்கு அவன் வந்து விட்டான்! ஆம்! ஞானிகள் தூங்காமல் தூங்கி சுகம் பெறுகிருர்கள்! கலைஞனே பார்க்காமல் பார்த்து, கேட்காமல் கேட்டு.......... சுகம் பெறுகிருன்!

கொஞ்ச நேரம் கழித்து லலிதா பாடுவதை நிறுத்தி வீணையைப் பக்கத்தில் தள்ளி வைத்தாள். மலர்ந்தும் மலராததுபோல திகழ்ந்தன அவளது நேத்திர இதழ்கள்.

நிஷ்டை கலந்தும் கலையாதவனைப்போல "சிரமமாகயிருக்கிறதா? நான் வேண்டுமானல் வீணையை மீட்டுகிறேன்" என்ருன் ரமணன் மிருதுவாகவும், மெதுவாகவும்.

"உங்களுக்கு வீணை வாசிக்கத் தெரியுமா?"—அவள் விழிகள் ஆச்சரியப் பிரபையை வீசின.

"வாசிக்கத்தெரியாது! மீட்டத் தெரியும்."

"என்ன! மீட்டத் தெரியும்! ஆனல், வாசிக்கத் தெரியாதாம்!

என்ன ஆச்சரியம்! இதை யார் நம்புவார்கள்?"

"ஆமாம். வாசிக்கத் தெரியும்; மீட்டத் தெரியாது!"—ரமணன் சிரித்தான்.

"சாமர்த்தியமா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே. எதைக் குறிப்பிடுகிறீர்கள்?"

"தெரியவில்லையா? கையிலெடுக்கமுடியாத வீணை! மீட்டத் தெரிந்தவர்கள் மீட்டலாம்! வாசிக்கத் தெரிந்தவர்கள் வாசிக்கலாம்! இன்னும் புரியவில்லையா? ஹிருதய வீணையைத்தான் சொல்லு........" —சிரிக்கிறான்.

"ஓ! அது மிகவும் நுட்பமானதாயிற்றே! கொஞ்சம் கலைந்தாலும் அபசுரம் பேசுமே!"

"வாஸ்தவம். ஆனல்; சுருதி சேர்ந்துவிட்டால், அதுவும் சேர்ந்த சுருதியில் சுத்தமாக லயித்துவிட்டால்.........?"

"கேட்பானேன்? நித்ய சுகம்தான். கற்பனைப்பேச்சு இருக்கட்டும், உண்மையில் உங்களுக்கு வீணை வாசிக்கத் தெரியுமா?"

"கொஞ்சம் தெரியும். பாலியத்தில் கற்றுக்கொண்டேன். ஆனல், பிறகு அதை அப்பியாசிக்கவில்லை. ஏன் தெரியுமா? வீணை, வாத்திய ஜாதியில் ராணிமாதிரி. மிருதுவான விரல்களின் ஸ்பரிசத்தால்தான் வீணையின் தந்திகளில் 'கான விளையாட்டை'ச் செய்ய முடியும் என்ற முடிவுக்கு நான் வந்துவிட்டேன்."

"அப்படி ஒன்றுமில்லை. அப்பியாசித்தால் யாரும் வாசிக்கலாம்."

"அப்படியானல் நான் வீணைவாசிக்கிறேன்.........நீ......"

"அபிநயம் பிடிக்கிறேன்."

"பருத்தி புடவையாகக் காய்த்த மாதிரி! நானே சொல்ல வேண்டுமென்றுநினைத்தேன். மேலும் உன் பரதநாட்டியத்தைப்பற்றி பத்திரிகையில் வெளிவந்த விமர்சனங்களைப் படித்திருக்கிறேன், அதிலிருந்து உன் நடனத்தை......"

"போதுமே முகஸ்துதி. சரி நான் அபிநயம் பிடிக்கிறேன்......... தாங்கள்........."

கேலிச் சிரிப்பு. குறும்புப் பார்வை.

"நிஜமாக நடப்பதாகவே பாவித்துக் கொண்டு ரசிக்கிறேன்!"

"ரசனையில் என்ன இருக்கிறது?"

"அனுபவத்திற்கு 'முதல்சுரம்' ரசனைதானே?"

ரமணன் சிரிக்கிறான்.

"ரசனை முற்றினால் அனுபவமா?"

"இல்லை, நான் ரசானுபவத்தைத்தான் குறிப்பிட்டேன்."
"நானும் அதைத்தான் சொல்லுகிறேன். ரசாபங்கத்தைக் குறிப்பிடவில்லை!"

மறுபடியும் நகைப்புக் கச்சேரி.

ரமணன் வீணையை மீட்ட ஆரம்பித்தான்.

லலிதா அபிநயத்திற்கேற்ற தமிழ்ப் பதங்களைப் பாடிக்கொண்டே 'கைபிடிக்க' ஆரம்பித்தாள். ஆகா! எத்தகைய முகபாவம்! எத்தகைய நயம்!

ரமணன் வீணையை மீட்டிக் கொண்டே லலிதாவின் அழகு மின்

னும் அபிநயத்தில் மனத்தை நிறுத்தினுன்; கலா நிஷ்டையிலமர ஆரம்பித்து விட்டான். நேரம் ஆக ஆக அவன் உணர்ச்சி இன்பரசத்தில் காய்ச்சி எடுக்கப்பட்ட லாகிரியால் மயக்கம் கொண்டது. பலன் கை மேலே! வீணையை மீட்டுவதாக எண்ணம். ஆனுல் நாதத்தைக் காணேம். அவன் விரல்கள் மீட்டுவதை மறந்து தந்தியின் மீது 'தூங்க' ஆரம்பித்துவிட்டன! கான சுகத்திலா? ஆத்ம சுகத்திலா? லலிதாவும் இதை முதலில் கவனிக்க வில்லை. ஆனுல் பின்பு கவனித்ததும் பவுனை வாரிக்கொட்டுவது போல் கல கல வென்றுசிரித்துவிட்டாள். "நல்லா இருக்கே அனுபவிக்கிற விதம்!" என்ருள். அடுத்த நொடியில் ஏன் இப்படிச் சொன்னேம் என்று தோன்றியது.

தூக்கிவாரிப் போட்டமாதிரி ரமணன் லலிதாவைப் பார்த்தான். அதேநொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு புன்னகை தொடரப் புகன்ருன்: "நான் எதற்காக மீட்டுவதை நிறுத்தினேன் தெரியுமா? வாசிப்பதற்காகத்தான்!"

"சரிதான். சாமர்த்தியம் புருஷலட்சணம் போலும்!"

"சரிதான்! வேடிக்கை பார்ப்பது ஸ்திரி லட்சணம் போலும்!"

உடனே இருவரும் மாறிமாறி சிரித்தனர்.

ரமணன் வீணையைப் பக்கத்தில் தூக்கி வைத்தான். லலிதாமேலும் ஊதுவத்திகளைக் கொளுத்திவைத்தாள். அப்பொழுது அவளது கரங்களிலிருந்த மெல்லிதான தங்க வளையல்கள் கிலுகிலுத்தன.

"அடடா! லலிதா, இப்புஷ்பங்களை ஏன் இப்படி வாடவிட்டு விட்டாய்?" என்று வெள்ளித் தட்டிலிருந்த, புஷ்பச்சரத்தை எடுக்கப் போனுன் ரமணன்.

"நீங்கள் வீணையை மீட்ட மறந்த மாதிரி நான் இப் புஷ்பத்தையே மறந்து விட்டேன்."

ஏககாலத்தில் லலிதாவும் ரமணனும் அப்புஷ்பச் சரத்தை எடுக்க கைகளைக் கொண்டு போனார்கள். எதிர்பாராத முறையில் கரஸ்பரிசம். உடனே ஒரு சிலிர்ப்பு. அதிலோர் இன்பம்.

ரமணன் அப்பூச்சரத்தை எடுத்து அழகாக மடக்கினான். லலிதா புன்சிரிப்பில் பூத்த மௌனத்துடன் திரும்பினாள். குறிப்பறிந்தவன் போல் ரமணன் சட்டென்று அப்புஷ்பத்தை அவள் கூந்தலில்சூட்டி விட்டு "லலிதா, பூவோடு சேர்ந்து நாரும் மணம்பெறும் என்று சொல்லுவார்கள். ஆனால் அதில் ஒன்று வாசமுள்ளது; மற்றொன்று வாசமில்லாதது. வாசமுள்ள பூவோ பெண்களோடு சேர்ந்து மேலும் 'அழகு மணம்' பெறுகிறதல்லவா?" என்றான்.

"அடேயப்பா! உங்கள் கற்பனைப் பேச்சுக்கு அளவேயில்லை!"

"இன்னும் கற்பனை உலகம்தானா?"—குரலில் ஒரு கெஞ்சல் இரா கம். ரமணனின் நெஞ்சம் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது, அதிவேகமாய். கண்களில் ஓர் இன்பச் சுழல். மேனி முழுவதும் ஒரு விறுவிறுப்பு.

வெகு நேரம்வரையில் அவர்கள் இவ்விதம் சாமர்த்தியமாகப் பேசிக்கொண்டேயிருந்து விட்டார்கள். இருவரின் பேச்சுக்களும் அவர்களின் உள்ளத்தை மேலும் மேலும் ஒட்ட வைத்துக் கொண்டே வந்தன.

லலிதாவுக்கு ரமணனை இனியும் பரீட்சிப்பது மகா பாபம் என்று தோன்றியது. மேலும் அவளும் அதேபடியில் அடி எடுத்து வைத்து விட்டாள். உணர்ச்சியிலிருந்து வெடிக்கும் பெருமூச்சு அவளது மார்பகத்தை அசைத்தது. "லலிதா, என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? அவனை நீ ஒரு தேவனாகக் கருதுவது நிஜமானால்—அவனை இருதயப் பூர்வமாகக் காதலிப்பது உண்மையானால் உன்னை விழுங்கப் பார்க்கும் உணர்ச்சிக்கு இடம் கொடுத்துவிடாதே. அவன் கலைஞன், துன்பத்திலும் இன்பம் காண்கிறவன். அதற்காக நீ அவனை நரகத்தில் தள்ளாதே." இப்படி அந்தராத்மாவிடமிருந்து ஒரு குரலோசை கிளம்பியதை லலிதா கேட்டாள். தேகம்குலுங்கியது. திகைப் பொளி கண்களில் தள்ளாடியது. அவளின் பசிர்முகத்தில் ஆசையின் தாபம். அந்தர்

முகத்தில் அன்பின் எச்சரிக்கை! சொல்லமுடியாத ஓர் இன்பவேதனையை அனுபவித்தாள். அந்த இன்பவேதனையின் கதாநாயகனுக எதிரேயிருக்கும் ரமணனிடம் அவள் திடீரென்று ஒரு தெய்வக் கனலை தரிசித்தாள். அவளது வாழ்க்கையில் அது ஒரு புது அனுபவம். உள்ளே இருந்து அவளை எச்சரிக்கும் அந்த அன்புக்கு அந்தத் தெய்வீக தரிசனம் தெரிகிறது. ஆனால், இந்திரியங்களோ சுகத்திற்காகப் புரட்சி செய்யும் போது...?...ரத்தம், சதை, நரம்புகளின் 'படைபல'த்துடன் சண்டை செய்யும்போது.......?

சட்டென்று ரமணன் எழுந்தான். அவளும் எழுந்தாள்.

ரமணன் அவள்புஜங்களை நளினமாகப் பற்றி, கண்களைக் கவனித்துக்கொண்டே "லலிதா, ஏன் திடீரென்று உன்முகம் இப்படி மாறி விட்டது? ஈதென்ன? இன்பமா? வேதனையா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே" என்றான்—குரல் கம்மியது.

"இரண்டுமில்லை. தாங்கள் இரண்டிற்கும் அப்பாற்பட்டவர் என்று எண்ணினேன்.........ஆனல்?..."

அவள் முகத்தை நிமிர்த்தி "லலிதா, அப்படியானல் நான் மரக்கட்டையா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே" என்றான் தடதடப்புடன்.

"இல்லை இல்லை"-அவள் குரல் நடுங்கியது. வாக்கு குழறியது.

"லலிதா, ஈதென்ன சோதனையா?"

"ஆமாம். தெய்வம் சோதித்து விட்டது!"

"அப்படியென்றால்.........?"

"உண்மையைச்சொல்கிறேன். முகஸ்துதிக்காகச்சொல்லுவதாக எண்ணாதீர்கள். நான் என் நரக வாழ்வில் எத்தனையோமனித-மிருகங்களைச் சந்தித்திருக்கிறேன். ஆனல் இப்பொழுது தான் ஒரு தேவனை—தேவமனிதனை முதன் முதலாகத் தரிசனம் செய்கிறேன்...."

அவள் கண்களில் ஜலம் உருண்டுதிரண்டு முத்துக்களாகமாறியது. கண்ணீரைத் துடைத்துவிட்டு "உம். அதனால்...?" என்று கேட்டான் ரமணன்.

"நான் உச்சிஷ்டம். தங்கள் ஸ்பரிசத்திற்கேலாயக்கில்லாதவள்."

"பைத்தியமே, தேவதாசி என்பதற்காக இப்படிச் சொல்லுகிறாயா? நீ உச்சிஷ்டம் அல்ல; தேவநிர்மால்யம்."

ரமணன் அவளை அப்படியே ஆலிங்கனம் செய்து கொள்ளப் போனான். ஆசை அவனை அப்படியே நிறுத்திவிட்டது. அன்போ நிர்ஜீவனாய் இன்பஜுரத்தில் ஒடுங்கியது.

சட்டென்று தன்னை அவன் கரங்களிலிருந்துவிடுவித்துக்கொண்டு "வேண்டாம். நான் விபசாரி. என் வாழ்வுநரகவாழ்வு. அதில் உங்களைப் போன்றவர்களுக்கு இடமே இல்லை" என்றாள்.

லலிதாவின் செய்கை ரமணனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியது. அவளுடைய மனோ நிலை விசித்திரமாகத் தோன்றியது. கேவலம் ஒரு தாசி; இன்பத்தை விலை பொருளாக்கிக் கொண்டிருப்பவள், இப்படி பேசுவதின் அர்த்தத்தை சட்டென்று கிரகிக்க முடியாமல் தவித்தான். வாழ்க்கையில் இது ஒரு புது அனுபவம் என்று நினைத்தான். சட்டென்று அவன் புத்திமாறியது. "ஏமாற்றுவதற்காகவா இந்தப் பேச்சுத் தந்திரம், சூழ்ச்சி? இல்லை; ஒருகாலுமிருக்காது. அவள் இருதயம் எனக்குத் தெரிகிறது" என்ற ஓர் எண்ணம். கடைசியில் சற்று விலகி நின்று "லலிதா, நீ என்னை தேவனாக்கப் பிரியப்படுகிறாய், நானோ மனிதனாக இருக்கப் பிரியப்படுகிறேன். ஒன்று அசாத்தியம். மற்றொன்று சாத்தியம்" என்று சொல்லிச் சிரித்தான்.

லலிதா பதில் பேசவில்லை.

குளிர்ந்த காற்று வீசியது. கிழக்கே வெளுத்துவிட்டது. காகங்கள் கத்துகின்றன.

"என்ன ஆச்சரியம்! விடிந்துவிட்டதே. பொழுதுபோனதே தெரியவில்லை" என்றுள் லலிதா.

"ஆமாம் அதோபார். கிண்ணியிலுள்ள சந்தனம்கூடகாய்ந்துவிட்டது, உன் இருதயம் மாதிரி!"—ரமணன் நகைத்தான்.

"காய்ந்தாலும் அதிலுள்ளமணம் போகவில்லை என்பது ஞாபகமிருக்கட்டும்."

பொழுது நன்ருக விடிந்துவிட்டது. சூரிய ஒளி பரவியது.

அந்த வீட்டின் கீழ்ப்புறமிருந்து "லலிதா, விடிந்து எவ்வளவு நேரமாயிற்று? இன்னும் தூக்கமா? சிக்கிரம் எழுந்து வா" என்று லலிதாவின் தாய் குரல் கொடுத்தாள்.

*　　　*　　　*

மறுநாள். ரமணன் தன் வீட்டு அறையிலிருக்கிருன். ஒரு வேலைக்காரி கடிதமொன்றை அவன்கையில் கொடுத்துவிட்டுப்போய்விட்டாள். ஆச்சரியமுடன் அதைப்பிரித்துப் படித்தான்: "அன்புமிக்க ரமணன் அவர்களுக்கு, நமஸ்காரம். என்னைப்பற்றி நீங்கள் பலவிதமாக நினைத்திருக்கலாம். நேற்று இரவு நான் நடந்துகொண்டவிதம் ஒரு பெரிய ஆச்சரியமாகப்படலாம். காரணத்தை அறிந்தால் ஆச்சரியத்திற்கு இடமில்லை. ஆனல் அக்காரணத்தைச் சொல்ல எனக்குத் துணிவுயில்லை. வாய் கூசுகிறது. தேவனைப் பிடித்து நரகத்தில்தள்ள என் மனம் இடம் கொடுக்கவில்லையென்பதையே மறுபடியும் கூறுகிறேன். தாங்கள் பெரிய மனதுடன் அன்று எனக்கும் தெரியாமல் படுக்கையின் தலையணைக்குக்கீழ் 100ரூபாய் வைத்துப்போனதற்காக மிகவும் வந்தனம். தெய்வத்தினிடம் நான்பணத்தைவிரும்பவில்லை; விரும்புவது சாகாத அன்புதான். இத்துடன் அப்பணத்தை வைத்திருக்கிறேன். பணம் திருப்பப்பட்டிருப்பதை மரியாதைக் குறைவாக எண்ணுமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னெரு விஷயம். இந்தக் கலைஞர்களுக்கு ஒழுக்கத்தூய்மையோ மனத்தூய்மையோ கிடையாதென்று உலகம் சொல்லுகிறதல்லவா? அது உண்மையா என்பது

வேறு விஷயம். ஆனால் அந்தமாதிரி அபவாதம் தங்களுக்கு வரக்கூடாதென்பதே என் ஆசை. உங்களை என்றும் மறவாத, லலிதா."

லலிதாவின் ஒவ்வொரு செய்கையும் புதிர் போட்டமாதிரி ரமணனுக்குத் தெரிந்தது. அன்றிரவு அவள் நடந்துகொண்டவிதம் அவனது மூளையை அதிரவைத்தது. கலைஞனுதலால் அதைப் புன்னகையோடு சமாளித்துக்கொண்டுவிட்டான்.

லலிதா எழுதிய கடிதத்திற்கு பதில் கடிதமொன்றை ரமணன் எழுதிப்போட்டான்; நூறு ரூபாய் பணத்தையும் அவளுக்கே திருப்பி அனுப்பிவிட்டான். அடுத்தநாளே அவன் எதிர்பாராதவிதமாக சென்னைக்குப் புறப்படும்படி நேரிட்டு விட்டது. காரணம்: அவன் தகப்பனுர் உடனே புறப்பட்டுவரும்படி தந்தியடித்திருந்தார். சென்னைக்குப் புறப்படுவதற்கு முன்பு லலிதாவைப் பார்க்க எண்ணிய அவாவுக்கு அவன் அடிபணியவில்லை. தன் பிரயாணத்தைப்பற்றிக் குறிப்பிட்டு லலிதாவுக்கு மற்ருெரு கடிதத்தை எழுதிப்போட்டுவிட்டு புறப்பட்டு விட்டான்.

* * *

ஒரு மாதம் நடையைக் கட்டியிருக்கும்.

அதோ, திருவல்லிக்கேணி கடற்கரையில் அந்த இரு நண்பர்கள் ஒரு பக்கம் தனியாக உட்கார்ந்து சம்பாஷிக்கிருர்கள். ஒருவன் ரமணன். மற்றவன் தன் சொந்த ஜோலியாக சென்னைக்கு விஜயம் செய்திருக்கும் ஞானம்.

"ரமணு, இனி அவள் பேச்சே என் காதில் போடாதே. எனக்குச் 'சீ!' என்ருய்விட்டது. என்ன இருந்தாலும் விபசாரிதானே! கொடிய தொத்து வியாதியாம் அவளுக்கு. இப்பொழுது படுத்த படுக்கையிலிருக்கிருள். அவளுக்குச் சிச்கிசை செய்யும்என் நண்பராகிய டாக்டரே எல்லாவற்றையும் என்னிடம் சொன்னுர். போனது போகட்டும். இனி ஊருக்குப் போனுல் அவள் வீட்டில் அடி வைக்காதே.

உன் உடம்பையும் டாக்டரிடம் பரீட்சைசெய்து பார்ப்பது நலம். அது வேறு என் மனசில்......"

சட்டென்று சிரித்தவனாய் "ஞானம், என்கதையை நான் உன்னிடம் சொல்லவில்லையே! அதைக்கேட்டால் இப்படியும் நடக்குமா? என்று மூக்கில் விரல்வைப்பாய். சொன்னால் உலகமும் நம்பாதுதான். நீ பயப்படுகிறபடி நான் டாக்டரிடம் உடம்பைப் பார்த்துக் கொள்ளவேண்டியதில்லை. ஏனெனில் அவளும் நானும் யாதொரு பாவமும் அறியோம்" என்றான் ரமணன். பின்பு ஆதியோடு அந்தமாய் அன்றொரு நாள் பௌர்ணமியின்போது லலிதாவின் கிரகத்தில் நடந்த சம்பவத்தை விவரித்தான்.

இதைக்கேட்டு ஞானம் விழுந்து விழுந்து சிரித்தான். "யாரிடம் காதுகுத்துகிறாய்?" என்று கிண்டல்செய்தான். ரமணனின் வார்த்தையை உடனே அவன் நம்பவில்லை. லலிதாவின் வாக்கு சாதுரியத்திலும், நடிப்பிலும் ரமணன் ஏமாந்துவிட்டான் என்றே எண்ணினான். அவனுடைய அபிப்பிராயத்தை சட்டென்று மாற்ற ரமணனால் முடியவில்லை. லலிதா கொடிய தொத்து நோயாளி என்ற செய்தியும் அவனைத் திகைக்கவைக்கவில்லை. அவளின் அழகைக் கவ்வும் திருஷ்டியுள்ள கண்ணுக்கு நரகத்திலும் ஒரு ஸ்வர்க்கமே தோன்றியது. கடைசியில் ஞானத்திடம் அவன்சொன்னான்: "கொடிய பாம்பிடம் மாணிக்கமிருப்பதாகச் சொல்லுகிறதில்லையா? லலிதா விபசாரியாகயிருக்கலாம். வாழ்க்கை மகா மோசமாகயிருக்கலாம். ஆனால், அவளிடமும் ஹிருதயமிருக்கிறது; அன்பு இருக்கிறது என்றுதான் எனக்குப் படுகிறது."

"ரொம்ப சரி. இனி நீ கதை எழுதப் பழகிக்கொள்." என்று ஞானம் கேலிபண்ணினான்.

* * *

"அடிக்கடி கடிதம் எழுதவேண்டும் என்ற அவாவை நானே நசுக்கிக்கொண்டேன். இப்பொழுது வாழ்கையின் கடைசி கட்டத்துக்கு வந்துவிட்டேன். நரகவாதனையிலிருக்கும் நான் கடைசிமுறையாக ஒரு ஸ்வர்க்க புருஷரை தரிசிக்க விரும்புகிறேன். உடனே புறப்பட்டு வர பிரார்த்திக்கும், லலிதா."

கடிதத்தை படித்ததும் ரமணனின் தலை 'கிர்ர்' என்று சுற்றியது. வீட்டில் ஏதோ சாக்கைக் கூறிவிட்டு சொந்த ஊருக்குப் புறப்பட்டு விட்டான்.

லலிதாவின் இல்லம். உள்ளே நுழைந்தான் ரமணன். அவன் தன் கண்களையே நம்பவில்லை.

லலிதா படுக்கையில் துரும்பாகக் கிடக்கிருள்.

அந்த லலிதா எங்கே? வீணை எங்கே? பாவபூர்வமான சங்கீதம் எங்கே? லளிதமான பேச்சு எங்கே? வெண்கலச் சிரிப்பெங்கே? இப்படிப்பல 'எங்கே?' என்ற கேள்விக் குறிகள் உயிர்பெற்றவைகள் போல ரமணனைச் சுற்றிச் சுற்றி வந்து முற்றுகையிட்டன!

லலிதாவின் சமீபம் சென்ருன். அவள் மெதுவாக ங்கோ" என்ருள். பேசவும் சக்தியில்லை. அந்தக் கண்களில் மாத்திரம் அலாதியான ஒரு திவ்ய ஒளி நடித்துக்கொண்டிருக்கிறது. ரமணனைப் பார்த்ததும் அவளுக்கு ஆத்ம திருப்தி.

சமிக்ஞை செய்தாள். ரமணன் சமீபம் வந்தான். தன் தலையணைக் குக்கீழ் இருந்த ஒரு கடிதத்தை எடுத்து ரமணன் கையில் கொடுத்தாள். "அவசரமில்லை, மெதுவாகப் படிக்கலாம்" என்ருள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. ரமணனின் கரங்களைப்பற்றி தன் கண்களில் ஒத்திக்கொண்டாள்; பின்பு கன்னத்தில் பதியவைத்துக்கொண்டாள். நயனங்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. ஒரு முறை ரமணனைப் பார்த்து கண்மூடி விட்டாள், இனி திறப்பதற்கே முடியாத நிலையில்!

ரமணனின் உள்ளம் உருகிவிட்டது. சோகப் புயலால் பாதிக்கப் பட்ட அவன் நேத்திரங்களில் கண்ணீர் மாரி. சிறு குழந்தைபோல அழுதுவிட்டான்.

* * *

"லலிதா மோசக்காரி. பலரை ஏமாற்றியவள்; வஞ்சகி. பணம் பறிப்பதில் குறி. விபசாரி. கேடுகெட்டவள் என்றெல்லாம் நீ சொல்லலாம். உலகமும் அதைத்தான் சொல்லும். ஆனல் ரமணன் அபிப்பிராயத்தில் லலிதா ஒரு தேவ-ஸ்திரி. அவள் இருதயம் பரிசுத்தமானது. இதோ, அவள் கடைசியாகக் கொடுத்த கடிதத்தைப் படித்துப்பார். இதில் நான் திருப்பி அனுப்பிய 100 ரூபாயையும் வைத்திருக்கிருள்" என்ருன் ரமணன்.

ஞானம் ஆச்சரியமுடன் அக்கடிதத்தைப் படித்தான்: "அன்புமிக்க ரமணன் அவர்களுக்கு அடியாள் நமஸ்காரம். அன்று நான் நடந்துகொண்ட வகை உங்களுக்கு ஒரு புதிராகத் தோன்றலாம். புதிர் ஒன்றுமில்லை, காரணத்தை முதலில் சொல்ல மனம் துணியவில்லை. முடிவில் சொல்லவே தீர்மானித்துவிட்டேன். அன்று ஏற்பட்ட ஓர் அதிர்ச்சியை நீங்கள் சமாளித்துக்கொண்டதைப் பார்க்கும்போது தாங்கள் ஒரு தேவ புருஷர் என்று நிரூபித்து விட்டீர்கள்! அன்று நாம் சிறிது ஏமாந்துபோயிருப்போமானல், உங்கள் 'கலா நிஷ்டை' கலைந்திருக்கும்; என் அன்புக்கும் ஒரு பெரிய பங்கம் ஏற்பட்டிருக்கும். காதலைப் பற்றி நான் பரிகசிப்பதுண்டு. ஆனல் உங்களிடம் எனக்கு முதன்முறையாக உண்டான உணர்ச்சிகாதலைப்பற்றி தெய்வீகப் பாஷையில் பேசியதை நான் கேட்டேன். ரமணனை நீ உள்ளன்புடன் நேசிக்கிருய். நீயோ விபசார வாழ்வின்விளைவாய் கொடிய தொத்து வியாதியால் பாதிக்கப்பட்டு விட்டாய் என்பது நன்கு தெரிகிறது. ரமணனின் தேக நலம் உனது உயிர்ப் பிரச்னை. ஆகவே, அற்ப சுகத்திற்காக அத்தேவனை நரகத்தில் தள்ளாதே; தள்ளினுல் உன்னைப்போல அன்பைக் கொன்ற நன்றிகெட்ட ஜன்மம் உலகத்தில் வேறுகிடையாது' என்று எச்சரித்தது. நான் அதற்குத் தலைவணங்கினேன். ஆசையையும், தாபத்தையும் சமாளித்துக்கொள்ள கடவுள் தைரியம் கொடுத்தார்...."

ஞானம் கடிதத்தின் மற்ற பகுதிகளை மனத்திற்குள்ளாகவேபடித்து முடித்தான். லலிதாவைப்பற்றி அவனுடைய முந்திய அபிப்பிராயம் மாருமல் இல்லை. அதைக் காட்டிக்கொள்ளாமல் "சரிதான், எல்லாம் கதைதான் அப்பா! லலிதாவிடம் நீ ஏமாந்ததை நினைக்க, நினைக்க

எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. இக்கலைஞர்களின் வாழ்க்கையிலே ஏமாற்றங்கள் அதிகம். அவர்கள் எப்படித்தான் சகித்துக்கொள்ளுகிறார்களோ?" என்றான் ஞானம்.

'ஏமாற்றங்கள் அல்ல; அனுபவங்கள். கலைஞன் அவைகளைக் கலைகளாக்கிவிடுகிறான். வாழ்க்கையில் ஏற்படும் அதிர்ச்சிகளை கலைஞனால் தான் தாங்கிக்கொள்ள முடியும். கலா சிருஷ்டியைக் கொண்டு இந்திரிய-சுக உணர்ச்சியையும் உயர்த்தி பரிசுத்தப்படுத்திவிடுகிறான். எத்தனையோ இச்சைகளையும், உணர்ச்சிகளையும், ஆசைகளையும் சமூகமும், மதமும் ஒழுக்கத்தின் பெயரில் தடுத்துவைத்திருக்கின்றன. அத்தகைய இச்சைகளும், உணர்ச்சிகளும் ஒன்று நசுக்கப்படவேண்டும்; அல்லது எந்த வகையிலாவது வெளிப்பட்டாகவேண்டும். ஆழ்ந்த 'மின்சார-வேக' சக்தியுடையதாக இருக்கும்இத்தகைய இச்சைகளை நசுக்கப்பார்த்தால், அவை மூளையையே கட்டாயம் தாக்கிவிடக்கூடும். இந்த விபரீதத்தைத் தடுக்க கலை தான் உதவி செய்கிறது. கலாஉணர்ச்சியைக் கொண்டு, கலாசிருஷ்டியைக்கொண்டு அத்தகைய இச்சைகளையும் வடிவான வகையில் பயன்படுத்திக்கொண்டு விடலாம். இந்த முறையில் பார்த்தால் கலைஞனுக்கு காமத்தையும் வெல்ல கலை உதவுகிறது. இன்னும் யோசித்துப் பார்த்தாயானால் கலை, வாழ்க்கையையே பரிசுத்தப்படுத்திவிடுகிறது......"

"அடடா! கலையைப்பற்றி பிரசங்கம் செய்ய உனக்குத் தெரியுமென்று நான் சொல்லுகிறேன். புறப்படு. சீக்கிரம். வயிற்றைக் கிள்ளுகிறது!, பசி" என்றான் ஞானம்.

# மனோ - லீலை

## ('பிள்ளையார்-கீதம்')

ஆமாம், இந்தக் கதைக்கு ஒரு "பிள்ளையார் கீதத்தை" ச்
சொல்லவேண்டி'தான் இருக்கிறது!
இது ஒரு சிறு கதையா? அல்ல, கட்டுரையா? அல்ல, அப்படி
யானால் ஒரு சிறு நாடகமா? அல்ல, அல்ல!

**ஆனால்.....**

இது ஒரு நாடகம் தான்; எல்லோரும் நினைக்கிறபடி நடிகர்கள்
நடிக்கும் "நடிப்பு-நாடக" மல்ல; உணர்ச்சிகள் 'நடிக்கு'ம்
**"உணர்ச்சி—நாடகம்"** தான்! இதன் சூத்திரதாரி-

**மனம்**

இந்த மனத்தின் 'லீலா-(சோக, அசோக) நாடகங்கள் கணக்கில்
அடங்காதவை. அவைகளில் இதுவும் ஒரு கோணமா?
கோணலா? அல்லது கோலமா?

**சரி;**

இனி இச்'சிறுகதை,யின் 'மனசா'க மறைந்திருக்கும்
"உணர்ச்சி-லீலா" நாடகத்தைப் படிக்க ஆரம்பிக்கலாம்.

**இப்படி ஆரம்பித்தது.......**

அதோ, கண்வரின் ஆச்சிரமம். அருகே அழகான பூஞ்சோலை. ஆமாம், அவளோ புஷ்பக் கொடிபோல. ஆபரணங்களும் புஷ்பங்கள்தான். அந்தப் புல்மெத்தையிலே தோழிகள் சுற்றியுமிருக்க தாமரையிலை யிலே தன் காதலை இருதய—எழுத்துக்களின் மூலம் கொட்டுகிறுள் அச் சகுந்தலை.

இக்காட்சியைப் பார்க்கின்றன அந்த எழிலுள்ள கண்கள். "சகுந் தலை, உன்னை நான் பின்பற்றற்றுமா?" என்ற கேள்வியுடன் அந்நேத் திரங்கள் மேலே நகர்கின்றன! என்ன ஒளி நடுக்கம்! பெருமூச்சின் எழுச்சி நகர்ந்துகொண்டே செல்லும் அக்கண்களில் ஓர் அதிர்ச்சியை எழுப்புகிறது!

பிரேமையின் உச்சத்தில் மனம் சிருஷ்டிக்கும் சிரேஷ்டமான—ஆனால், சேஷ்டையான லீலா நாடகக் காட்சியை ஞாபகப்படுத்துவது போல மலர்போன்ற மிருதுவான கண்களைப் பொத்துகிறான் பின்புறமாக இருந்து ஸ்ரீ கிருஷ்ணன். பாறைமீது பிரேமைப்பித்துடன் உட்கார்ந்திருக்கும் ராதையோ தன் இருகரங்களையும் உயரத்தூக்கி தன் விழிகளை மூடிய கைகளைப் பற்றப்போகிறாள்!

"மிகவும் பொருத்தம்; உலகம் ஒப்புமா?—சீ! வீண் எண்ணம்!" இந்த மனோபாவம் வேதனைப் பெருமூச்சை வெடிக்கவைத்தது. துன்பத்தின் துள்ளுதலுடன் அதேகண்கள் மேலும் நகர்கின்றன!

சாக்ஷாத் ஸ்ரீ ராமபிரானின் கால் தூசி படுகிறது! என்ன ஆச்சரியம்! இந்திரனால் கற்பழிக்கப்பட்டு, கௌதமரால் கல்லாக்கப்பட்ட அகல்யை மீண்டும் பெண்ணுருவம் பெற்று அஞ்சலி செய்கிறாள்!

"சாபவிமோசனமா?" - இக்கேள்வியுடன் சட்டென்று அதேநயனங்கள் மற்றொரு பக்கமாக ஊர்ந்தன. சஞ்சலத்தின் சாயல் தொடர்கிறது. லோகமாதா—மகாபதிவிரதையாகிய சீதாதேவியே அக்னி பிரவேசமாகிறாள்! அதன் பிறகுதான் ஏகபத்னி விரதராகிய ஸ்ரீ ராமர் அவளை அங்கீகரிக்கிறார்!

"லோக அபவாதம் அவ்வளவு பொல்லாததா?" - இப்படிக் கேட்டு விட்டு, அதேவிழிகள் நிறைவேறாத ஆசையின் வேகமான 'அடி'யைத்தாங்க முடியாது தன் இதழ்கள் தயவை நாடின. கண்ணைக் காக்கும் இரப்பைகள் வலியவந்து அணைந்தன. அப்பொழுதும், சற்று முன்பு சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களில் பார்த்த அதே காட்சிகள் 'பேசும் படங்'ளாக ஓடின! மீண்டும் மீண்டும் பெருமூச்சின் அலைகள். உள்ளத்திலிருந்து வெளியேவரும் அப்பெருமூச்சுக்கள் மறுபடியும் அந்த உள்ளத்தையே போய்மோதுகின்றன. இனி, பொறுக்க முடியாதென்ற நிலையில் விழியின் பட்டுமூடிகள்போன்ற இரப்பைகள் பிரிந்தன. அப்பொழுது அதே கண்கள் ஆசை"வேதத்தி"ற்கு 'உபநிஷத்து'க்களையும், 'ஸ்மிருதி'களையும் கூற ஆரம்பித்துவிட்டன!

'டக்டிக், டக்டிக், டக்டிக்! வேறு ஒன்றுமில்லை: கடிகாரப் 'பாஷை' தான்! நிசப்தமான அந்த இரவு வேளையில் ஓடிக்கொண்டேயிருக்கும் அந்த 'வாயில்லா'க் கடிகாரம் வாயுள்ளதுபோல இப்பாஷையில் பேசுகிறது! நிலையில்லாமல் அப்படியும் இப்படியுமாக ஆடும் மனத்தை ஞாபகமூட்டுவதுபோல அதன் 'தொங்கு—பாரம்' அசைந்தாடுகிறது!

இப்பொழுது அக்கடிகாரத்தை அதே வனப்புள்ள கண்கள் பார்க்கின்றன, "ஆ! மணி 12 க்குமேல் ஆய்விட்டதா? மணி அடித்ததுகூடத் தெரியவில்லையே!" என்ற குரல் கிளம்பியது!

அக்குரலுக்குடையவள் யார்? அந்தக்கண்களுக்குடையவள்தான்.

வாழ்க்கையின் 'அமிர்தகலச'மாகிய இந்த யௌவனப் பருவத்தில் உலக சுகத்தை அனுபவிக்கப் பிறந்த அவளை இந்தத் துன்பம் என் தன் வாகனமாக்கிக்கொண்டிருக்கிறது?

நிம்மதியை அவள் இழந்துவிட்டாளா? அவள் அழகையும் அறிவையும் அனுபவிக்க ஒருவருமில்லையா? 'அஜந்தா' குகைச்சித்திரத்தைப்போல விளங்கும் அவள் அழகுக்கு பங்கம் ஏற்பட்டுவிட்டதா? கலை உள்ளமும், சௌந்திய உணர்ச்சியும் உள்ள அவள் வாழ்வுக்கு சஞ்சலம் சட்டம் கண்ணுடியா?

அந்த அறையில்—அவளது ஏகாந்தமான அந்த அறையில் மாட்டப்பட்டிருக்கும் அப்படங்களை அவள் எத்தனையோ முறைகள்பார்த்திருக்கிறுள். ஆனால், அன்று அவள் மனது ஏன் அப்படித் துடிதுடித்தது?

அப்பெண்மணி அப்படியே சாய்மான நாட்காலியில் சாய்ந்துவிட்டாள்.

படத்திலிருந்து உயிர்பெற்றுவரும் சகுந்தலை அவளிடம் ஒன்று சொல்லுகிறுள். கிருஷ்ணபித்து தலைக்கேறியுள்ள ராதை மற்ருெ

ன்றை வந்து சொல்லுகிருள்! அகல்யை சாபவிமோசனக் கதையைக் கூறுகிருள். சீதை தன் அக்னி பிரவேச அனுபவத்தைச்சொல்லவாயெடுக்கிருள்.

"ஐயோ! உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. கையெடுத்துக் கும்பிடுகிறேன். போய்வாருங்கள்!" என்கிருள் அப்பெண்.

இத்தகைய சிந்தனை—பிரபஞ்சத்தில் இறக்கை ஒடிந்த பறவை போல வளைந்து தளர்ந்து சுற்றும் அப்பெண்ணின் பெயர் என்ன?

கண்ணுக்குத் தெரியாத இடத்திலிருந்துகொண்டு மனசு புன்முறுவல் செய்தவண்ணமாய் தன் லீலா—புஸ்தகத்தின் பக்கங்களை ஒவ்வொன்ருகத் தள்ள ஆரம்பித்தது.

சம்பாஷணை:-

"ராதே, ராதே..." என்ற சப்தம்.

அந்த நடு நிசியில் அவளை யார் கூப்பிடுகிருர்கள்?

ராதை நிமிர்ந்து உட்கார்ந்து "யார்?" என்ருள்.

எதிரே ஒருவருமில்லை. உள்ளே இருந்து கூப்பிடுகிற பேர்வழியை வெளியே எப்படி பார்க்க முடியும்?

மறுபடியும் "ராதே" என்ற குரல்.

"யார்?"—கோபத்துடன் கேட்டாள் ராதை.

"என்னைத் தெரியவில்லையா?"

"ஒருவரையும் காணுமே. யாருடன் பேசுகிறேன்?"

"என்ன, ராதே பதில் சொல்லமாட்டாயா?"

"என் கண்ணில் படாமல் பேசுவது அழகல்ல. நான் ஒரு ஸ்திரீ என்பது ஞாபகமிருக்கட்டும்."

"ஆமாம், ஸ்திரீ மாத்திரமல்ல... கண்ணியமுள்ள யௌவனவதி என்பதற்காகத்தான் கண்ணில் படாமல் பேசுகிறேன்!"

"உன் பெயர் என்ன?"

"என் பெயரா? இன்னுமா தெரிந்துகொள்ளாமலிருக்கிறாய்? சதா நான் உன்னுடன்தானே உறவாடுகிறேன். எனக்குத் தனியாக ஒரு பெயர்கிடையாது. ஆனால், உலகத்தார் என்னை மனசு என்று அழைக்கிறார்கள்."

"ஆ! கள்ள மனசே, அகப்பட்டுக்கொண்டாயா?"

"அடேயப்பா! நீ சதா என்னைப்படுத்துகிறபாடு தாங்காமல்தான் இப்பொழுது வெளியே வந்து உன்னை சில கேள்விகள் கேட்டுவிடுவதென்று முடிவுக்கு வந்துவிட்டேன்."

"கேள்விகள் போடப்போகிறாயா? என்னிடமா?"

"ஆமாம், கொஞ்சமும் ஒளிவு மறைவுயில்லாமல் பதில் சொல்ல வேண்டும். என்னை நீ ஏமாற்றமுடியாது. ஞாபகமிருக்கட்டும்."

"நீ என்ன கேட்பது, நான் என்ன பதில் சொல்லுவது? மகா பாவி! உனக்குமாத்திரம் உருவம் இருந்தால் இந்நேரம் கொன்றேயிருப்பேன்! தெரியாமலா மகாஞானிகளும், பெரியோர்களும் உன்னை மனக்குரங்கே, பேயே, பிசாசே என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். உன்னைக் கட்டிப்போடாவிட்டால் விமோசனமில்லை என்றும், மனம்போன வழியெல்லாம் போகவேண்டாம் என்றும் சொல்லியிருப்பதை நான் படிக்கவில்லையென்று நினைத்துவிடாதே. உன் "வண்டவாளத்தை" வெளிப்படுத்தியுள்ள அவர்கள் வாய்க்குச் சர்க்கரை போட வேண்டும்."

மனசு கலகலவென்று சிரித்துவிட்டு "சபாஷ்! ராதே, என் லட்சணத்தைப்பற்றி—மனசின் 'இலக்கிய, இலக்கண'ங்களைப்பற்றி யார் யாரோ 'பேத்தி'வைத்திருக்கிறார்கள்! எனது தத்துவத்தைச் சித்திரிப்பதுபோல புஸ்தகம் புஸ்தகமாக ஏதேதோ புதிய புதிய வார்த்தைகளைச் சிருஷ்டித்து எழுதி மனோதத்துவம் என்ற பெயரிட்டிருக்கிறார்கள். என்னை உண்மையில் அறிந்தவர்கள் உலகத்தில் மிகமிகக் குறைவு. என்னை அறிந்துவிட்டதாகச் சொல்லுகிறவர்களையோ, எழுதுகிறவர்களையோ கண்டால் எனக்கு அடக்கமுடியாச் சிரிப்பு வருகிறது! ராதே, நான் ஏதோ தற்புகழ்ச்சி செய்துகொள்ளுகிறேன் என்று நினைத்துவிடாதே. யோசித்துப்பார். பரத்தைப்பற்றிப் பேசுகிறார்களே, அவர்களிடம் எனக்குக் கோபமோ, தாபமோ இல்லை. ஆனால் அவர்கள் ஏன் என்னைப்பார்த்து 'ஹே, மனக்குரங்கே, பிசாசே, பேயே, மாயையே!' என்றெல்லாம் சொல்லி பழிவாங்கவேண்டும்? இது ஒன்றே அவர்களது பலஹீனத்தைக் காட்டவில்லையா? போகட்டும், நீதான் சொல், நான் என்ன குரங்கா? குரங்கைப்போல அவ்வளவு விகாரமாகவா இருக்கிறேன்? அல்லது விஷமமா செய்கிறேன்? அல்லது எல்லோரும் வெறுக்கும் விஷமா நான்? மாயையா நான்? என்ன நன்றிகெட்டதன்மை! உணர்ச்சியின் "தொழிற்சாலை" நான் அல்லவா? இவ்வுலகத்தை அனுபவிக்க நான்தானே கண்திறந்துவிடுகிறேன்? உலகஇன்பத்தின் அனுபவமுத்திரைதானத்தை நான் அல்லவோ அளிக்கிறேன்? மனித க்ஷேத்திரத்தின் மகாராஜா நான் அல்லவா? என் கண்ணை அசைத்தாலே போதும்; ஸ்வர்க்கம் வேண்டுமானால் ஸ்வர்க்கம்; நரகம் வேண்டுமானால் நரகம் எதிரே வந்து நிற்குமே! ஞானிகள் என்னைக் கட்டிக்கொண்டு (கட்டுப்படுத்தி விட்டதாக எண்ணம்) என் மடியில் கடவுளைத்தூக்கி வைக்கிறார்கள். கடவுளையும் குழந்தையாகக் கொஞ்சிக்கொண்டே ஞானிகளின் 'வெற்றி'யைப் பைத்தியக்காரனின் சிரிப்பு சித்திரிக்கும் ஹாஸ்ய ரசத்தை ரஸிப்பதுபோல ரஸிக்கிறேன். நான் சிருஷ்டியிலே மகா நுட்பம்....என் கடினமும் பிரசித்தம்...."

"போதும் போதும், உன் பிரதாபம். போய் வா. தூக்கம் வருகிறது. சம்பந்தமில்லாத பேச்சு."

"வாஸ்தவம், கதைக்குப் பொருத்தமில்லாதவைகளைப்பற்றி பேசு கிறேன் என்று நினைக்கிறாயா? மேலும் என்னை விட்டுவிட்டு உனக்குத் தூக்கம் வருமா? தூங்கத்தான் முடியுமா? கேள்வி கேட்கப் போகி றேன் என்ற பயமா? உலகத்திற்குத் தெரிந்தால் சிரிப்பார்களே என்ற அச்சமா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் கோழையல்ல. விஷயம் தெரிந் தவள்; நன்றாகப் படித்தவள். நல்லது கெட்டது தெரியும். உன்னைப் போலப் பிறரைக் கஷ்டப்படுத்துகிறவர்களை உலகத்தில் நான் பார்த்த தில்லை."

"வழிக்கு வந்தாயா? ராதே, நான் கேட்கிறேனென்று கோபிக் காதே. இன்னும் எத்தனை நாளைக்கு உன்னை நீயே நசுக்கிக்கொண்டி ருக்கப்போகிறாய்? சாந்தியை வேண்டித் தவிக்கும் உணர்ச்சிகளைச்சாக அடிக்க முடியாது. அவைகள், அடக்க அடக்க, அடிக்க அடிக்க, அறுக்க அறுக்க வளரும் ஜீவசக்தியுள்ளவை. என்றைக்கோ ஒரு நாள் ஜீவவேகவெள்ளமாகக்கரைபுரண்டுவிடும்; அல்லதுபூகம்பமாகிவிடும்!

"நான் என்ன செய்கிறது? இந்த உலத்திற்குப் பயப்படாமலிருக்க முடிகிறதா?"

"பைத்தியக்காரி, உலகத்தைப்பற்றிக் கவலைப்படாதே. இவ்வுலக மென்ன, மிகவும் யோக்கியமா என்று கேட்கிறேன். 'மல்லாக்க' படுத் துக்கொண்டு எச்சில் துப்பிக்கொள்ளும் இந்த உலகமே பிறருக்கு ஒழுக்கத்தைப்பற்றி உபதேசம் செய்கிறது! கிண்டிப் பார்த்தாயானால் அங்கங்கே 'புரை' ஓடிக்கொண்டிருப்பதைப் பார்ப்பாய்! ஆகையால், பயப்படாதே. உள்ளதைச் சொல்."

"என்ன சொல்லட்டும்?"

"நீயோ சுகுமாரி. உன் அழகுக்கென்ன? புத்திக்கென்ன? நீ ஏன் உன் வாழ்கையை இப்படி பாலைவனமாக்கிக்கொள்ளுகிறாய்? நீ ஏன் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது? விதவையாயிற்றே என்று

யோசிக்கிறாய்போலும்! விதவை என்றால் அவளுக்கு உணர்ச்சியிருக்காதா? ஆசாபாசங்கள் ஒன்றும் கிடையாதா? வாழ்க்கை ஒரே அடியாக அஸ்தமமாகிவிட்டதா? 'சாபவிமோசன'மே கிடையாதா? அதிலும் நீயோ பாலிய விதவை. ஒரு பாவமும் அறியாதவள். உன் தகப்பனார் சனாதனிகள் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் வைதீகச்சடங்குக் கேற்றதென்று உனக்கு பால்மணம் மாறாதபோதே கல்யாணம்செய்து வைத்தார்; கண்ணாலே பார்த்தார்; காலமும் சென்றுவிட்டார். ஒரு வகையில் அது நல்லதாகப் போயிற்று. அவர் உயிரோடு இருந்திருந்தால் உன் அழகான சிகை நீக்கப்பட்டிருக்கும். ஆபரணங்களைத் தொட்டேயிருக்கமுடியாது. வெள்ளைப்புடவையை தலையணை உறை மாதிரி போட்டுக்கொண்டிருக்கவேண்டும். நீ செய்த புண்ணியவசத்தினால் அருமையான அண்ணன் உனக்கு வாய்த்தான். உன்னை இப்படி அலங்கோலப்படுத்தி பார்க்க அவன் விரும்பவில்லை. பத்தாவது வரையில் படிக்கவும் வைத்தான். உண்மையைச் சொல்லுகிறேன். கொஞ்சமும் சந்தேகிக்காதே. அவன் சமூகத்திற்காக அஞ்சவில்லை. சமூக பகிஷ்காரம் செய்தாலும் சரி, என்று உன்னை தகுந்த ஒரு புருஷனுக்கு மறுவிவாகம் செய்துகொடுக்கவே உன் அண்ணா எண்ணியிருக்கிறான். ராதே, நீயோ அறியாப் பருவத்திலே மனைவியாகும் உலகசுகத்தின் 'பிள்ளையார் சுழித்'தைக் தெரிந்து கொள்ளுவதற்குப் பல வருஷங்களுக்கு முன்பே விதவையாகிவிட்டாய். இந்த உலகம் உன்னை 'கம்மனாட்டி' என்ற அவச்சொல்லில் குறிப்பிடும்போது எல்லாம் நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் தெரியுமா? வேண்டாம். காலத்தை இனியும் கடத்தாதே. உள்ளதை பகிரங்கமாகச் சொல். உன் அண்ணாவும் அதற்கு இணங்குவான்."

"அண்ணாவின் மனசு எனக்குத் தெரியாமலில்லை. ஆனால்......?"

"வேறு என்ன சந்தேகம்?"

"எல்லாம் தெரிந்தும் நீயே என்னைச் சோதிக்கிறாயே!"

"சோதனையில்லை. ஞாபகமறதி எல்லோருக்கும் சகஜம். நீ எதைப் பற்றிச் சொல்லுகிறாய்?"

"என்னைப் பரீட்சிக்காதே. அதைச் சொன்னால் நீயே முதலில் என்னைப் பரிகசிப்பாய்."

"என் பரிகாசம் உனக்கு நன்மையையே செய்யும். சொல். சீனிவாசனைப்பற்றித்தானே சொல்ல விரும்புகிறாய்?"

"இல்லை, கண்ணனைப் பற்றி."

"மன்னிக்கவும். மறந்துவிட்டேன். சினிவாசனுக்கு நீ வைத்த பெயர் அல்லவா அது. ஆகா! கண்ணன்! எவ்வளவு இனிமையான பெயர்!"

"உம். இப்படிப் பரிகாசம் செய்வதாயிருந்தால் நான் ஒன்றும் சொல்லமாட்டேன்."

"நீ சொல்ல வேண்டாம். உனக்கு அதைச்சொல்ல சங்கோஜமாக இருக்குமென்று எனக்குத் தெரியும். நானே சொல்லட்டுமா?"

"அப்படியா? எங்கே, சொல் பார்ப்போம்!"

"ஆகா! எவ்வளவு ஆவல், பார்த்தாயா? தன் அனுபவத்தையே பிறர் எடுத்துச் சொல்லுவதைக் கேட்பதிலும் ஒரு ரசனை இருக்கத் தான் செய்கிறது! இல்லையா, ராதே?"

"கேடு கெட்ட இந்த ஜன்மத்திற்கு ரசனை வேறு?"

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?"

"எல்லாம் உன்னால் வந்திருக்கிற அனர்த்தம் தான்!"

"சரி. என் மேலே நீயும்பழிபோட ஆரம்பித்து விட்டாயா? நான் என்ன தப்பைச்செய்து விட்டேன்?"

"தப்பா? நினைக்கவும் முடியாத தப்பு. கற்பனையும் நடுங்கக்கூடிய இமாலயத் தவறு! எல்லாம் நீதான் காரணம்!"

"ராதே, என்னை அறியாதவர்கள்தான் நான் தப்புசெய்து விட்டதாக வீண் கற்பனை செய்கிறார்கள்! கற்பனை எப்பொழுதுமே என்னைப் பார்த்து நடுங்குவதில்லை! ஏன்? 'அவள்' என் தோழி! அவள் சம்பந்தமிருந்த போதிலும் நான் எப்பொழுதுமே அமானுஷிகமாக நடந்து கொள்ளுவதில்லை! ராதே, மேலும் உன் விஷயத்தில் நான் மிகவும் அனுதாபம் காட்டுகிறேன். கண்ணனை குறித்துத் தானே நான் ஏதோ பெரிய தவறு செய்து விட்டதாகச் சொல்லுகிறாய்?"

"ஆமாம்! சந்தேகமில்லாமல்...எல்லாம் நீதான்பொறுப்பாளி..."

"இல்லை. காக்காய் உட்கார்கிறது; பனம்பழம் விழுகிறது! அதற்கு நான் என்ன செய்வேன்?"

"இல்லவேயில்லை. நீதான் காரணம். என்னைக் கெடுத்துவிட்டாய். எவ்வளவோ பரிசுத்தமாகயிருந்த என் எண்ணத்தில் பாசியைப் படர விட்டுவிட்டாய். அடி எடுத்து வைக்குமிடங்களெல்லாம் வழுக்கிவிடுகிறது! உலகம் என்னைப் பார்த்து சிரிக்கிறது! அச்சிரிப்பின் சப்தம் உன்காதில் விழவில்லையா?"

"பைத்தியமே, இந்த உலகத்திற்கு-எதிலும் தேக்கமே தெய்வீகமென்றும், மாற்றம் மகாபாவமென்றும், பழமைசப் பின்பற்றுவதே புண்ணியமென்றும் நினைக்கும் இந்த உலகத்திற்கு இந்த உணர்ச்சி-சாஸ்திரத்தைப்பற்றி ஒன்றும் புரிவதில்லை. இப்படி நினைக்காதே! இப்படி பேசாதே! அப்படிச் செய்யாதே! செய்தாயானால் பாவம்; நரகத்திற்குப் போவாய் என்றெல்லாம் ஓய்யாரமாய் ஒரே இடத்தை விட்டு நகரேன் என்று உட்கார்த்திருக்கும் ஒழுக்கம் உத்தரவு போடுகிறது! அப்பொழுது என்னை அறியாமலேயே நான் சிரித்து விடுகிறேன்! இச்சிரிப்பின் ஒலி உலகத்தின் காதில் விழுகிறதா? விழுந்ததா? என்று நீ என்னைக் கேட்டிருந்தால் இன்னும் பொருத்தமாகஇருந்திருக்கும்!"

"மறுபடியும் சம்பந்தம்இல்லாத பேச்சு."

''உன் கதைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கிறாய்? இருக்கிறது, ராதே, இருக்கிறது. உணர்ச்சி-சாஸ்திரத்தில் பரிணாம வளர்ச்சி அத்தியாயமும், புரட்சிகரமான வளர்ச்சி அத்தியாயமும் உண்டு என்றுதான் சொல்லுகிறேன்!''

''மேலும் குழப்புகிறாயே!''

''குழப்பவில்லை. உன் உணர்ச்சி புரட்சி செய்கிறது. நீ பயப்படுகிறாய்! நீ ஏன் பயப்படவேண்டும்? நான் எப்போதுமே புரட்சியை ஆதரிக்கிறவன்.''

''புரட்சியை ஆதரித்து என்ன பிரயோஜனம்? அது நிறைவேற வேண்டாமா?''

''ஏன் நிறைவேறாது? ஆனால், அதற்கு உலகமே படை திரட்டி வந்து எதிர்த்தாலும், அதையும் தாக்கும் தைரியம் வேண்டும். அது உன்னிடம்...இல்...''

''என்ன சொன்னாய்? தைரியம் உண்டு, சத்தியமாக உண்டு. என்னால் கண்ணனை மறக்கவே முடியாது. நிம்மதியை நாடி புஸ்தகத்தைப் புரட்டினேன். என் 'அதிர்ஷ்ட'மா அது? பாரதியின் கண்ணன் பாட்டுகள் முதலில் கண்ணில் பட்டன. 'தீராதவிளையாட்டுப்பிள்ளை' எனக்கு ஓயாததொல்லையைக் கொடுத்துவிட்டான். நான் உண்மையிலேயே ராதையாகிவிட்டேன். நீயோ அந்தப் பகவான் கண்ணனைக் கொண்டுவந்து சேர்ப்பதற்குப் பதிலாக நான் மறக்க விரும்பிய கண்ணனை கொண்டு வந்து நிறுத்தினாய். உனக்கு இது ஞாபகமில்லையா? கண்ணனை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு நீ இப்பொழுது எப்பொழுது பார்த்தாலும் என்னை வதைக்கிறாய்! உனக்கு இது நியாயமா? ஒன்று, என்னை அவனிடம் சேர்த்துவிடு; அல்லது என் உயிரை வாங்கிவிடு.'

''உயிரை 'வாங்கு'வதோ கொடுப்பதோ சுலபமல்ல. ஆனால் நீ வேண்டுமானால் கண்ணனை மறக்க முயற்சிக்கலாம்.''

"ஐயோ! அதை நினைக்கவும் என்னால் முடியாது. இதற்காகவா உன்னுடன் இவ்வளவுதூரம் பேசினேன்!"

"ராதே, பதறாதே. கண்ணனை—பாலிய முதற்கொண்டு அறிந்த கண்ணனை உன்னால் எப்படி மறக்க முடியும்? ஆமாம்.எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அவன் பெற்றோர்கள் வசித்த வீடு உங்கள் வீட்டுக்கு மூன்றாவது வீடுதானே! நீ அடிக்கடி அங்கே போவதற்கு மிகவும் சுலபமாகயிருந்தது. அதிருக்கட்டும். முதன் முதலாக கண்ணனை நீ சந்திக்கும் போது, அவனுக்கு வயது ஏழு அல்லவா? ஆமாம். உனக்கு வயது அப்பொழுது 13-தானே? என்றைய தினம் நீ கண்ணனைப் பார்த்தாயோ அன்றைய தினமே உனக்கு அவனிடம் அலாதியான ஒரு பிரியம் உதித்து விட்டது! அடடா! அவனுக்குச் சடை போடுவாய்; சிங்காரிப்பாய்! வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் பல தின்பண்டங்களைக் கொடுப்பாய்; தினசரிபள்ளிக் கூடத்திற்கு அழைத்துக் கொண்டு போவாய்; வீட்டிற்கு வந்த பிறகு கதை சொல்லுவாய்; வேடிக்கையாக அவனுடன் விளையாடுவாய் அவன் கன்னத்தில் விழும் 'குழி'யைப் பார்த்து 'அதிர்ஷ்டக்காரன் தாண்டா நீ' என்று சொல்லுவாய்; கொஞ்சுவாய்; சாக்ஷாத் பால கிருஷ்ணன் மாதிரியே இருக்கிறாய் என்று முத்தம் கொடுத்திருக்கிறாய் அடே, கண்ணா, எனக்கொரு முத்தம் கொடுக்கமாட்டாயா? என்று எத்தனையோ தடவை நீ கெஞ்சியிருக்கிறாய். ஒரு நாள் அவன் தாயார் ருக்மணியிடம் சொல்லி அவனுக்கு கிருஷ்ண வேஷம் போட்டாய் அல்லவா? அத்துடன் நின்றாயா? அந்தக் கிருஷ்ண அலங்காரத்திலேயே ஒரு புகைப்படமும் எடுக்க ஏற்பாடு செய்தாய் அல்லவா? அந்தப்படத்தின் பிரதி ஒன்றை இன்னும் நீ வைத்து பார்த்துக்கொண்டேயிருக்கிறாய் என்பதை நான் அறியாமல் இல்லை. ஆகா! கண்ணனும் உன்னிடம் உயிர்தான்வைத்திருந்தான். நீ இல்லாவிட்டால் அவன் சாப்பிடமாட்டான். ருக்மணி ஏதாவது பலகாரம் கொடுத்தால், அவன் அதை முதலில் உன் வாயில் திணித்துவிட்டுத்தான் சாப்பிடுவான். இப்பொழுதுதான் என்ன? அவன் உன்னை மறந்து விட்டான் என்றா நினைக்கிறாய்? அவன் ஒருகாலும் உன்னை மறக்கமாட்டான். அன்பு எப்போதுமே தன் ரசத்தை இழப்பதில்லை!"

"வாஸ்தவம். அன்பு இன்பமா? துன்பமா?"

"அது இரண்டுக்கும் அப்பாற்பட்டது என்று தத்துவம் கூறுகிறது. ஆனால், இரண்டும் கலந்து அனுபவிப்பதே அன்பு என்பது தான் என் அபிப்பிராயம்."

"இதைச் சொல்லி என்னைப் போன்றவர்களைக் கஷ்டப்படுத்துவதற்காக நீ பலம் தேடிக்கொள்கிறாய். அவ்வளவுதானே?"

"என் லட்சணம் பலஹீனம் என்று எல்லோரும் தப்பாகச் சொல்லுவார்கள். ஆனால், நல்லகாலமாக என் வேகத்தை மாத்திரம் யாரும் குறைத்துப் பேசுவதில்லை. என் வேகம் எவ்வளவு பிரசித்தமோ, அவ்வளவு பிரசித்தமுள்ளதே என் பலமும். ஆகவே, நான் புதுசாக பலத்தைதேடவேண்டியதில்லை!"

"மறுபடியும் உன் சுயப்புராணமா?"

"மன்னிக்கவும், கண்ணனைப்பற்றிப் பறந்து செல்லும் உன்வேகத்தை நான் சொல்லவில்லை என்றுதானே அதிருப்தி கொள்ளுகிறாய். அது போகட்டும்; அன்றொரு நாள் கண்ணன் குழந்தையாக இருக்கும்போது உன்னைப்பார்த்து 'அக்கா, எங்கம்மா பொட்டு வைச்சுக்கிறாள். அடுத்த ஆத்து வயசான அம்மாமிகூட பொட்டு நன்னாவைச்சுக்கிறாள். நீ மாத்திரம் ஏன் பொட்டு வைச்சுக்கமாட்டேன்குறாய்?' என்று கேட்டுவிட்டு உன் நெற்றியில் குங்குமத்தை அப்பினானே! நீ அதைச் சட்டென்று துடைத்ததும் அவன் 'ஹோ' என்று அழுதான் அல்லவா? அப்பொழுது அவனைச் சமாதனப்படுத்த நீ..."

"போதும். அதை எல்லாம் நீ ஏன் இப்பொழுது ஞாபகமூட்டுகிறாய்?"

"இன்பத்திற்காகத்தான்."

"இல்லை; துன்பத்திற்காக என்று சொல்."

"ஏன் அப்படி நினைக்கிறாய்? கண்ணனைப் பிரிந்து பத்துவருடங்

களுக்குமேலாகிவிட்ட தென்பதற்காகவா இந்த வெறுப்பு? அவன் என்ன செய்வான்? தகப்பனுருக்குச் சர்க்கார் உத்தியோகம். புது டில்லிக்கு அவர் உத்தியோகம் மாறிவிட்டது. ருக்மணியுடனும், சீனிவாசனுடனும், இல்லை கண்ணனுடனும் அவர் புது டில்லிக்கே குடிபோய் விட்டார். அவர் உன் அண்ணுவுக்கு எழுதிய கடிதங்களில் எல்லாம் ருக்மணியும், கண்ணனும் உன்னை ரொம்பவும் விசாரித்ததாகக் குறிப்பிட்டிருக்கிருர் என்று நீ எத்தனையோ முறை என்னிடம் சொல்லியிருக்கிருயே. கண்ணன் ஒருகாலும் உன்னை மறக்கமாட்டான் என்று நான் அப்பொழுதே சொல்லவில்லையா? பார்த்துக்கொண்டேயிரு. ஒருநாள் மகா சுகுமாரனுக உன் முன்வந்து திடீரென்று பிரசன்னமாகப் போகிறுன்...”

“ஏது, எனக்குத் தோன்றவில்லை. அவனைப்பற்றி நான் எண்ணுத நேரமில்லை. ஒரு நாள் என்ன நடந்தது தெரியுமா?”

“அதென்ன கதை?”

“நீ செய்த சூதுதான்! தெரியாதமாதிரி கேட்கிருயோ? இந்த மாதிரிதான் அவனைப்பற்றி நினைத்துக்கொண்டே படுக்கையில் படுத்திருந்தேன். ‘அவனைப் பிரிந்து பத்து பதினெரு வருஷங்களாய் விட்டதல்லவா? வயது 19 அல்லது 20 இருக்கும். சரியான யௌவனப் பருவம். நீ பார்க்கப்போகிற கண்ணன் வேறு. ஆரம்பத்தில் நீ அவனிடம் கொண்ட வாத்சல்யத்தையும், மற்ருேர்உணர்ச்சிக்குப்பறிகொடுத்துவிட்டாய் அல்லவா? என்று நீ என்னைக்கேட்டதும் உனக்கு ஞாபகமில்லையா? உன்னை ஏமாற்ற முடியாமல் திடுக்கிட்டேன். நீ சிரித்தாய். திரும்பிப்பார்த்தேன். என்ன ஆச்சரியம்! என் கற்பனை வீண் போகவில்லை. எதிரே ஒரு கட்டழகன் வந்து நின்ருன். நான் நிதானித்துப்பார்த்தேன். சந்தேகம் தீர்ந்தது. என் கண்ணன்தான். என் இருதயம் துடிதுடித்தது. தேகம் சிலிர்த்தது. உற்சாகமே உற்சாகம்கொண்டு குதித்தது. உலகத்தையேமறந்தேன். ‘கண்ணு, வாடா’ என்று அவனை ஏக வசனத்தில் எப்படிக்கூப்பிடமுடியும்? பால்யத்தில்தலைகாட்டாத கூச்சமும், அச்சமும் தோன்றி என்னை பின்னுக்குத் தள்ளின. பேச முடியவில்லை. என் இருதயத்தை கண்ணின்மூலம் காட்டினேன். கண்

ணன் அதை தெரிந்துகொண்டவன் மாதிரி முதலில் புன்னகை புரிந்தான்; மிகவும் வெட்கமுடன் முன்வந்தான். 'ராதே, இதுதான் சமயம்' என்று நீ தட்டிக் கொடுத்தாய். உடனே தைரியமாக முன் சென்று அவன் கரங்களைப்பற்றி என் படுக்கையில் என் பக்கத்திலே உட்கார வைத்துக்கொண்டேன். அவன் திடுக்கிட்டுப்போய் விட்டான். என் செய்கை அவனுக்கு அதிர்ச்சியை உண்டாக்கியது. நான் உண்மையில் ராதையாக இருக்க ஆசைப்படுகிறேன் என்பதை அவனிடம் எப்படிச் சொல்லுவது? நீயோ என்னைச் சொல் சொல் என்று வற்புறுத்தினாய். உடனே நான் கண்ணனைப் பார்த்து, 'பாலியத்தில் நீ மிகவும் அழகாய் இருந்தாய்' என்றேன். 'இப்போழுது என் அழகு குறைந்து விட்டதா?' என்று கேட்டான். 'இல்லை, அப்பொழுது நீ தெய்வமாக இருந்தாய், கொஞ்சமும் அச்சமில்லாமல் கொஞ்சினேன்...' என்றேன். 'இப்பொழுதோ?' என்று வினவினான். 'இப்பொழுதோ ஆளாய்விட்டாய்! அப்பொழுது என் மனசு உன் ஸ்பரிசத்தால் பரிசுத்தமாகியது. இப்பொழுதோ என் மனதைக் கெடுத்து விட்டாய்' என்றேன். அதற்கு அவன் என்ன பதில் சொன்னான் தெரியுமா? 'பாலியத்தில்உன்மனசு அழகாயிருந்தது. இப்பொழுதோ விகாரமாய்விட்டது. அதுதான் வித்தியாசம்!' உடனே நான் கண்ணீர்பெருகக் கேட்டேன்: 'கண்ணா, இது உன் முடிவான பதிலா? யோசித்துச் சொல். அன்று ராதையைக் கிருஷ்ணன் காதலிக்கவில்லையா? ராதையோ கிருஷ்ணனைவிட வயதில் மூத்தவள் தான்-அது மாத்திரமா? அவள் மற்றொருவனின் மனைவி. அப்படியிருந்தும் அவள் காதலை பக்தியாக உலகம் போற்றவில்லையா? இலக்கியமெல்லாம் ராதையின் காதலை உச்சிமேல் வைத்து புகழ்கிறதே! ஒழுக்கத்தின் பெயரில் அதெல்லாம் தப்பு என்று சொல்லுகிறாயா?'

'உம், நீ படித்தபடிப்பு இவ்வளவுதானா? ராதை-கிருஷ்ணன்காதல் என்பதுஆத்மா-பரமாத்மாஐக்கியம் என்று தத்துவம்எடுத்துச்சொல்லுவதை மறந்துவிட்டாயா? உலகத்தில்ஆண்களுடைய கண்கள்தான் பார்க்கும்பிரியமான அழகானவற்றையெல்லாம் எச்சலாக்கிறதென்றுஎண்ணியிருந்தேன். பெண்களுடைய கண்களும் அப்படித்தான் என்று நிரூபித்துவிட்டாய். ஸ்திரீகளுடையஇருதயம் மகா புனிதமானது. ராதே, அதை ஆசையால் உச்சிஷ்டமாக்கி விடாதே. ஸ்திரீகளின் இதயம் நெறி தவறும்போது, அது சமூகத்தையே, ஏன் உலகத்தையே பாதிக்

கிறதென்று கூறலாம். நீயோ விதவை. உன் உணர்ச்சிகளின் சேஷ்டைகளுக்குப் பலியாக்கிக்கொள்ள நானா ஆள்?' என்று கண்டிப்பாகப் பதில் கூறினான்."

"உம். நீ அதற்கு என்ன பதில் சொன்னாய்?"

"பதிலாவது, மண்ணாங்கட்டியாவது? மூடிய கண்ணைத் திறந்த போது எல்லாம் தோற்றம் என்ற ஞாபகம் வந்தது. நீ செய்த வேலை என்று பெருமூச்சிவிட்டேன்."

"ஏன் பொய் சொல்லுகிறாய்? கண்ணன் நிஜமாகவே உன்னைப் பார்க்க வந்திருந்தபோது எவ்வளவு அன்புடன் பேசினான் என்பது எனக்குத் தெரியாதா?"

"வாஸ்தவம், என் கற்பனையில் நடந்துகொண்ட மாதிரி உண்மையில் அன்று வந்தபோது நடந்துகொள்ளவில்லைத்தான்! பத்து, பன்னிரண்டு வருடங்களுக்குப்பின்பு மேல் அதிகாரிகள் உத்தரவுப்படி கண்ணனின் தகப்பனார் சென்னை சர்க்காரின்கீழ் ஒரு விசேஷ வேலையை ஏற்றுக்கொண்டார் அல்லவா? அப்பொழுது எல்லோரும் சென்னைக்கே மறுபடியும் வந்துசேர்ந்த கதைதான் உனக்குத் தெரியுமே! இத்தகவல் கேட்டதிலிருந்து கண்ணனைப் பார்க்க நான் துடியாய்த் துடித்தேன். ஒரு நாள் காலை 10 அல்லது 10½ மணிக்குள் இருக்கும். என் அண்ணா எங்கேயோ வெளியே போயிருந்தார், மறு நாள் சாயங்காலம் எங்கள் வீட்டுக்கு வருவதாக ருக்மணி சொல்லி அனுப்பியிருந்தாள். கண்ணனும் ஒரு வேளை அவளுடன்தான் வருவான் என்று முதலில் நினைத்தேன். ஒரு வேளை வராமலேயே இருந்துவிடுவானோ என்ற எண்ணம் பயமுறுத்தியது. திடீரென்று அவனுக்குக் கிருஷ்ணவேஷம் போட்டு எடுத்த 'போட்டோ' (புகைப் படம்) ஞாபகத்திற்குவந்தது. அதை எடுத்துவந்தேன். சுந்தரஉருவத்தின் குறும்புச் சிரிப்பு அப்படத்தில் பிரதிபலித்தது. அதைவைத்துக்கொண்டு அப்பொழுது கண்ணன் எப்படி தோன்றுவான் என்ற கற்பனை செய்துகொண்டே நின்றேன். என்னை அறியாமலேயே என் கரம் அப்படத்தை என் உதடுகளின் அருகில்கொண்டுபோயிற்று. இது வரை உதவிசெய்த கற்பனை வெகு

மதி கேட்டது. படத்தை முகாந்திரமாக வைத்துக்கொண்டு ஆசை கற்பனைக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுத் துள்ளித்திரும்பியது. ஆசையின் அஞ்சல் ஸ்தானமாகிய மார்பகத்தில் அப்படத்தை அணைத்துக் கொள்ளப் போனேன். சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். எதிரே ஆஜானுபாகுவாக ஒரு யௌவனவான் நின்று கொண்டிருந்தான். 'புருஷர்களில் விஷ்ணு' என்று 'சுலோகம்' சொல்லுவார்கள் அல்லவா? அப்பொழுது அது என் ஞாபகத்திற்குவந்தது...."

"கொஞ்சம் பொறு. அந்த வாலிபன் உன்னைப் பார்த்ததும் 'புஷ்பங்களில் ஜாதி' என்று சொல்லவில்லையா?"

"கிண்டல் செய்யாதே. நடந்தகதையைக்கேள். யௌவனத்தின் சோபை என் நெஞ்சில் வந்து நிரம்பியது. கண்களோ மோகனாஸ்திரம் போட்டமாதிரி! அவன் வேறு யாரோ என்று முதலில்மலைத்தேன். அதே நொடியில் கண்ணன்தான் என்று கண்டுபிடித்துவிட்டேன். இருபது இருபத்தொரு வயதுள்ள கண்ணன் என் கற்பனையில் வளர்ந்த கண்ணனைவிட அதி அழகாக விளங்கினான். அவனை ஆவலோடு அழைக்கத் திரும்பிய நான் என்னை அறியாமலேயே என் கையிலிருந்த படத்தை நழுவ விட்டேன். கீழே விழுந்ததும் அதன்கண்ணாடி உடைந்தது. அக்கண்ணாடித்துண்டு ஒன்று என் கட்டை விரலில் பாய்ந்து ரத்தக்காயத்தை உண்டாக்கியது. அதை நான் முதலில் உணரவில்லை. ஆவலுடன் முன் ஓடிவந்து 'கண்ணா...' என்றேன். படம் உடைந்ததையும், கண்ணாடித்துண்டு என் காலில் காயத்தை உண்டாக்கியதையும் அவன் கவனித்துவிட்டான். வேறு ஒன்றும் பேசாமல் படபடப்புடன் முன்வந்து 'காலில் இரத்தம் வருகிறதே. எதைப்போட்டு உடைத்துவிட்டாய்?' என்று கேட்டுக்கொண்டே தன்கைக்குட்டையை எடுத்து என் கட்டை விரலிலிருந்துவரும் ரத்தத்தைத் துடைத்துக் கட்டினான். என் தேகம் சிலிர்த்தது. 'என்னை அடையாளம் தெரியவில்லையா? முதலில் என்னை ஏன் அப்படிப் பார்த்தாய்?' என்று கேட்டான். 'நான் உன் புஜத்திற்குக்கூட வரவில்லை. நீயோ ஒரே அடியாக உயர்ந்துவிட்டாய் அல்லவா?' என்று சிரித்துக்கொண்டே கேட்டேன். அவன்கீழே சிதறிய கண்ணாடித் துண்டுகளை எல்லாம் பொறுக்கினான். நான் அவனைத் தடுத்து 'நீ பேசாமல் உட்கார். நான் எடுக்கிறேன்' என்று கூறி

சட்டென்று அப்படத்தை எடுத்து மறைக்க விரும்பினேன். அதற்கு முன்பு அதை அவன் எடுத்து 'அடே! என் படம் மாதிரி இருக்கிறதே!' என்று ஆச்சரியமுடன் பார்த்தான். அவன் உள்ளத்தில் எழுந்த சந்தேகம் முகத்தில் படர்ந்தது. வெட்கமுடன் தலைகுனிந்தவளாய் 'ஆமாம். உன் படம்தான். நீயே வந்துவிட்டாய். இனி இப்படம் என்னத்திற்கென்று தானாகவே உடைந்துவிட்டது' என்று சொன்னேன். அவன் முகத்தில் பலவிதமான உணர்ச்சிக் குறிகள். என்னால் ஒன்றும் முடிவுக்கு வரமுடியவில்லை. கிட்டேவந்து காயத்தைக் கட்டிய அவன் ஏதோ பெரிய தவறுதல் செய்தவன்போல எட்டிப்போய் நின்றான். என்னைத்தொட்டு காயத்தைக் கட்டியது தப்பு என்ற எண்ணமே அவனை அவ்விதம் மாற்றியதென்று ஊகித்தேன். 'கண்ணா, சும்மா வந்து உட்கார். பெரிய மனுஷனாகிவிட்டோம் என்று நினைத்து இப்படி நடக்கிறாயா?' என்றுகேட்டேன். 'அதெல்லாம் இல்லை....' என்று தடங்கலுடன் பதில் கூறினான். சுருக்கமாகச்சொல்லுகிறேன். என்னைப் போலவே அவனும் கஷ்டப்படுகிறான் என்று எனக்குப் பட்டுவிட்டது. கண்ணாடித்துண்டு என் காலில் குத்தியது நான்நினைத்த எண்ணத்திற் தண்டனையா? என்ற நினைப்பு வேறு என்னை வதைக்க ஆரம்பித்தது. அப்பொழுது 'அண்ணா எங்கே?' என்று அவன் கேட்டான். 'வெளியே போயிருக்கிறார். இப்போ வந்துடுவார். உட்கார். இங்கே சாப்பிட்டுப் போகலாம்' என்றேன். 'இல்லை, நான் போய் நாளைக்கு அப்பா, அம்மாவையும் அழைத்துக்கொண்டு வருகிறேன்' என்று புறப்பட்டான். 'கூடவே கூடாது. நீ சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும். இன்னும் சின்னப்பிள்ளைமாதிரி ஹடம் பிடிக்கலாமா?' என்று வேடிக்கையாகக் கேட்டேன். 'ஹடம் ஒன்று மில்லை. நாளைக்குத்தான் வரப்போகிறேனே' என்று திரும்பினான். 'கண்ணா, இதோ, என்னைப் பார்த்துச் சொல். ராதையை உனக்கு இப்பொழுது பிடிக்கவில்லையா?' என்று பாதையை மறைத்துக்கொண்டு கூறினேன். 'என்ன ஆச்சசரியம்! நீ மாத்திரம் இன்னும் சின்ன குழந்தை மாதிரியே பேசுகிறாயே!' என்றான். 'ஆமாம். சின்னக் குழந்தைதான், உன்னைவிட எனக்கு வயசுகூட என்று பரிகாசம் செய்கிறாயா?' என்று கேட்டேன். முன்பின் யோசிக்காமல் அவன் கரங்களைப் பற்றி இழுத்துக் கொண்டுபோய் உட்காரவைத்தேன். நீ என் நெஞ்சில் தூபம்போட்டாய். அவன் முகத்திற்கு அருகே ஆசை என் முகத்தைக் கொண்டு போயிற்று.

வெளிப்படச் சொல்லுகிறேனே. முத்தம்கொடுக்க விரும்பினேன். அதைப் பெற்றுக்கொள்ளவும், திரும்பிக்கொடுக்கவும் தயார் என்று அவன் முகம் சொல்லுவதாக எனக்குப்பட்டது. ஆனால் உண்மையை எனக்கிருந்த உணர்ச்சிவேகத்தில் அறியமுடியவில்லை. 'வீணாக ஒரு சிறுவனை நீ அநியாயமாகக் கெடுக்கப்போகிறாயே!' என்று யாரோ என் முகத்தில் அடித்து சொல்லியமாதிரி இருந்தது. பாதை தவறிய வள் மறுபடியும் திரும்புவதுபோல விழித்தேன். மறுபடியும் தவறிய பாதைக்கே என் உணர்ச்சி இழுத்துவிட்டது. கொஞ்சம் சமாளித் தேன். முத்தம் கொடுக்கப்போன நான் அவனுக்கு என் கைகளை மடக்கி 'திருஷ்டி-முறித்து' விட்டேன். அவன் இதனால் ஏமாற்றத்திற் திற்குள்ளானனோ, என்னமோ? எனக்குத் தெரியாது. தைரியமிழந்த நான் சொல்லமுடியாத மயக்கத்திற்குள்ளானேன். மூன்று நான்கு நிமிடங்கள் கழித்து விழித்துப்பார்க்கும்போது என் முகத்தை தன் அங்கவஸ்திரத்தால் கண்ணன் துடைத்துக்கொண்டிருந்தான். அவன் மடியில் என் தலையை வைத்திருந்தேன். மெதுவாக எழுந்தேன். 'இப் பொழுது எப்படி இருக்கிறது?' என்று அவன் கேட்டான். அதேசம யத்தில் இக்காட்சிகளைப் பார்த்த ஓர் உருவம் திரும்பிப் போவதைக் கண்டேன். யார்? என் அண்ணாதான். வந்தது ஆபத்து என்று அவர் எண்ணியிருக்க வேண்டும். அநியாயமாக நான் ஒரு வாலிபனைக் கெடு த்து விட்டேன் என்று அவர் நினைத்து விட்டாரோ? ஒன்றுமே சொல் லாமல் வந்தவர் உடனே போய்விட்டார். பின்பு கண்ணன் என்ன நினைத்தானோ? 'ராதே, நாம் நடந்து கொண்டது பிசகு. அண் ணாவோ...சரி, நான் போய் வருகிறேன்' என்று சட்டென்று அவனும் கிளம்பிவிட்டான். திரும்பியும் பார்க்கவில்லை. நான் அப்படியே மர மாக நின்றுவிட்டேன்."

––

"அப்பாடா! கதை முடிந்ததா? அப்புறம்....?" என்று மனசு கேட்டது.

––

"அப்புறம் என்ன? கண்ணன் சென்ற பத்து நாட்களாக இப்பக் கமே வரவில்லை. என் அண்ணாவும் என்னுடன் சரியாகப் பேசுவதி ல்லை. தினசரி இரவெல்லாம் உன்னுடன் போராட்டம் தான். சாவை

த்தவிர சாந்திதருவதொன்று வேறு இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டேன்."

"அண்ணாவுக்காக ஏன் பயப்படுகிறாய்? கண்ணனை நீ பகிரங்க மாகக்கல்யாணம் செய்து கொள்ளுகிறது தானே? உன் கோழைத்தன த்தை மறைக்க உலகத்தின் மீது பழி சுமத்தாதே. அவனிடம் அவனாக இருப்பவன் நான். உன்னிடம் 'நீ'யாக இருப்பவனும் நான் தான். உங்கள் இருவரையும் சேர்த்து வைத்தவனும் நான் தான். என்றால் சேர்த்து வைக்கப்பட்டவர்களை என் சம்மதமில்லாமல், பிரிக்கவே முடியாது. தெரிந்ததா? யோசிக்காதே. கண்ணனும் உன்னை ஏற்றுக் கொள்ளத்தயார். கல்யாணத்தின் மூலம் உன் உணர்ச்சியை சாந்தி செய்து கொள். சாவு உனக்கு சாந்தி அளிக்காது."

"துணிந்து விட்டேன், மனமே, துணிந்து விட்டேன். உலகம் தூற்றிக் கொண்டே இருக்கட்டும். காதலுக்கு வயது கிடையாது. கண்டு கொண்டேன். கண்ணன் வீட்டுக்கு நாளையே நானே போகி றேன். இது சத்தியம்."

"சபாஷ், ராதே, யாராவது கேட்டால் உன் கண்ணனிடம் அந்த பகவானைப் பார்ப்பதாகச் சொல். ராதையாகவே மாறிவிட்டதாகக் கூறு. ஜெயதேவர், வித்தியாபதி போன்ற கவிகள் ஒரு வேளை மறு படியும் பிறந்தார்களே யானால், உன் காதலைப் பற்றியும் பாடுவார் கள்! பயப்படாதே. காதல் உலகத்தில் புரட்சி செய். நான் உன் சகா."

"இது நிச்சயமா?" என்று ராதை கேட்டாள்.

பதில் இல்லை.

அவள் இருந்த அறையிலுள்ள விளக்கை வெளியிலிருந்து பல மாக வீசிய காற்று அணைத்துவிட்டது.

இருள் சூழ்ந்தது. ராதை தன் காதல் விளக்கை ஏற்றி ஏற்றி விடுகிறாள்!

ஊருக்குப் பயப்படும் உணர்ச்சியோ அதை ஊதி ஊதி விடுகிறது!

மனது எங்கேயோ உட்கார்ந்து கொண்டு மறுபடியும் தன் லீலா விநோதப் புஸ்தகத்தின் ஏடுகளைப் புரட்டுகிறது!

இப்படி முடிகிறது........

"கண்ணனுக்குத் திடீரென்று மார்அடைப்பாம். வேலைக்காரி வந்து சொல்லிப்போனாள். வாங்கள் போய்வரலாம்" என்று தன் அண்ணாவிடம் கூறினாள் ராதை.

"அவனவன் செய்த தப்புக்கு அவனவன் அனுபவிக்கிறான். நான் வரவில்லை. உனக்குப் பிரியமிருந்தால் நீ போய் வா. வளர்த்த கடா மாரில் பாய்ந்தது. உலகம்சிரிக்கிறது" என்றான் ராதையின் அண்ணன்.

ராதை தவித்தாள். என்னசெய்கிறதென்று தோன்றாது தவித்தாள். கடைசியில் போவதென்றே முடிவுகட்டிவிட்டாள்.

அண்ணாவின் பதிலுக்கு எதிர்பாராமலேயே ருக்மணி அம்மா வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

பத்து நாட்களாகவே கண்ணனுக்கு உடம்பு சுகமில்லை. அது ராதைக்குத் தெரியாது. கண்ணனின் பெற்றோர்களும் அவளுக்குச் சொல்லி அனுப்பப் பிரியப்படவில்லை. காரணம் ராதை தன்பிள்ளையைக் கெடுத்துவிடுவாள் என்ற பயம் அவர்களுக்கும் ஏற்பட்டுவிட்டது.

ராதை அந்த வீட்டிற்குள் நுழைந்தாள். கண்ணன் படுக்கையில் கிடந்தான். திடீரென்று அன்று அவனுக்கு நெஞ்சுவலி தோன்றியது. காரணம் தெரியவில்லை. ராதையைப் பார்க்க விரும்புகிறான் என்ற சங்கதியை வீட்டு வேலைக்காரி அறிந்தாள். அவளே அத்தகவலை ராதையகு அன்று அறிவித்தாள்; இல்லையேல் கண்ணனை ராதை பார்க்க முடியாமலே போயிருக்கும்.

பேச்சுமூச்சில்லாமல் கண்ணன் படுக்கையிலிருந்தான். ருக்மணி பிரேதக்களையுடன் நின்று கொண்டிருக்கிறாள் கண்ணனின் தகப்பனார் பிரக்ஞையற்று நின்றார். இச்சமயத்தில்தான் ராதை அங்குபோய்ச் சேர்ந்தாள்.

டாக்டருக்கு ஆள் அனுப்பப்பட்டிருக்கிறது.

கண்ணனின் நிலையைக் கண்டதும் 'ஹோ' வென்று கதறிவிட்டாள் ராதை. அவன் பக்கத்தில் போய் முகத்தையும், நெஞ்சையும், தொட்டுத் தொட்டு பார்த்தாள். "கண்ணா கண்ணா" என்று கதறினாள். பதில் இல்லை. ஒரு சோடா ஒன்றை 'உடைத்து' அவளே கொடுத்தாள்.

கண்ணன் மெதுவாகக் கண் திறந்தான். சோடா ஜலம் முழுவதும் உள்ளுக்கு இறங்கவில்லை. அவனால் பேசவும் முடியவில்லை.

ராதையை நன்றாகப் பார்த்தான். அவள்கரங்களைப்பற்றித் தன் இருதயத்தில் ஒத்திக்கொண்டான். மறுபடியும் கண்மூடிவிட்டான், ஒரேயடியாய்!

"கண்ணா, மோசம் செய்தாயா?" என்று அவன் மேல் விழுந்து அழுதாள். ராதை. அப்பொழுதுதான் தான் ஒரு விதவை என்று அவள் நினைத்தாள்.

இச்சோகநாடகம் ஒரு புறம்.

அங்கு வந்திருந்த சுற்றத்தார்களும் மற்றவர்களும் குசுகுசு வென்று என்ன பேசிக்கொண்டார்கள் தெரியுமா?

"இதென்ன? இவள் யார்? இவளோ விதவை. கூச்சமில்லாமல் இவன்மேல் விழுந்து அழுகிறாள். சரிதான்.........பேர்வழி ஒரு மாதிரியோ?...."

"உலகம் கெட்டுப் போச்சு, அப்பா!"

"பாவம், பாவம்! விதவை என்பதையும் மறந்துட்டாள் போலிருக்கிறதே!"

"உஷ். காதில் விழப்போகிறது. நமக்கேன் இந்த வம்பு? யார் எக்கேடுகெட்டுப்போனால் நமக்கென்ன?"

"அப்படியில்லாமே இருந்தால் இப்படி ஒரு பெண் கொஞ்சமும் வெட்கமில்லாமே அவன் மேலே விழுந்து அழுவாளா என்று கேக்குறேன்?"

"எப்படி இந்த வேடிக்கை நாடகம்?" என்று கேட்டுக்கொண்டே கண்ணுக்குத்தெரியாத இடத்திலிருந்து மறுபடியும் மனது தனது லீலா-நாடகப் புஸ்தகத்தின் கணக்கற்ற பக்கங்களை மேலும் மேலும் புரட்டிக்கொண்டேயிருக்கிறது!—இதற்கு முடிவேயில்லை என்று புரட்டிக்கொண்டேயிருக்கிறது!

# காதல் மலர்

[ஷீபாலிகா விருக்ஷத்தின் வெண்மையான புஷ்பங்கள் சூரிய உதயத்திற்கு முன்பே உதிர்ந்து விடுவது இயற்கை. இவை பூஜைக்குரிய புனிதம் வாய்ந்தவை. பிரஸ்தாப விருக்ஷம் ஓர் உயரிய காதல் கதையைப்பற்றிப் பேசுகிறது. இதிகாசத்தில் தொடர்பு பெற்ற கதைக்குப் புதிய கற்பனை மெருகு கொடுக்கப்பட்டிருக்கிறது.]

*   *   *

எழுவாய் எழூர்சியா?

பொழுது புலர்கிறது, புலர்ந்துக் கொண்டே வருகிறது கொஞ்சமாக.

ஆம். 'நாம் செய்த தவத்தால்.'

பூபாள இராக ஆலாபனம் எங்கிருந்து வருகிறது? அதோ, பள்ளி எழுந்தது வரும் அந்தக்குளிர்ந்த 'காற்றுத்தேவி'யிடமிருந்து தான்!

மரங்களையே மஞ்சங்களாகக் கொண்ட இந்தப் புள்ளினங்கள் கண்விழித்துப் புறப்படுவதுடன் நிற்கவில்லை; ஆரம்ப சங்கீதவித்யாப் பியாசியைப்போல சரளிவரிசையைப்பாடுகின்றன! அவைபோடும் 'கீச்,கிரீச்' என்னும் சப்தத்தில் அந்த 'ச,ரி,க,ம,ப,த,நி' பேசுகிறதோ? பேசுகிறது தோற்றத்தில்!

கிழக்கே வெளுக்கிறது. சிறுகச் சிறுக. இரவு முழுவதும் இருட்டு விலங்கில் கட்டுப் பட்டுக் கிடந்தவானம் விடுதலை பெறுகிறது. பரிபூரண பிரம்ம நிலையில் ஐக்கியமாவதற்கு முன்பு பழக்க வேண்டிய மோன நிலையைக் காட்டுவதுபோல் அந்த உஷா காலம் ஆரம்பமாயிற்று.

அமைதி-சாந்தி, சாந்தி-அமைதி, பக்ஷிஜாலங்களின், காற்றின் ஓசைகளைத் தவிர.

## காதல் மலர்

உதயகிரியின் 'அதரதளங்கள்' சிவக்கத்தொடங்கிவிட்டன. மலைகளின் மார்புகளிலேபட்டும் படாதபடி தூங்கிக் கொண்டிருந்த மேகங்கள் விழிப்புற்றன; ஆனால், தூக்கக்கலக்கத்துடன் அங்கம் அசைந்த வண்ணம் சென்றுகொண்டிருக்கின்றன. நாட்டியப் பெண் ஒருத்தி ஓர் 'ஆவர்த்தன'த்தை முடிக்க ஆடிக்கொண்டே முன் வருவதுபோல புதுமுகில் மேலும்மேலும் வந்து கொண்டிருக்கின்றது.

அதோ, அவள் யார்? எடுத்த அடி நோக வருகிறாளே! ஒரு புஷ்பக்கொடி உயிர்பெற்றிருக்கிறதா? இல்லை, வானத்திலிருந்து தவறுதலாக வழுக்கிவிழுந்தவள் போலும்!

சூதுவாது அற்ற அழகின்ஜோதி அவளின் வதனத்தில் சுயராஜ்யம் செய்கிறது. பரிசுத்தத்திற்காகப் பிறப்பெடுத்திருக்கிறது அவளுடைய இருதயம்.

அவள் எங்கே தன் ஹம்ஸநடையை மறந்து இவ்வளவு வேகமாகப் போகிறாள்? அதோ, அந்தச் சோலைக்குத்தான். "மலரும் மல்லிகையைப் பறிக்கத்தான் போகிறாள். இது தெரியவில்லையா?" என்று கூறுகிறது அவள் கோமளகரமான கரங்களால் அணைக்கப்பட்டிருக்கும் பூவைக்கும் தூக்குக்கூடை.

தன் கேசஜாலத்தில் சூட்டிக்கொண்டு முகத்திற்கு மோகன ஒளி மெருகு ஏற்றுவதற்காக அவள் பூ பறிக்கப்போகவில்லை. புஷ்பம் புனிதம். அது சேரவேண்டிய இடம் அப்புனிதத்தன்மையைக் கொடுத்தருளிய தெய்வீகம். அத்தகைய தெய்வ சந்நிதியில் அர்ச்சிக்கவே—பூஜிக்கவே அவள் இப்பொழுது அப்பூங்காவில் மல்லிகை மலர்களைக் கொய்கிறாள்; அங்குமிங்குமாகத் திரும்பி புஷ்பித்தவைகளை மாத்திரம் பறிக்கிறாள்.

"உன்னைப்போல எனக்கும் வெள்ளைமனதுதான். நீ என்னைக் கொய்து வருத்தம்தரவில்லை. உன்னால் நான் தெய்வத்தை அடையும் பாக்கியம்பெறுகிறேன்" என்று அபிநயம்பிடித்துக்காட்கின்றன கூடையில் கூடும் பூக்கள்! உதிர்ந்த மலர்கள் "என்னைப்பார்" என்று அந்தச்

சௌந்தரியவதியின் திருஷ்டியை ஆகர்ஷித்தன. உடனே குனிந்து, அன்று மலர்ந்து உதிர்ந்த புஷ்பங்களை மாத்திரம் பொறுக்கி எடுத்துக் கொண்டாள். அவள் ஒரு புஷ்பம். அவளை அடைந்த மற்ற மலர்களும் இனத்தோடு இனமாகமாறின.

அவள் மலர்; ஆனால், மலர்ந்து உதிரவோ, உதிர்ந்து மலரவோ விரும்பவில்லை. அமரத்வமலராக்கிக் கொள்ளுவதே அவள் மாசற்ற இதயத்தின் லட்சியம்!

வெளுத்து விட்டது ஆகாயம் நாம் செய்த தவத்தால்.

ரவி, புவனத்தை விடப் பெரியவன், பூகோளசாஸ்திரிகளின் கணக்கின்படி. மனித கண்களுக்குச் சிறியவன்! ஒரு வரியின் வளர்ச்சியின் 'கதாநாயகனா'கிய எழுவாய் போல எழுந்தான் சூரியபகவான், நாம் செய்த தவத்தின் பயனால். தெய்வீகக் காதல்விருக்ஷத்தின் உச்சியில் பழுக்கும் ஆசையின் கனியைப் போல அவன்மேனி அப்பொழுது சிவந்திருந்தது. அவனது கிரண ராஸிகள் ஒளி பரப்பின. பொன்மயம். ஆனால், அது நிரந்தர மற்ற மாயை! அது பிரகிருதிதேவியின் மார்பை விம்மவைத்தது! அவள் ஆனந்தமூச்சின் அல்லோலகல்லோலம்!

சோலையில் இருந்தபடியே பார்த்து விட்டாள் பாஸ்கரனை அச்சுந்தரி. பூக்கொய்வதைக் கைகள் மறந்தன. சுற்றுப்புறங்களை அணைத்துக்கொண்டிருக்கும் பிரகிருதியின் சக்தி அவளைப் பிடித்து முன்னே தள்ளியது.

அண்ணாந்தமுகம். அத்தினகரன் வதனத்தில் சொக்கிய அவள் கண்கள். அவன் இதயத்தில் ஒட்டிக் கொள்ள இறக்கையைக் கட்டிக் கொண்டு பறக்கும் அவள் ஆத்மா.

ஒரு கையில் உள்ள புஷ்பக்கூடையுடன் அவள் அப்படியே ஓடினாள்; ஓடுகிறாள்; ஓடிக்கொண்டேயிருக்கிறாள்.

அவள் ஆத்மாவில் தேடிக்கொண்டிருந்த தெய்வம் பிரசன்னமாகி விட்டது போலும்!

பகலவன் வெறும் நெருப்புப் பந்து. அவனை நெருங்க யாரால் முடியும்? நெருங்க, நெருங்க பொசுங்க வேண்டியதுதான்! ஆனால், தூரத்திலிருந்து அவனது ஒளி ரேகை எல்லோரையும் ரக்ஷிக்கின்றது!

அவன் உதயமாகவில்லை; அஸ்தமிக்கவில்லை! அப்படியே இருக்கிறான். அவனைக் கட்டிக் கொள்ளத்தான் தோன்றிய நாளிலிருந்து அவனை வலம்வந்து தவம்செய்கிறாள் பூமாதேவி. அவள் தவத்திற்கே இன்னும் அவன் இரங்கவில்லை; வரம் கொடுக்கவில்லை. எத்தனையோ மைல் யோசனை தூரத்திற்கப்பால் பிரிந்து நிற்கிறான்! ஆனால் அவனது சாயலால் அவள் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறாள்!

இவ்விதமெல்லாம் அவள் யோசிக்க வில்லை. வெள்ளை மனது கள்ளங்கபடற்ற காதலை அவனிடம் கொண்டுவிட்டது. காதல் எழுச்சியில் அவள் துடிதுடிக்கிறாள்! அவள் நேத்திரங்களுக்குக் கதிரவன் வெறும் நெருப்புக் கோளமாகத் தோன்றவில்லை.

அவள் ஆத்மாவில் அவன் கதாநாயக ஸ்தானத்தில் அல்லவோ இருக்கிறான்!

அவள் வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாள்: அழகின் நித்ய ஜோதியின் சுந்தர சொரூபன்; அனந்த கல்யாண குணமுடையவன்; என்றும் உள்ளவன்; பல புரவிகள் பிணைக்கப்பட்ட ரதாரூடனாய் வருகிறான்.

அவன் மீதுதான் ஷீபாலிகா காதல் கொண்டு விட்டாள். ஆம். அவள் பெயர் ஷீபாலிகா. அப்பெயர் ஒரு குற்றமற்ற கவிதை. பரிசுத்தக் காதலின் கண்ணீரை உடையது!

எழுச்சி, எழுச்சி, அவள் கொண்ட காதலின் எழுச்சிக்கு அளவில்லை!

பயவிலே பயன் இல்லையா?

மன்மதனின் கரும்பு வில்லிலிருந்து விடுபட்ட புஷ்பபாணம் போல் ஷிபாலிகா போகிருள். இல்லை, பறக்கிருள், கிழக்கே நோக்கி. இப்பொழுது, அவள் எங்கேயோ? சோலை எங்கேயோ?

மேடு, பள்ளம், கரடுமுரடு எல்லாம் குறுக்கிட்டன. அவள் லட்சியம் செய்யவில்லை. அவள் இலட்சியம் வேறு!

தடாகம் என்ன, நதி, நீர்வீழ்ச்சி, குன்றுகள் என்ன, எல்லாம் வழிமறைத்தன. அவள் திரும்பிப் பார்க்கவில்லை. அஞ்சவில்லை. மேலே மேலே, மேலே போகிருள்-தாண்டிப் போகிருள்! இவ்வளவு பெரிய சக்தி அவளுக்கு எங்கிருந்து வந்தது? 'அதுதான் சூட்சுமம்' என்றது அப்பொழுது அடிக்கும் காற்று.

ஹிமயத்தைப்போன்ற மலை வந்து நின்றது. ஆனல் அவள் இருதயம் குன்றவில்லை. ஏறிஞள், இங்கும், அங்கும், எங்கும் திரும்பிக் கொண்டே. இடையில் நிற்கவில்லை, திகைக்கவில்லை, மேலே, மேலே போகிருள்! அவள் காதலன் சூரியனும் வானத்திலே மேலே, மேலே போய்க்கொண்டேயிருக்கிருன்! அவனது பிரயாணம் வழக்கம்போல் தங்குதடையின்றி நடக்கிறது! காரிகையின் கதிஎன்ன?

செங்குத்தான மலை உச்சிக்கு வந்துவிட்டாள். அப்புறம் கிடுகிடு பாதாளம்! சூரியநாராயணனும் உச்சிக்கு வந்துவிட்டான். வெய்யிலைப் பரப்பி மகா 'உஷ்ணகாரண சொரூபி'யாகிவிட்டான்.

கொடுமை! கொடுமை!! கொடூரம்! கொடூரம்!! கடுமை! கடுமை! காலையில் மலர்ந்த 'ஷீபாலிகா' வாடுகிருள், ஏங்குகிருள். உள்ளம் கரைகிறது, காதலால்!

''காதல் கிள்ளுக் கீரை அல்ல. அதைச் சாதாரண ஜலத்தால் வளர்த்துவிடமுடியாது. உன்கண்ணீரைக் கொட்டிக்கொட்டி வளர்க்க வேண்டும். உனது, சதை, எலும்பு, இரத்தத்தின் உரத்தின்மீதுதான்

அதன் தெய்வீகமுனை தோன்றும். இருதய அன்பின் எருவிலிருந்து தான் அது செடியாகும்! அந்தப் பரஸ்பர ஆத்ம சம்மேளனத்தின் மீது தான் அது விருக்ஷமாகமாறும்.

"காதல் சுலபத்தில் கிடைக்கும் கடைச் சரக்கு அல்ல. மேனியின் மோகன அழகுப்பெட்டியில் மாத்திரம் அதை அடக்கம் செய்துவிட முடியாது. தெய்வீகக் காதலின் போக்கு அக்கினிப் பிரவேசம் போல. அதில் ஸ்நானம் செய்து பரிசுத்தமாக வேண்டும் காதலுடன் ஐக்கியமாகும் வஸ்து! மேல் மினுக்குடன், வெறும் உணர்ச்சிப் பேய்பிடித்து வருவதில் தெய்வச்சாயல்கூட கிடையாது. அது தோன்றி மறையும் 'மாய மான்'.

"அன்று பார்வதி-பர்வத ராஜகுமாரி சர்வாலங்காரபூஷிதளாய் வந்தாள். நிஷ்டாரூடராய் அமர்ந்திருந்த நிர்மலனின் காதலை வேண்டினள். பதில் இல்லை. கதறினள். கடாக்ஷம் இல்லை. மனம் குன்றித் தன் மேனியைப் பார்த்தாள். வெறும் அழகின் மினுமினுப்பு தரும் இறுமாப்பு; யாரோ அவள் இருதயத்தில் அறைந்தார்கள்! காதலைப்பற்றி அவள் தெரிந்து கொண்டுவிட்டாள்!

"மறுபடியும் ஈஸ்வரனின் முன் வந்த பார்வதி ராஜகுமாரியாக வரவில்லை, பார்வதியாக விளங்கினள். மாதிரிக்குக் கூட ஓர் ஆபரணமில்லை. புஷ்பங்களால் அஞ்சலிசெய்து அகோராத்திரம் தவம் செய்தாள், மேனி குலைந்தாள்; உள்ளம் உருகிக் கண்ணீரைப் பெருக்கி தவத்தின் மூலம் காதலைக் கேட்டாள். பரமேஸ்வரன் கண் திறந்தான். அவன் அருளொளி அத்தபோதனியை பரமேஸ்வரியாக்கிக்கொண்டது. ஆகையால், தவத்தின் அக்னியில் காதல் உணர்ச்சியைப் புடம்வைக்க வேண்டும்! காதல் என்பது வெறும் கட்டுக்கதை காதல் அல்ல. அக்காதல் வெறும் கற்பனை. உண்மைக்காதல் எல்லோரும் நினைப்பதுபோல சுலபமானதல்ல. அது தவத்தின் பரிசைப் பெற்றாகவேண்டும். அப்பொழுதான் ஆதித்தனுடன்-தெய்வத்தோடு தெய்வமாக உன்னால் கலக்கமுடியும்."

இப்படி யார் சொல்லுகிறார்கள்? இந்தக் குரலோசை வெளியிலிருந்தா வருகிறது? இல்லை. ஷீபாலிகா உணர்ந்தாள், உள்ளே இருந்து

யாரோ பேசுகிறார்கள் என்று. ஆம். அந்தராத்மாவின் குரலோசைக்கு அந்த அணங்கு தலைவணங்கித் தன் தவத்தை அந்திபிடத்திலேயே ஆரம்பித்துவிட்டாள்.

மலையின் உச்சியிலே காதல் உணர்ச்சியின் ஸ்தாயியிலே 'ஸ்ரீமந் நாராயணு' என்ற மந்திர உச்சாடனமுடன் அவள் என்ன செய்கிருள்? கூடையினின்று எடுத்த ஒவ்வொரு புஷ்பத்தினுல் மேல் நோக்கி அர்ச்சனை செய்கிருள்.

மேல் நோக்கித் தாவும் உள்ளத்தைக் காட்டும் அப்புஷ்பங்கள் கீழ்நோக்கி விழுந்தன! அவள் மலர் தூவுவதை நிறுத்தவில்லை. ஆனுல், கூடையில் மலர் இல்லை. அவள் கரங்கள் மாத்திரம் அர்ச்சிக்கும் பாவனையை இழுக்கவில்லை!

இரக்கமற்றவனே ரவி? பரீட்சை செய்கிருனே? யார் கண்டார்கள்? அவன் தன் வேலையைக் கவனித்துக்கொண்டே மேற்கு நோக்கிச் சென்று அஸ்தமிக்க ஆரம்பித்துவிட்டான். ஷீபாலிகா உள்ளம் உடைந்தது. ஆனுல், காதல் ஊக்கம் குறையவில்லை. அவள்காதல் அஸ்தமிக்கவில்லை. ''காதலை வேண்டிக்கரைகின்றேன்'' என்று கதறுகிருள்!

''பற்றுதலால் பயன் உண்டோ?'' என்று கேட்டுக்கொண்டே ஓடிய சூரிய ரதம் அஸ்தமனகிரியில் முழுவதும் மறைந்துவிட்டது. ஒரு வரிக்கு உயிர் கொடுக்கும் பயனிலைபோல ஷீபாலிகாவின் காதல் பயனிலைக் கட்டத்தின் பரீட்சைக்குட்பட்டது!

## செயப்படுபொருள்; பொருள் உண்டா?

உதயம், அஸ்தமனம். அஸ்தமனம், உதயம். அந்தச் சூரியனின் மனம் இன்னும் உஷ்ணமயம்தான்! மாற்றம் இல்லை: ஆனுல், நாட்கள் மாறிமாறி ஓடிவிட்டன. கொடிபோன்ற ஷீபாலிகா எங்கே? இந்த மலை உச்சியில் அவளைக் காணுமே?

அதோ, காற்றுபோலத்தள்ளாடுகிறாள்! புகைப்படலங்களைப் போல சுழல்கிறாள். அந்தோ! உச்சியாயிற்றே? கீழே விழப்போகிறாள் போல்தெரிகிறது!

ஆம்! தவத்தின் ஜ்வாலை அவளைத் தாக்கிவிட்டது! அன்னம் தண்ணீர் ஆகாரமற்ற அந்த உடல் குன்றிக் கரைந்து வருகிறது. ஆ! விழப்போகிறாள்! ஐயோ! விழுந்தேவிட்டாள்.

நாள், மாதங்கள்........ஆயின. மலையடிவாரத்தில் உரமாகிவிட்டது வீபாலிகாவின் இரத்தம், சதை, எலும்பு எல்லாம். ஆனால், அந்த ஆத்மா எங்கே? மற்றொரு சரீரத்தை நாடி ஓடிவிட்டன?

மறு மானிடஜன்மம் பெறவா அது இத்தகைய கடும் தவம் செய்தது? அந்த ஆத்மா எங்கும் போகவில்லை. அங்கேயே தவம்செய்கிறது, இன்னும் செய்கிறது! அத்தவஜ்வாலை சூரியனையும் தாக்கியது! தேவ சக்திகளை எல்லாம்தாக்கியது.

“வீபாலிகா, நீயும் ஜ்வாலையாய்விட்டாய். ஜ்வாலையின் அதிதெய்வமாகிய சூரியனுடன் சூரியனாய்விட்டாய். உனது காதல், குளிர்ச்சி ‘அடையுமாக’ என்று தேவ சக்திகள் அசரீரியாக வந்து சொல்லின! ‘இதில் பொருள் உண்டா?’’ என்று கேட்டுக்கொண்டே நடக்கிறது அடித்துக் கொண்டிருக்கும் காற்று!

“வீபாலிகா, உன் ஆத்மா என்னிடம் ஐக்கியமாகிவிட்டது! “நான் நீ; நீ நான்” என்ற நிலையை ஏற்படுத்திவிட்டாய். ஆகையால். உன் மனம் குளிருமாக! இந்த உலகம் உள்ள அளவும் நான் உள்ள அளவும் நீ இந்த உலகத்தில் குளிர்ச்சியைப் பரப்பும் காதல் விருக்ஷமாகக் காட்சி அளிப்பாயாக! உன்காதல், தவத்தின் நெருப்பால் ஜாஜ்வல்யமடைந்தது! பரிசுத்தக் காதல்! நீ சிந்திய கண்ணீர் அப்பரிசுத்தத்தின் புனர்ஜன்மங்களைப்போல உன் காதல் தருவின் வெண்மை நிறப் பூக்களாகப் புஷ்பிக்குமாக!” என்று சூரியநாராயணன் அனுக்கிரகம் செய்தான்! இது அனுக்கிரகமா? இரக்கமற்றவன்; காதலை மரமாக்கிவிட்டான்; வைரம் பாய்ந்த மரமாக்கிவிட்டான்!

"உதயமாகும் வரையில் என்னால் பொறுக்கமுடியாது. பொழுது புலரும் போதே என் கண்ணீர்ப் பூக்களை உதிர்த்துப் பூஜிப்பேன்" என்றது ஷீபாலிகாவின் ஆத்மா. எழுவாய், பயனிலை இரண்டையும் கட்டிப்பிடிக்கும் செயப்படுபொருள் கட்டத்திற்குக் கதை வந்து விட்டது!

பொழுதுபுலர்கிறது! பூஞ்சோலையில் ஷீபாலிகா விருக்ஷம் தெரிகிறது! அதன் புஷ்பங்கள் எல்லாம் பனிப்படலங்களைப்போல கீழே உதிர்ந்து படர்ந்து கிடக்கின்றன!

பொழுது புலர்ந்துவிட்டது, நாம் செய்த தவத்தின் பயனால். உதயமாகிவிட்டான் பாஸ்கரன், ஷீபாலிகா செய்த காதல் தவத்தால்!

பூபாள இராகத்தை மறந்து, காதலகிதமான முறையில் 'ஆனந்த பைரவி' பாடுகிறதோ இந்தப் பக்ஷிஜாலங்கள்! காம்போதி, கல்யாணி, சங்கராபரணம் எல்லாம் கலந்த இராகமாலிகையின் 'மூர்ச்சை'கள், உலவிவரும் அந்த மாருதத்தில் மிதந்து வருகின்றனவோ என்று ஒரு தோற்றம்!

[குறிப்பு:- "நழுவி விழுவானேன்?" என்னும் கதை 'ஆனந்தவிகடன்' நடத்திய ஒரு சிறு கதைப் போட்டியில் பரிசுபெற்றவைகளில் ஒன்று. மற்ற கதைகள் 'வீரகேசரி' வார இதழில் வெளி வந்தவை. அனுமதி பெற்று இவை பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன].

முற்றிற்று.

விவேகா அச்சகம், 79, -வது பள்ளிவாசல் தெரு, கொழும்பு-2.

எமது அடுத்த வெளியீடு

விரைவில்

வெளி வருகிறது.

# "குங்குமப்பூ"

வடஇந்திய பிரபல எழுத்தாளர்

திரு. குவாஜா அகமது அப்பாஸ்

எழுதிய

சிறுகதைகள்

தமிழாக்கம்

கே. கணேஷ்

* * *

வெளிவந்துவிட்டது

## "பிரேமாஞ்சலி"

உள்ளத்தை அள்ளும் உயர்தர

நவீனம்

லோகநாதன்

எழுதியது.

விலை ரூ 2-4-0 (தபால் செலவு வேறு)

* * *

நல்ல நூல்களுக்கு "நந்தி வெளியீடு"

விவேகா அச்சகம், நா. 79, மோஸ்க் லேன், கொழும்பு 12.